# தமிழரசு

1-3-1992 ரூ. 1




PRIME MINISTER

# இந்த இதழில்...


நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதில், விட்டுக் கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை!
—டில்லியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ... 2

வெற்றிச் செல்வியாம் புரட்சித் தலைவி வாழ்க!
—மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் ... 4

வழிகாட்டிய தெய்வம்
—மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் ... 6

ஒரு புதுயுகம் கண்விழித்த திருநாள்!
—மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு ... 8

மகாமகத் திருவிழா ... 10

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் பாங்காய் விளங்கும் பல்துறைப் பணிகள் ... 17

பக்கவாதம் (மருத்துவம்) ... 19

மீன் காட்சியகம் ... 24

நோயற்ற வாழ்வுக்கு விளையாட்டு! ... 27

நிம்மதியான நிலத்தடி நீர்ப்பாசனம் ... 29

கும்பகோணம் மகாமகத் திருவிழா துயர நிகழ்ச்சி குறித்து அரசின் செய்தி ... 34

தமிழ்நாட்டின் செல்வக் களஞ்சியம் ... 39

ஒருமைப்பாட்டை உணர்த்தும் ஒப்பற்ற பொருட்காட்சி ... 41

தமிழ்நாட்டில் பாய்மர மிதவைப் பலகைப் போட்டி ... 46



# தமிழரசு

மாசித் திங்கள் - 18
மலர்: 22 இதழ்: 17
திருவள்ளுவர் ஆண்டு 2023 1-3-1992


மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்களுடன், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான தமிழக அமைச்சரவை (27.2.'92).



காவிரி நீர்:

# "நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு: விட்டுக் கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை."

## டில்லியில் மாண்புமிகு முதல்வர் உரை

நாம் இங்கு எந்தச் சூழ்நிலையில் கூடிப் பேசுகிறோம் என்பதை நன்கு அறிவோம். இந்தக் கூட்டத்தைக் கூட்டியதில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் வெளிப்படுத்தியுள்ள தீவிரமும் நல்லெண்ணமும் பாராட்டுக்குரியதாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எங்கள் நிலையைத் தெளிவாகச் சொல்லி விட்டோம். காவிரி நதி நீர்ப் பிரச்சினை தொடர்பான நடுவர் மன்றம் ஒரு இடைக்காலத் தீர்ப்பினை அளித்துள்ளது. இதை மத்திய அரசு தனது அரசிதழில் பதிவு செய்துள்ளது. இந்த இடைக் காலத் தீர்ப்பை அமலாக்க கர்நாடக அரசும், மத்திய அரசும் நடவடிக்கை எடுக்கும் என்று நாங்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஜூன் மாத முதல் வாரத்தில் காவிரிப் பாசனப்பகுதியில் விவசாயப் பருவ காலம் துவங்கும் பொழுது இப்பிரச்சினை அதிக முக்கியத்துவத்தைப் பெற்றுவிடும். இடைக்கால உத்தரவினை அமல் படுத்தி, காவிரி நதி நீர்ப் பாசனப் பகுதியில் வாழும் இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கு உதவும் வகையில், மாண்புமிகு பிரதமர் அவர்கள் தலையிட்டுப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். கர்நாடக முதல்வர் அவர்களும் பிரச்சினையைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

நடுவர் மன்றத்தின் இடைக் காலத் தீர்ப்பை மத்திய அரசு தனது அரசிதழில் வெளியிட்டதைத் தொடர்ந்து கர்நாடகாவில் ஏற்பட்ட பெரும் கலவரம் காரணமாக இலட்சக் கணக்கான தமிழர்களின் உயிர்களும் உடைமைகளும், மிகுந்த பாதிப்புக் குள்ளாயின. இரு மாநில உறவையும் இந்தச் சூழ்நிலை பெரிதும் பாதித்து விட்டது. இரு மாநிலங்களுக்கிடையே நட்புறவையும் நல்லெண்ணத்தையும்ஏற்படுத்தத்தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நியாயமான நிவாரணம் அளிக்கக் கோரினோம். சேதத்தின் அளவை அறிந்து பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நிவாரணத் தொகையை வழங்க உச்சநீதிமன்ற நீதிபதியை நியமித்து விசாரிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன்.



## காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து கர்நாடக, கேரள, பாண்டிச்சேரி மற்றும் தமிழ்நாடு முதல்வர்களுடன் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் புதுடெல்லியில் 17.2.1992 அன்று நடத்திய பேச்சுவார்த்தையின் இறுதியில் வெளியிடப்பட்டகூட்டறிக்கை

காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து கர்நாடகம், கேரள, பாண்டிச்சேரி மற்றும் தமிழ்நாடு முதல் வர்களுடன் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் புதுடெல்லியில் 17.2.1992 அன்று பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தையின் முடிவில் 4 முதலமைச்சர்களின் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

கூட்டறிக்கையின் விவரம் வருமாறு:

• காவிரி ஆற்றுப்படுகையில் வசிக்கும் மக்கள் உயர்ந்த பட்ச அளவுக்கு நன்மை பெறும் வகையில் 'நதிநீர் நாட்டின் வளம்' என்ற அடிப்படையில் காவிரிப் பிரச்சினைக்கு யதார்த்தனமான முறையில் தீர்வு காண முதலமைச்சர்கள் ஒப்புக் கொண்டார்கள். இதற்காக அமைதியான, சுமுகமான சூழ்நிலை உருவாக ஒவ்வொருவரும் உதவவேண்டும். அப்போதுதான் கோபதாப உணர்ச்சிகள் பிரச்சினையைச் சிக்கலாக்காமல், இறுதி முடிவைப் பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்ள முடியும்.

• காவிரிப் படுகையில் அண்மையில் நடந்த கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண மற்றும் மறுவாழ்வுத் திட்டங்களைத் துரிதப்படுத்தி முடிக்க முதல்வர்கள் ஒப்புக் கொண்டனர்.

• நடுவர் மன்றத்தின் முன்பாக உள்ள அனைத்து நடவடிக்கைகளும் விரைவில் முடிய உதவி செய்வதென்று சம்பந்தப்பட்ட 4 மாநிலங்களும் ஒத்துக்கொண்டன.

• காவிரிப் படுகையில் வசிக்கும் விவசாயிகள் மற்றும் மக்களின் நலன்கருதி, காவிரி நீரை முறையாகவும் அறிவியல் பூர்வமாகவும் பயன்படுத்த, சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள முதல்வர்கள் சம்மதித்தனர்.

இவ்வாறு கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

பிரதமர் அவர்களும், கர்நாடக முதல்வர் அவர்களும் இந்தச் சூழ்நிலையை நன்கு உணர்ந்து, இவ் விஷயத்தில் அரசியல் சாதுர்யத்தைக் காண்பித்தால், தமிழக மக்களுக்கு நிர்வாகத் திறமை மீது மீண்டும் நம்பிக்கை ஏற்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

எங்களைப் பொறுத்தவரை, கர்நாடக மாநிலத்திற்குத் தமிழர்கள் திரும்பிச் செல்லத் தேவையான சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம். இந்த வகையில் கர்நாடக அதிகாரிகளுக்கு தமிழக அதிகாரிகள் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்கெனவே கேட்டுக் கொண்டுள்ளேன். சுமுக நிலை திரும்ப, முதற் கட்டமான இரு மாநிலங்களுக்கிடையே போக்குவரத்து மீண்டும் சமீபத்தில் துவக்கப்பட்டது.

பிரதமர் அவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு எனக்கு அழைப்பு விடுத்தபோது, அவர் மீது எனக்குள்ள மதிப்பின் காரணமாகவும் பிரச்சினையைப் புரிந்துகொள்ளும் அவரது உணர்வின் காரணமாகவும் அதை நான் ஏற்றுக் கொண்டேன். இந்த வகையில் எனக்குச் சில நிர்ப்பந்தங்கள் இருப்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னையில் அனைத்துக் கட்சித் தலைவர்களைச் சந்தித்தேன். நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்தும் விஷயத்தில் விட்டுக் கொடுக்கும் போக்கு கூடாது என்று அனைவரும் ஒருமனதாக வலியுறுத்தினர்.

அவர்கள் எடுத்த நிலை சரியானது. ஏனெனில், காவிரி நதிநீர் வரலாற்றிலே முதன் முறையாக நாட்டின் உச்ச நீதிமன்றமும், இந்திய அரசும் தமிழகத்தின் நியாயமான காரணத்தை ஏற்றுக் கொண்டுள்ளன அதனால்தான், நாங்கள் நடுவர் மன்றத் தீர்ப்பினை அமலாக்க வேண்டுமென நியாயமாகக்கோருகிறோம். இதை வலியுறுத்தும் அதே சமயம் நடுவர் மன்றத்தின் விசாரணை தொடர்ந்து நடைபெற வேண்டும். இதுமுற்றுப் பெற்றபின் நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை ஏற்கவும் நாங்கள் தயார் என்பதைத் தெளிவாகக் கூறிக்கொள்கிறோம். ஆனால், நடுவர் மன்றத் தீர்ப்பினை அமலாக்குவதில் குறைபாடு இருக்குமானால் அது தமிழக மக்களின் கடுமையான எதிர்ப்புகளுக்கு ஆட்பட வேண்டியிருக்கும். மேலும், நடுவர் மன்றத்தின் செயல்பாடுகளின் மீதும் திறமை மீதும் அவர்களுக்குள்ள நம்பிக்கை போய்விடும்.

பல நூற்றாண்டுகளாகக் காவிரி நதிதான் தமிழக மக்களுக்கு வாழ்க்கைப் பாதையாக அமைந்துள்ளது. அவர்களது வளமான எதிர்காலமும், பொருளாதார முன்னேற்றமும் அவர்களுக்கு வாழ்வளிக்கும் காவிரியோடு பின்னிப்பிணைந்தது.

பல ஆண்டுகளுக்குப் பின் இப்படி, கட்டுப்படுத்தக்கூடிய ஒரு நடுவர்மன்ற உத்தரவு-அது இடைக் காலத் தீர்ப்பாக இருந்தாலும், இப்பொழுது எங்களுக்குக் கிடைத் துள்ளது. இந்த விஷயத்தில் பிரதமர் தமது நல்லெண்ண முயற்சியாகத் தலையிட்டு நடுவர்மன்றத் தீர்ப்பை அமலாக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

**(மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 17.2.92 அன்று புது டெல்லியில், மாண்புமிகு பிரதமர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற காவிரி நதிநீர்ப் பிரச்சினைக் கூட்டத்தில் ஆற்றிய உரை)**

●●



# வெற்றிச் செல்வியாம் புரட்சித்தலைவி வாழ்க!


மாண்புமிகு நிதியமைச்சர்

டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்


**வெ**ற்றிச் செல்வியாக வீறுகொண்டு விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களின் 44-வது பிறந்தநாள் விழா, இவ்வாண்டு, தமிழகம் எங்கணும் மிகச் சீரோடும், சிறப்போடும், பொலிவோடும், வலிவோடும், எழுச்சியோடும் உணர்ச்சியோடும், ஏற்றத்தோடும் எழிலோடும் கொண்டாடப்பட்டிருப்பது பூரிப்பையும், பெருமிதத்தையும் அளிப்பதாகும்.

பிறந்தநாள் விழாவைப் பெருமுயற்சியோடு பொருத்தமான முறைகளில், ஆங்காங்குக் கொண்டாடிய அனைவரும் நீங்காப்பற்றோடும், தணியா ஆர்வத்தோடும், சலியா உழைப்போடும், தளரா உள்ளத்தோடும் கொண்டாடியிருக்கின்றனர்.

பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் நிலைநாட்டப்பட்ட தமிழகப் பொற்கால ஆட்சி, அவர் வீழ்ந்துவிட்ட உடனே வீழ்ந்துவிட்டது என்ற நிலையிலும், அதனை மீண்டும் தூக்கி நிலைநிறுத்தும் பெருமுயற்சிகளில் ஈடுபட்டுத் தம் அறிவுத் திறனாலும், ஆற்றல் திறனாலும், பண்பாட்டுத் திறனாலும், செயலாற்றல் திறனாலும், செய்து முடிக்கும் திறனாலும், தியாகத் திறனாலும், அந்தப் பொற்கால ஆட்சியை மீண்டும் அமைத்த பெருமை அனைத்தும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையே சாரும்.

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழக அரசின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, சென்ற எட்டுத் திங்கள்களாக ஆற்றிவரும் அரும் பெருஞ் செயல்கள் அனைத்தும், அனைவராலும் வாழ்த்தி வரவேற்கப்படுவதோடு, போற்றிப் புகழப்பட்டும் வருகின்றன. மின்மினுக்கும் நட்சத்திரங்களுக்கிடையே, தன்னொளி வீசி உலாவரும் முழுமதி போல், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்திய அரசியல் வானில் திகழ்ந்து வருகிறார்.

புரட்சித் தலைவியின் எதிரிகள் இழி சொற்களையும், பழிச் சொற்களையும், ஏசல்களையும், தூற்றல்களையும், வசைமாரிகளையும், வன்முறைகளையும், தாறுமாறாகவும், தரக்குறைவாகவும், அடுக்கடுக்காகவும் வீசிக்கொண்டே இருந்த போதிலும், அவற்றையெல்லாம் சிறிதளவும் பொருட்படுத்தாமல், பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதைப் போன்று, 'எதையும் தாங்கும் இதயம் உண்டு' என்ற உறுதி கொண்ட நெஞ்சத்தோடு 1991 சூன் பொதுத்தேர்தலில் பெருமளவுக்கு வெற்றியைப் பெற்றார்கள். 234 உறுப்பினர்கள் கொண்ட சட்டமன்றப் பேரவையில், எதிர்க்கட்சியினராகவுள்ள எதிர்க்கட்சியினர் ஏழு பேர்களுக்கு மட்டுமே இடங்கள் கிடைக்க, 227 உறுப்பினர்களைக் கொண்ட கூட்டணி ஆதரவோடு, ஆடாத அசையாத ஆட்சியை ஆணித்தரமான முறையில் அரசோச்சி வருகிறார்.

புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது, தமிழகத்தில் அமைதி நிலவவில்லை. சட்டம்-ஒழுங்கு நிலைகள் சீர்கெட்டுப் போய்க் கிடந்தன. விடுதலைப் புலிகளின் கொலை-கொள்ளை-களவு-கடத்தல் போன்ற வன்முறைச் செயல்கள் தலைவிரித்தாடின. திரு. இராஜீவ் காந்தி அவர்களின் மறைவினால் ஏற்பட்ட துக்கமும், துயரமும் பலருடைய உள்ளங்களையும் வாட்டிவதைத்துக் கொண்டிருந்தன.

தமிழக அரசைப் பொறுத்து ரூ.902கோடிக்குப் பற்றாக்குறை நிலை நிலவி வந்தது. எதிர்க்கட்சிகளின் அத்துமீறிய அரசியல் செயல்களால் மாநிலம் சீர்குலைந்து கிடந்தது.



ஏழை எளிய மக்களின் குடும்பங்களையெல்லாம் வாட்டி வதைத்துக் கொண்டிருந்த மலிவு விலை மதுவை அறவே ஒழித்துக் கட்டினார். அதன் மூலம் ரூ.320 கோடி இழப்பு அரசுக்கு ஏற்பட்டது என்ற நிலையிலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல் பொறுப்புணர்ச்சியோடு, மலிவு விலை மதுக்கடைகளை அறவே அகற்றினார்.

ஆயுதங்கள் ஏந்தி, அலைந்து திரிந்து, கொடிய வன்முறைச் செயல்களில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளின் கொட்டத்தை, ஒழித்துக் கட்டுவதில் புரட்சித் தலைவி அவர்கள் பெரும் வெற்றி பெற்றார்.

வன்முறை விடுதலைப் புலிகளுக்கு உடந்தையாக இருந்து, அவர்களுக்கு உணவு-உடை-உறையுள்-பணம்-ஆயுதம் போன்ற உதவிகளைப் புரிந்து, அடைக்கலம் தந்து கொண்டிருந்தவர்கள் அனைவரும் 'தடா'ச் சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

உள்நாட்டுப் பகுதியிலும், கடற்கரையோரப் பகுதியிலும் புரட்சித் தலைவி அவர்களால் பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையைப் பொறுத்து, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தெளிவான திட்பமான - உறுதியான அணுகுமுறையை மேற்கொண்டு, அந்தப் பிரச்சினையை வெற்றிகரமாக முடிக்க அரும்பாடுபட்டு வருகிறார்.

அவர்கள் முடங்கிக் கிடந்த தெலுங்கு-கங்கைக் குடிநீர்த் திட்டத்தை 1993-க்குள் நிறைவேற்றிச் சென்னை மாநகருக்கு குடிநீர் வசதியைச் செய்து தரப்பெரும்பாடுபட்டு வருகிறார்கள்.

புதிய புதிய தொழிற்சாலைகள் ஏற்பட, ஊக்கத் தொகை அளிப்பதுடன் வசதியை உருவாக்குவது - மின்வசதியைச் செய்வது - விற்பனை வரியில் விலக்கு அளிப்பது-விரைவில் உரிமம் வழங்குவது போன்ற புதிய தொழிற் கொள்கையை அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

சுற்றுலாத்துறை ஒரு தொழிற்றுறையாக வளர்ச்சியுற்று, வளம் பெறுவதற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய புதிய கொள்கை முறைகளை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வகுத்துத் தந்தார்கள்.

தமிழகத்திலுள்ள சிற்றூர்கள்-பேரூர்கள் ஆகியவற்றின் மேம்பாட்டு வளர்ச்சி கருதி, முதல்வர் அவர்கள் ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றுக்கும் ஒரு கோடி ரூபாய் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறார்.

புரட்சித் தலைவி அவர்கள் திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தை மீண்டும் புதுப்பித்தார். புதிய நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தை உருவாக்கினார்.

புரட்சித் தலைவரின் கல்லறையைப் புதுப்பித்துப் பொலிவுடையதாக ஆக்க ஒரு கோடி ரூபாய் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

கோயில்களின் சிற்பக்கலை, கட்டடக்கலை, செப்பு-வெள்ளி- பொன்-கற்சிலைக் கலை ஆகியவற்றைப் பேணிக்காக்க 'கோயில் பராமரிப்புப் பாதுகாப்பு நிதி' பெருமளவில் திரட்டப்பட்டு வருகிறது.

புரட்சித் தலைவருக்குப் பெருமை சேர்க்கச் சட்டமன்ற மண்டபத்தில், அவருடைய திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டது.

மதிய சத்துணவுக் கூடங்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயர் இடப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் 10,000 மருத்துவ நல முகாம்கள் நடத்தத் திட்டம் தீட்டப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஏழை எளிய மக்களுக்கு ரூ.42 கோடி செலவில் ஒரு கோடியே 20 இலட்சம் வேட்டி-சேலைகள் இனாமாக வழங்கப்பட்டன.

இப்படியாகச் சாதனைகள் பலவற்றையும் நிறைவேற்றி, வெற்றிச் செல்வியாக விளங்கிவரும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு காலம் இன்புற்று இனிதே வாழ உளங்கனிந்த வாழ்த்துக்கள் பலவும் உரியவாக!

# வழிகாட்டும் தெய்வம்



மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
## திரு. கே.ஏ. செங்கோட்டையன்

ஆதரவற்று அனாதையாய் நின்ற திராவிடக் குழந்தைக்கு அன்னையாய் வந்துதித்த அருள் வடிவமாம் எங்கள் தங்கத் தலைவிக்குப் பிறந்த நாள் விழா.

காலப் பிரளயத்தால் அணுவளவேனும் அடி பிறழாமல் ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனைகளால் இந்த நாடாள முடியும் என உலகிற்குச் சேதி சொன்ன அறிவுப் பெட்டகமாம் எங்கள் அன்னைக்குப் பிறந்த நாள் விழா.

ஜனநாயகப் பூந்தோட்டத்தை அழித்திட ஆர்ப்பரிக்கும் நச்சரவங்களை, திடமான கொள்கைகளை - வலுவான ஆயுதங்களாய்ப் பயன்படுத்தி, புவியெங்கும் நியாயப் பூக்களின் வசந்தங்களைப் பரவச் செய்த ஒரு யுகப் புரட்சியின் மறுபதிப்பாம் எங்களின் இதய தெய்வத்திற்குப் பிறந்த நாள் விழா.

ஆர்ப்பரிக்கும் அலைகளாய்ச் சோதனைகளும் வேதனைகளும் சூழ்ந்து நின்று அச்சுறுத்திய போதும், பொறுத்திருந்தால் நாங்கள் புல்லாங்குழல்கள் (இனிமையான நாதம்); பொங்கி எழுந்தால் எரிமலைக் கோலங்கள் எனக் காலச் சக்கரத்தின் திசை நோக்கி, தன் வெற்றிப் பயணங்களை முடித்துக் காட்டிய எங்கள் முதல்வருக்குப் பிறந்த நாள் விழா.

கம்யூனிச சித்தாந்தங்களை உலகிற்குப் பரப்பிய சோவியத் மண்ணில், ஒரு விரல் அசைப்பில் உலகமே அழியும் எனச் சூளுரையேற்று அந்த ரஷ்ய பூமியில் காய்ந்து போன ரொட்டித் துண்டுக்காகச் சுட்டுக் கொள்கின்ற சூழ்நிலை.

அது போலவே அனைத்துலகிலும் வீழ்ச்சியுற்ற பொருளாதாரத்தின் நிலை - இந்தியப் பூமியிலும் என்றுமே இல்லாத பணவீக்கம் - பொருளாதார முடை.

காலச் சூறாவளியின் கடுந் தாக்குதல்களால், கன்னித் தமிழர்தம் இல்லங்கள் சூறையாடப்பட்டு விடக் கூடாதே என்ற கவலையால், கண்ணுறங்காத கவனத்தினால், புரட்சிகரமான திட்டங்களினால் இருள் சூழ்ந்த தமிழகத்தில் ஒளியேற்றி அமைதிப் பூங்காவாக மாற்றி தமிழ் மக்களின் நலன்களையும் தமிழ் மண்ணின் பெருமைகளையும் பாதுகாக்க நாளெல்லாம் கண் துஞ்சாது உழைக்கும் எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசியல் பாதையில் அறிவாற்றல் மிக்க நடைமுறைகளையும், மனிதாபிமானமிக்க அணுகுமுறைகளையும் காணலாம். உதாரணத்திற்கு ஒரு சில:

எவ்வளவு பெரிய இலக்கியவாதியாக இருந்தாலும்,அரசியல்வாதியாக இருந்தாலும் பல்வேறு மொழிகளை அறிந்து வைத்துக் கொள்ளலாம், தெரிந்து வைத்துக் கொள்ளலாம். ஆறுமொழிகளில் எளிதாகப் பேச, தெளிவாக எழுத, திறம்பட விவாதிக்கும் ஆற்றல் பெற்ற ஒரே ஒரு ஒப்பற்ற முதலமைச்சர் இந்தியத் திருநாட்டிலேயே நமது முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் என்பதை நாடே வியந்து பாராட்டிக் கொண்டிருக்கிறது.

வன்முறைகளும், அராஜகங்களும் தாண்டவமாடும் இந்திய அரசியலில் பெண்கள் அதிகமாக ஈடுபடுவதில்லை. அப்படியே இருந்தாலும் பொது வாழ்வில் அவர்கள் நிலைத்து நிற்பதில்லை. உத்திரப்பிரதேச முதல்வராக இருந்த சுசேதா கிருபளானி, ஒரிசா முதல்வராக இருந்த நந்தினி சத்பதி ஆகியோர் இவ்வளவு பெரிய சோதனைகளைச் சந்தித்ததுண்டா?

ஒரு மாபெரும் இயக்கத்தின் உயிர் மூச்சாக விளங்கிய தலைவர் மறைந்தார். கழகம் உடைந்தது. ஆட்சி கவிழ்ந்தது. காலமெல்லாம் நம்மை அழிக்க வேண்டும் எனக் கருதிய அரசியல் வல்லூறுகள் நம்மைச் சுற்றி வட்டமிட்டன.

மூன்றாண்டு காலம் எத்தனைச் சோதனைகள்? எத்தனை வேதனைகள்? களத்திலே எதிரிகளின் போர் ஒருபுறம், உடன் இருந்தவர்கள் முதுகில் குத்திய சோதனை மறுபுறம். இந்தியாவில் நமக்கேன் இந்த வம்பு என்று எண்ணியிருந்தால் மனம் சோர்ந்திருந்தால், திராவிட இயக்கத்தின் வரலாறே அழிந்திருக்காதா? கண்ணீரும் செந்நீரும் சிந்தி இலட்சோப இலட்சம் தொண்டர்களால்

வலுவான கழகமெனும் மணி மண்டபம் இடிந்து தரை மட்டமாகி இருக்காதா?

கழக அரசு இருந்த அடிச்சுவடே மறைந்து போயிருக்காதா? 91- ஆம் ஆண்டு இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி அமைந்த நேரம் எப்படிப்பட்ட நேரம். வேங்கடம் முதல் தென் குமரி வரை எங்கு பார்த் தாலும் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம், கள்ளச் சந்தையில் போதைப் பொருட்களை விற்கும் தேச விரோதக் கும்பலின் நடமாட்டம், திருட்டுக் கொள்ளையர்களாய்க் கள்ளத் தோணியின் வழி யாகப் பிழைப்பைத் தேடி வந்தவர்கள் இங்கு இருக்கும் தலைவர்களைப் பட்டியல் போட்டுக் கொலை செய்வோம் என மிரட்டிக் கொண்டிருந்த நேரம்.

தேர்தல் பிரச்சாரத்திற்கென வந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியையே சுட்டுக் கொன்ற வெறியர்கள் உலவிய காலம். உயிரைத் திரணமாக மதித்து கடுமையான நடவடிக்கையால் நாட்டை அமைதிப் பூங்காவாக மாற்றிய பெருமை நம் முதல்வர் அவர்களையே சாரும்.

ஒரு சில தலைவர்கள் மிகப் பெரிய பொறுப் பிற்கு வரும்போது சில சட்ட விதிகளையும் மரபு களையும் கடைப்பிடிப்பதில்லை. ஆட்சி மன்றமும், நீதி மன்றமும் ஒருங்கிணைந்த உறவுடன் இருந்தால் தான் மக்கள் மன்றம் பலன் தர முடியும்.

அந்த வகையில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராகப் பொறுப்பு ஏற்றபின் தலைமை நீதிபதியைச் சந்தித் தும் சட்டமன்றத்தில் முதல்வர் செய்ய வேண்டிய பணியினை முறைப்படுத்தியும் சட்டமன்றத்தில் கொண்டு வரும் வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்தவர்களுக்கு முறையான பதில் அளித்தும் வரையறுக்கப்பட்ட மரபுகளைமுறையாக கடைப்பிடித்தும் வருவது நம் முதல்வர் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

முந்தைய ஆட்சியின்போது, நாட்டைச் சீரழித் துக் கொண்டிருந்த தாய்மார்களின் துன்பத்திற்குக் காரணமான கள்ளச் சாராயத்தை ஒழித்துக் கட்ட முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியதோடு அல்லாமல், ஆண்டாண்டுக் காலமாகத் தீர்க்க முடியாமல் இருந்த காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பை உச்ச நீதி மன்றம் உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து தன் கட்சி ஆளுகின்ற மாநிலமாக இருந்தாலும் உடனடி யாக மத்திய அரசு அரசிதழில் அறிவிக்க வேண்டும் என்று வற்புறுத்தி, மத்திய அரசாக இருந்தாலும் அது செய்ய வேண்டிய கடமையிலிருந்து தப்பிச் செல்ல நினைக்குமேயானால், அதைச் சுட்டிக் காட்டுகின்ற துணிச்சலும் வீரமும் நம் முதல் வரிடம் மட்டுமே உண்டு.

திராவிட இயக்கத்தின் வரலாற்றுத் தலைவர் தந்தை பெரியாரின் நெஞ்சிலே இருந்த முள் அகன்றது என்று மாற்றுக் கட்சியினரும் வியந்து



பாராட்டும் அளவிற்கு அரசுப் பணம் இல்லாமல் திருக்கோவில் நிதியிலிருந்து வேத ஆகமப் பள் ளியை அமைத்து எல்லா ஜாதியினரும் படிக்கலாம்- ஆதி திராவிடர்களும் கோவில் அர்ச்சகராக வரலாம் என்று ஜாதி பேத மற்ற சமதர்மச் சமுதாயம் காண, புதுமைப் புரட்சியை உருவாக் கியது நம் முதல்வர் அல்லவா?

அரசு ஊழியர்கள் இறந்தால் அவரது குடும்பத் திற்கு அறுபதினாயிரம் ரூபாய் தந்ததும் நமது இதய தெய்வம் அல்லவா?

எதிரிகளின் ஏசல் மொழிகளையே தன் வளர்ச்சிக்கு உரமாக்கி, மாற்றிக்கட்ட ஆடையில் லாமல் ஏங்கித் தவித்த ஒரு கோடியே இருபது இலட்சம் ஏழைகளுக்கு வேட்டி, சேலை வழங்கிய கொடைத் தன்மை யாருக்கு உண்டு? பல்வேறு தொழில் அதிபர்களை அழைத்துப் பேசி, புதிய தொழிற் கொள்கையை அறிவித்த பெருமை எவருக்கு உண்டு?

இப்படி ஆட்சி அதிகாரம் அனைத்தையும் மக்கள் நலனையே மையமாக வைத்து, எதிரிகளின் ஏசல் மொழிகளையே தன் வளர்ச்சிக்கு உரமாக்கி யார் எதைச் சொன்னாலும் அதில் நியாயங்களை மட்டுமே செய்து, உழைப்பிற்கு மட்டுமே மதிப்பு அளித்து, உண்மைக்கு மட்டுமே தலை வணங்கி இன்று 44-ஆம் ஆண்டில் தன் வெற்றிக் காலடி யைப் பதிய வைக்கும் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் தியாக வரலாற் றுக்குத் துணை நிற்போம்.

அவர் ஏற்றிருக்கும் சத்திய சோதனையில் வெற்றி பெற எங்களின் இன்னுயிரையும் காணிக் கையாக்குவோம்.

இருண்டு கிடந்த எங்கள் அரசியல் பாதையில் ஒளி ஏற்றி வழி காட்டிய எங்கள் வழிபாட்டிற் குரிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 'எல்லா நலமும் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.'

# புதுயுகம் கண்விழித்த திருநாள்



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்
**திரு. அழகு திருநாவுக்கரசு**

தமிழக வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதி வருகிற புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில் வாழ்பவர்கள் நாம் என்ற வரலாற்று உணர்வு நமக்குள் பெருமிதத்தை ஏற்படுத்துகிறது. 1991-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15-ஆம் தேதி ஐந்தரைக் கோடி தமிழ் மக்கள் எழுதிய தீர்ப்பு அகிலம் இதுவரை அறியாத அற்புதத்தைச் செய்தது. மக்களாட்சி மலர்ந்து மணம் பரப்பும் மணித் திருநாடுகளில், எந்த நாட்டிலும் என்றும் இல்லாத அளவுக்கு மாபெரும் வெற்றியை மக்கள் ஒரு அரசியல் கட்சிக்கு அளித்தது அன்றுதான். அளித்தவர்கள் தமிழக மக்கள்; அளிக்கப்பட்டவர் தமிழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள். அந்தச் சத்திய நிகழ்ச்சிக்குச் சாட்சியாக இருந்தவர்கள் நாம்! இருப்பவர்கள் நாம்!

தேசங்கள் அறியாத இந்தத் திருப்புகழைப் பெற்ற பெருமாட்டியின் 44-ஆம் பிறந்த நன்னாள் பிப்ரவரித் திங்கள் 24- ஆம் நாள்! இந்த நன்னாளில் தேசம் முழுவதும் வாழ்த்துகிறது! தென்னகம் வாழ்த்துகிறது! தமிழகம் வாழ்த்துகிறது! நல்லவர்கள் வாழ்த்துகிறார்கள்! நாவார நாமும் வாழ்த்துகிறோம்! புரட்சித் தலைவியின் பிறந்த நாள் ஒரு புதுயுகம் கண் விழித்த திருநாள்.

தேசிய ஒருமைப்பாட்டில் திண்ணமான நம்பிக்கை வைத்துள்ளவர் புரட்சித் தலைவி. அவரால்தான் தென்கோடி பாரதத்தில் அராஜகம் வீழ்ந்தது; அமைதி எழுந்தது; பாரதத்தாயின் பாதுகாப்புக்குப் புரட்சித் தலைவி அளித்த புதுக்கவசம்தான் இந்த நடவடிக்கை. தேசிய நெஞ்சம் கொண்டோரின் திரு உள்ளங்களில் இந்தச் சாதனைச் சரித்திரம் சத்திய வரிகளில் எழுதப்பட்டிருக்கிறது.

'நல்லவை எங்கே இருந்தாலும் பிரகாசிக்கும். கெட்டவை இமயமலையின் உச்சியில் வைக்கப் பட்டாலும் இருள் கவிழ்ந்து மறைக்கப்படும்' என்றார் புத்தர் பெருமான். புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பேற்று அமர்ந்த நாள் முதல், இன்று அவரின் பிறந்த நாள் வரை நிகழ்த்தப்பட்ட சாதனைகள் ஒளிவீசும் திருமணிகள்.

சாராயத்தை ஒழித்த புரட்சித் தலைவியின் தீராத தீரம் புலவர் பாடும் புகழ் மிக்கது. ஏழைத் தாய்மார்களின் இன்னலைப் போக்க, துணிச்சலோடு நடவடிக்கை எடுத்தவர் புரட்சித் தலைவி அவர்கள். மது உள்ளே சென்றதும் அறிவு வெளியே வந்து விடுகிறது. ஆகவே அறிவார்ந்த ஒரு சமுதாயத்தில் மதுவுக்கு இடமில்லை என்று அவர் பிரகடனப்படுத்தினார். அதற்காக அவர் எடுத்து வரும் முயற்சிகள் நிகழ்காலத்தின் போற்றுதலுக்கும் வருங்காலத்தின் வாழ்த்துதலுக்கும் உரியவை.

காவிரி நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினையில் இம்மியளவும் உரிமையை விட்டுக் கொடுக்காது போராடிப் போராடிப் புதுப்புது வெற்றிகளைப் பெற்று வரும் புரட்சித் தலைவியின் துணிச்சலும், வீரமும் ஒரு புதிய புறநானூற்றுக்குப் பொருளாக அமையத் தக்கவை.

காவிரிப் பிரச்சினையில் கர்நாடக அரசு தவறுக்கு மேல் தவறு செய்தது, தமிழர்களை வஞ்சித்தது ஆனாலும் அன்னை மனம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்துக் கன்னடர்களைப் பாதுகாத்து உண்மையான அமைதிப் பூங்காவை இங்கே உருவாக்கிக் காட்டினார்கள்.

தேர்தல் காலத்து உறுதி மொழிகளுக்கு ஒப்பற்ற மதிப்பளித்து, மக்கள் மன்றத்தில் வைத்த திட்டங்களைச் சட்டமன்றத்தில் செயல்படுத்தும் தனிப்பெருமை புரட்சித் தலைவி அவர்களுக்கே உண்டு.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய தமிழகம் இன்று ஒரு தொழிற் புரட்சிக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது. காரணம் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிற புதிய, எளிய தொழிற் கொள்கைகள்.

துறை தோறும், துறை தோறும் புரட்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தி வரும் புரட்சித் தலைவி அவர்கள் உள்ளாட்சித் துறையில் புரிந்து வரும் சாதனைகள் மிகப் பெரியவை.

கிராமங்களிலுள்ள மக்கள் அனைவரும் அடிப்படை வசதிகளைப் பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் செப்டம்பர் 91 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வருகின்ற செப்டம்பர் 1992-க்குள், தமிழ்நாட்டின் அனைத்து ஒன்றியங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகளும் நிறைவேற்றப்படும்:

1. 50,000 இலவச வீடுகள் ஆதி திராவிடர்களுக்கு.
2. 1,400 கி.மீ. நீளம் தார்ச்சாலை.
3. 2,000 கி.மீ. நீளம் கற்சாலை.
4. 500 புதிய பள்ளிக் கட்டடங்கள்.
5. 500 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுக் கூடங்கள்.
6. ஆதிதிராவிடர்களுக்கு 2,100 இலவச பாசனக் கிணறுகள்.
7. 1,000 சிறுபாசன ஏரிகள் மேம்பாடு.
8. 500 கசிவு நீர்க் குட்டைகள்.
9. 10,000 எக்டேர் நிலத்தில் ரூ.3 கோடி கன்றுகளுடன் சமூகக் காடுகள்.



இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில், மிகவும் அத்தியாவசியமான, குடிநீர் வசதி, சாலை வசதி, தெரு விளக்குகள், ஆகியவற்றிற்கு மிகவும் முக்கியத்துவம் அளித்து நிறைவேற்றப்படவேண்டுமென்று டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தர விட்டுள்ளார்கள்.

தமிழகத்தில் ஒரு குடிநீர் வசதியும் இல்லாத கிராமங்கள் கண்டறியப்பட்டு, அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து உடனடியாகக் குடிநீர் வசீதி செய்யப்பட வேண்டுமென்ற முதல்வர் அவர்களின் ஆணை நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் 1,48,749 குடும்பங்களுக்கு ரூ.46.50 கோடி மானியமாகக் கொடுத்து, சொத்துக்களை உருவாக்கி வங்கிக் கடனும் அளித்து அவர்களது பொருளாதாரத்தை உயர்த்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

கிராமப்புற மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இந்நிதியாண்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமப்புற மகளிர்க்கு 550 குழுக்கள் அமைத்து வருவாய் ஈட்டக் கூடிய தொழில்களில் அவர்களை ஈடுபடுத்தி அவர்களது பொருளாதார நிலையை மேம்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எரிசக்தியைச் சேமிக்கவும், இயற்கையிலிருந்து எரிசக்தியைப் பயன்படுத்தவும் ஏதுவாக, சாண எரிவாய்வு, சூளா போன்ற திட்டங்களும் அமல் படுத்தப்படுகின்றன.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் அவர்கள் ஒரு மகத்தான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். சாதி, மத, இன வேறுபாடற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் ஒரு 'மாதிரிக் குடியிருப்புத்' திட்டத்தை தர்மபுரி மாவட்டம் பர்கூரில் தொடங்கி வைத்துள்ளார்கள். இந்த மாதிரிக் குடியிருப்பில் சாதி சமய வேறுபாடு இல்லாமல், அனைத்துச் சமுதாயத்தினரும் உள்ள 300 வீடுகள் அமைக்கப்படும். இதில், இந்து இஸ்லாமியர் மற்றும் கிறித்துவர்களுக்காக மூன்று ஆலயங்கள் அமைக்கப்படும். மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி, சமுதாயக் கூடம், விளையாட்டு மைதானம், தொடக்கப்பள்ளி, அங்காடிகள், பூங்கா, தாய்சேய் நிலையம் போன்ற அனைத்து வசதிகளும் அமைக்கப்படும். தர்மபுரி மாவட்டம் பர்கூரில் அமையவிருக்கும் இந்த மாதிரிக் குடியிருப்பு 'ஜெயலலிதா நகர்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இது போன்ற மாதிரிக் குடியிருப்பு தமிழ் நாட்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட உள்ளது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி, கிராம மக்களுக்கு நிறைவான - நிலையான நன்மைகளைத் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டிருக்கும் வகையில், ஆய்வுக்குழு, கண்காணிப்புக்குழு போன்றவை அமைக்கப்பட்டிருக்கின்றன. காவல்துறை, பொதுப்பணித் துறை போன்று ஊரக வளர்ச்சித் துறையிலேயும் சிறப்பாகச் செயல் புரியும் அலுவலர்களுக்கு, ஆண்டு தோறும் பரிசு வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

நகராட்சிகளைப் பொறுத்தவரையில் 3 மாநகராட்சிகள், 31 நகராட்சி நகரியங்களில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.54 கோடி செலவில் அடிப்படை வசதிகளும், 28 நகராட்சிகளில் 'ஹட்கோ' நிறுவனத்தின் கடனுதவியுடன், குறைந்த செலவில் கழிப்பிடம் கட்டும் திட்டமும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இலட்சியங்களைச் சிலைகளைப் போல் கல்லில் உருவாக்க வேண்டும் என்பார்கள். அப்படிச் சிலை செதுக்கும் சிற்பியின் சீரிய பொறுமையோடும், சிதறாத கவனத்தோடும், ஒப்பற்ற திறனோடும், உறுதி வாய்ந்த மனத்தோடும் தமிழகத்தை உருவாக்கிவரும் தன்மான முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் 44-ஆம் பிறந்த நாளான இந்தத் திரு நாளில், அவர்களின் தலைமையின் கீழ் ஒப்பற்ற பொற்காலத்தைத் தமிழகத்திற்கு உருவாக்கித் தருவோம் என்று உறுதிகொள்வோமாக!

புரட்சித் தலைவி அவர்கள் -
வாழ்க பல்லாண்டு
வளமார் தமிழ் நாடாண்டு!

# மகாமகத் திருவிழா



மகாமகப் பெருவிழா - பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை, குளத்தில் மலரும் குறிஞ்சி மலர் - பக்திப் பெருவிழா - பரமனருள் திருவிழா - அந்த மகத்தான விழா 1992-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 18-ஆம் நாள் செவ்வாய்க் கிழமை மலர்ந்தது. எங்கே? குடந்தை எனப்படும் கும்பகோணத் திருநகரில்! விழாவின் விழுப்புகழுக்குக் காரணம் இரண்டு. தமிழக அரசே 10 கோடி ரூபாய் செலவில் திட்டமிட்டு விழா ஏற்பாடுகளைச் திறம்படச் செய்திருந்தது. மாண்புமிகு தமிழக முதல்வரின் பிறந்த நட்சத்திரம் மகாமகமாகப் பரிணமித்தது அதன் பயனாய் மக்கள் நீராடும் புனித வேளையில், மகாமகக்குளத்தில் புரட்சித் தலைவி அவர்களும் புனித நீராடியது.

## கும்பகோணம்

குடமூக்கு என்று நாயன்மார்களாலும், திருக்குடந்தை என்று ஆழ்வார்களாலும், கல்யாணபுரம், பாஸ்கரச் சேத்திரம் என்று புராணங்களாலும் புகழப்படும் புண்ணிய நகரம் கும்பகோணம். காவிரி ஒரு பக்கம், அரிசிலாறு மறுபக்கம் நீர் வளம் பெருக்க, 'சீரார் செந்நெல் கவரிவீசும் திருக்குடந்தை' என்று நம்மாழ்வார் பாடிப்பரவுவதுபோல் பல்வளமும் பாங்கோடு படைத்த பழம்பதி; இறை வழிபாட்டுச் சிறப்பாலும், ஈகை மனத்தாலும் அன்பாலும் பண்பாலும் சிறந்த ஆடவரும் பெண்டிரும் வாழ்வதனால் நலத்தால் மிக்கார் குடந்தை என்று நாவாணரால் நற்சான்றிதழ் அளிக்கப்பட்ட நன்னகரம். இது கோயில் மாநகரம். திரும்பும் திசையெல்லாம் தெய்வீக மணம் வீசும் திருக்கோயில்கள். சிவபெருமானுக்கு 12 கோயில்கள், பெருமாளுக்கு 7, பிரம்மாவுக்கும் ஒன்று என்று மூவர்க்கும் கோவில் கண்ட கொள்கைச் சிறப்புடையது குடந்தை. இங்குள்ள கும்பேஸ்வரர் கோயில் புகழ் மிக்கது. வரலாற்றுச் சிறப்புடையது. குடந்தையிலுள்ள கீழ்க்கோட்டம் அப்பரடிகளின் பாடல் பெற்றது.

## மகாமகக்குளம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்று மூவகையிலும் சிறப்புடையது குடமூக்கு என்னும் கும்பகோணம். அதிலுள்ள மகாமகக்குளம், தொல் பழங்காலம் முதல் தீர்த்தங்கள் பல உடையதாய்த் திருப்புகழ் கொண்டது.

பாரதத்தில் நிர்மலமான நீராடல் தலங்கள் நிறையவுண்டு. அவற்றுள் கும்பமேளா நடைபெறும் பிரயாகையும், ஆந்திரத்துப் புஷ்கரணமும், கும்பகோணத்து மகாமகக்குளமும் தனிச்சிறப்புடையவை. அவற்றுள்ளும் முதலிரண்டும் ஓடும் நீர்த் தீர்த்தங்கள். மகாமகக்குளம் மட்டுமே தேங்கிய நீர் நிலை. இறையருள் நிலையாய் நின்று அருள் தரும் குளமே மகாமகக்குளம். இதில் நீராடுவோர் பாவம் அகலும். இது பண்டைய புராணம் முதல், பைந்தமிழ்க் கவிஞன் பாரதி வரை சொல்லும்

செய்தி. கங்கையினும் இது புனித மானது என்பதைக் கங்கையினும் வீசம் அதிகம் என்னும் வாசகம் விளக்குகிறது.

'பூமருவும் கங்கை முதல்
புனிதமாம் பெருந்தீர்த்தம்
மகாமகந்தான் ஆடுதற்கு வந்து
வழிபடுங்கோயில்'

என்று சேக்கிழார் பெருமான் மகாமகச் சிறப்பைப் பாடும் அள வுக்கு இங்குள்ள மகாமகக்குளம் மகிமை வாய்ந்தது.

மகாமக விழா

பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை வருவது மகாமகம். சூரியன் கும்பராசியிலும் (தமிழ் மாசி மாதம்) குரு சந்திரனுடன் சிம்ம ராசியிலும் இருக்கும்போது வரும் மக நட்சத்திர நாள் மகாமகம் ஆகும். அன்று பௌர்ணமி அமைவது இயல்பு. இன்னொரு வானியல் கோட் பாட்டின் வழியும் இதை விளக்க லாம். வியாழன் (குரு) கதிரவனைத் தன் பாதையில் சுற்றிவர எடுத்துக் கொள்ளும் காலம் 11.8618 ஆண்டு. எனவே 12 ஆண்டுக்கு ஒரு முறை மகாமகம் மலர்கிறது.

இருபதாம் நூற்றாண்டில் வந்த மகாமகங்கள் எட்டு. அவை வந்த நாட்கள்.

1. 6.3.1909
2. 22.2.1921
3. 10.3.1933
4. 26.2.1945
5. 25.2.1956
6. 14.2.1968
7. 1.3.1980
8. 18.2.1992

இந்த எட்டு விழாக்களில் திக் கெட்டும் புகழ்படைத்த விழா 18.2.1992.

## விழாக்கோலம்

குடந்தைக்கு வரும் எல்லாச் சாலைகளிலும் சாரிசாரியாக மக்கள் கூட்டம். பார்ப்பவர் விழி களில் பரவசம். வியப்பு! எல்லாச் சாலைகளும் ரோமாபுரியை நோக் கியே செல்கின்றன (All roads lead to Rome) என்பது பழமொழி. எல்லாச் சாலைகளும் கும்பகோணம் நோக் கியே செல்கின்றன என்பது புது மொழி.

சிறப்புப் பேருந்துகள் - சிறப்புப் பேருந்து நிலையங்கள் - சிறப்புப் போக்குவரத்து ஏற்பாடுகள் என்று எங்கும் சிறப்பு மயமாயிருந்தது. கையும் பையுமாகக் காணப்பட்ட மக்களைக் காணும் போதெல்லாம் 'நோக்கு திசையெல்லாம் நாமன்றி வேறில்லை' என்னும் பாரதியின் பாடல் வரியே அனுபவமாயிற்று.

புனித நீராடல்

மகாமக நாளுக்கு முதல்நாளே, கும்பலில் நீராடுவதைத் தவிர்க்க விரும்பியவர்கள் நீராடத் தொடங் கினார்கள். முறைப்படியான புனித நீராடல் விழா 18-ஆம் தேதி கடவுளர் திருவீதி உலாவுடன் தொடங்கியது. மகாமகக்குளத்தில் தீர்த்தவாரிக்கு உற்சவ மூர்த்திகள் எழுந்தருள, மடாதிபதிகளும், பீடாதி பதிகளும், துறவியரும் வருகைதர அன்பர்களின் வெள்ளம் அலை மோத, குறிக்கப்பட்ட புனித வேளை யாகிய 11.45 முதல் 12.30 வரை யுள்ள காலத்தில் புனித நீராடல் தொடங்கியது.

கும்பகோணத்துச் சிவன் கோயில்களிலிருந்து திரு



வீதியுலா வந்து குளக்கரையில் காத்திருந்த 12 உற்சவ மூர்த்திகளிடமிருந்தும் 12 அஸ்திரதேவர்களைக்கையில் ஏந்தியபடி '12' குருக்களும் 11.58 மணிக்கு நீராடினர்.

அதே நேரத்தில் குளத்தின் வடகரையில் இருந்த 16 கால் மண்டபத்தின்கீழ் மடாதிபதிகளும் துறவியரும் புனித நீராடினர்.



## மகாமகக்குளத்தில் மாண்புமிகு முதல்வர்

முற்பகல் 11.25-க்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மக்கள் பெருந்திரளாய்த் திரண்டிருந்த மகாமகக் குளத்துக்கு வந்தார். அவருடன் அமைச்சர் பெருமக்களும் வந்தார்கள். முதல்வர் படித்துறையில் இறங்கியதும், காசி விசுவநாதர் கோயிலைச் சேர்ந்த இராமநாத குருக்கள் பூரண கும்ப மரியாதையுடன் மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்றார். 11.30 மணிக்கு முதல்வர் அவர்களும் திருமதி சசிகலா அவர்களும் வழிபாடு செய்தபின் புனித நீராடல் தொடங்கியது 21 புனித கலசங்களில் வைக்கப்பட்ட தீர்த்த நீரில் முதல்வர் நீராடினார்.

## அஞ்சல்தலை, மலர் வெளியீடு

மகாமகத்தையொட்டி மைய அரசு அஞ்சல்துறை வெளியிடும் முதல்நாள் அஞ்சல் உறையையும், மகாமகச் சிறப்பு அஞ்சல் தலையையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மகாமகத்தையொட்டி வெளியிட்ட 'மகாமகம் - மலர் 1992' என்னும் சிறப்பு மலரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் பெற்றுக் கொண்டார். அந்தச் சிறப்பு மலர், மிகச் சிறந்த முறையில் செய்திப் பேழையாக உருவம் உள்ளடக்கம் இரண்டிலும் உயர்ந்து விளங்கியது.

## 10 இலட்சம் பேருக்கு உணவு

அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் 10 இலட்சம் பேருக்கு உணவு வழங்குவதன் அடையாளமாக, உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.

## முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு

மாண்புமிகு தமிழக முதல்வரின் 44-ஆவது பிறந்த நாளும், பிறந்த நட்சத்திர அடிப்படையில்மகாமகமும் ஒன்றாக வருவதைக் குறிக்கும் வகையில் அவருக்கு, 44 பவுன் தங்கத்தினாலான மகாமகக்குள உருவமைப்பை நினைவுப் பரிசாக மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் வழங்கினார்.

அடுத்து கி.பி. 2004 ஆம் ஆண்டில் 'மகாமகம்' வரும். இந்த நூற்றாண்டின் இறுதி மகாமகத் திருவிழாவாகிய இந்த விழா 18.2.1992 அன்று வரலாற்றுச் சிறப்புமிக்க விழாவாய் நிகழ்ந்தேறியது. மனதில் நிறைந்த மாபெரும் விழாவாய் அது நினைவில் என்றும் நிற்கும்.

இளந்தேவன்.

## நேரில் சென்று ஆறுதல்:

கும்பகோணத்தில் 18.2.1992 அன்று சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரையும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களையும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் உத்தரவின் பேரில், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் நேரில் சென்று பார்த்து ஆறுதல் கூறினார்.



மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சராக நியமிக் கப்பட்டுள்ள திரு. எஸ். நாகூர் மீரான் அவர்களுக்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் பதவிப் பிரமாணமும் ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அமைச்சர் பெருமக்களும் இந்த விழாவில் கலந்து கொண்டனர் (15.2.'92).

# படமும் செய்தியும்



மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள திரு. எஸ்.ரகுபதி அவர்களுக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். மாண்புமிகு முதல்வர் அவர் களும் மற்ற அமைச்சர் பெருமக்களும் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டனர் (27.2.'92).



சென்னை கிறித்துவக் கல்லூரிப் பிரச்சினை தொடர்பான கூட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், தலைமைச் செயலாளரும் அதில் கலந்து கொண்டனர் (26.2.1992).

மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. சரத் பவார் அவர்கள் தமது மனைவியுடன் சென்னை வந்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை இல்லத்தில் சந்தித்து பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தார் (24.2.'92).

கும்பகோணம் மகாமகக் குளத்தில் வைத்து பூஜை செய்யப்பட்ட 20 புனித நீர் வெள்ளிக் கலசங்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமது பிறந்த நாளையொட்டி 20 திருக்கோயில்களுக்குக் காணிக்கையாக வழங்கினார் (24.2.1992).







காவிரி நீர்ப்பிரச்சினை குறித்து, மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் புதுடெல்லியில் கூட்டிய ஆலோசனைக் கூட்டத்தையொட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் சென்னையில்- தலைமைச் செயலகத்தில் நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் (15.2.'92).

# மாநிலக் கணக்காயர் அலுவலகம்
## (கணக்கு மற்றும் பணிவரவு)

# தமிழக அரசு ஊழியர்கள் கவனத்திற்கு

தமிழக அரசின் ஊழியர்களின் பொது வருங்கால வைப்பு நிதியின் 1990-91-ஆம் ஆண்டிற்கான கணக்கு அறிக்கைகள் (GPF அக்கவுண்ட் ஸ்லிப்) அனுப்பப்பட்டு வருகின்றன என்பதையும், அவை 1992-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இறுதிக்குள் உங்களுக்கு அனுப்பப்பட்டுவிடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தக் கணக்கு அறிக்கைகள் 1991-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நீங்கள் பணிபுரிந்த அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

கணக்கு அறிக்கைகள் மிக்க கவனத்துடன் எந்தவிதக் குறைபாடும் இல்லாமல் தயாரிக்கத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. எனினும், தவிர்க்க இயலாத காரணங்களால் குறைகள் காணப்பட்டால், சம்பளப் பட்டியல் விவரங்களுடன் கணக்கு எண்/துறை/அலுவலகம்/ மாவட்டம்/பின்கோடு ஆகிய விவரங்களுடன், தங்கள் அலுவலக அதிகாரிகள் மூலமாக கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

**திரு. என். இராமச்சந்திரன்**
**கணக்கு அலுவலர்**
**எப்.எம். பிரிவு**
**(F.M.I. Section)**
**மாநிலக் கணக்காயர் அலுவலகம்**
**261, அண்ணா சாலை**
**சென்னை-600 018**

என்றும் தங்களுக்காகப் பணிபுரியக் காத்திருக்கிறோம். தங்கள் பொது வருங்கால வைப்பு நிதியின் 'நியமனப்பத்திரம்' (நாமினேஷன்) தாக்கல் செய்தவிட்டீர்களா?

**கணக்கு அலுவலர்.**

 

## திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்:

# பாங்காய் வளரும் பல்துறைப் பணிகள்

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் 1990-91-ஆம் ஆண்டில் 9 சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு ரூ.2.879 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்திருந்தது. மேலும் 1991-92-ஆம் ஆண்டில் 5 சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு ரூ.2.141 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்து உள்ளது. மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் 14 சமுதாயக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

### தொகுப்பு வீடுகள்

1990-91-ஆம் ஆண்டில் 2,135 தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசு ரூ.308.156 இலட்சம் ஒதுக்கீடு செய்த, அரசின் குறியீடான 2,135 தொகுப்பு வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மேலும், நடப்பு ஆண்டு 1991-92-ஆம் ஆண்டிற்குத் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசு ரூ.367.958 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்நிதியிலிருந்து 2,240 தொகுப்பு வீடுகள் கட்ட அரசு குறியீடு நிர்ணயித்துள்ளது. இவற்றில் இதுவரை 625 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,615 வீடுகள் கட்டி முடிக்கப்படவுள்ளன.

### ஊராட்சிக் கட்டடம்

1990-91-ஆம் ஆண்டில் 75 ஊராட்சிக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு ரூ.49.900 இலட்சம் ஒதுக்கீடு செய்திருந்தது. இந்நிதியிலிருந்து 75 ஊராட்சிக் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### சிறு பாலங்கள்

1990-91-ஆம் ஆண்டில் 144 சிறு பாலங்கள் கட்டுவதற்கு அரசு ரூ.17.107 இலட்சம் ஒதுக்கீடு செய்திருந்தது. அரசின் குறியீடான 144 பாலங்களும் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

### ஜீவன்தாரா கிணறுகள்

1990-91-ஆம் ஆண்டில் 72 ஜீவன்தாரா கிணறுகள் வெட்டுவதற்காக அரசு ரூ.18.05 இலட்சம் ஒதுக்கீடு செய்திருந்தது. இதில் 33 கிணறுகள் அமைக்கும் பணிகள் முடிவுற்றன. மீதமுள்ள 39 பணிகள் முடியும் தறுவாயில் உள்ளன.

### தொலைக்காட்சி அறை

கிராமப்புறங்களில் அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ள தொலைக் காட்சிப் பெட்டிகளுக்காக 130 அறைக் கூடங்கள் கட்டுவதற்கு ரூ.11.484 இலட்சம் அரசு ஒதுக்கியிருந்தது. அரசின் குறியீடான 130 தொலைக் காட்சிப் பெட்டிகள் வைக்கும் கூடங்களும் கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. மேலும், நடப்பு ஆண்டிற்கு இப்பணிக்காக அரசு ரூ.8.587 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

### சாண எரிவாயு

1990-91-ஆம் ஆண்டில் 354 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்க அரசு ரூ.13.614 இலட்சம் ஒதுக்கியிருந்தது. இதில் அரசின் குறியீடான 354 சாண எரிவாயுக் கலன்களும் அமைக்கப்பட்டுவிட்டன.

### டிரைசம்

490 நபர்கள் சுயவேலைவாய்ப்புப் பெறும் வகையில் பயிற்சி அளிக்க அரசு ரூ.10.606 இலட்சம் நிதி ஒதுக்கியதில் குறியீட்டையும் மிஞ்சும் அளவில் 495 நபர்களுக்குச் சுயவேலைவாய்ப்புப் பெறும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### கசிவுநீர்க் குட்டை

1990-91-ஆம் ஆண்டில் 31 கசிவுநீர்க் குட்டைகள் அமைக்க அரசு ரூ.46 இலட்சம் நிதி ஒதுக்கியது. அரசின் குறியீடான 31 கசிவுநீர்க் குட்டைகளும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மேலும் நடப்பு ஆண்டிற்கு 21 கசிவுநீர்க் குட்டைகள் அமைக்க ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன.

### சமூகக் காடுகள்

1990-91-ஆம் ஆண்டில் 15-10 இலட்சம் மரக்கன்றுகள் தயார் செய்து விநியோகிக்க அரசு ரூ.43.16 இலட்சம் நிதி ஒதுக்கியதில், அரசின் குறியீடான 15-10 இலட்சம் மரக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டு விட்டன. மேலும் நடப்பு ஆண்டிற்கு 15 இலட்சம் மரக்கன்றுகள் தயார் செய்து விநியோகிக்க ரூ.18.914 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இதில் இதுவரை 11 இலட்சம் மரக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. எஞ்சி உள்ள மரக் கன்றுகள் விநியோகம் செய்யத் தயார் நிலையில் உள்ளன.

- கே.பி. நல்லதம்பி

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்

மாணவர் பக்கம்:

# அறிவுச்சுடர்

## கேள்விகள்

1. இந்தியாவில் உள்ள மலையிலேயே அதிக உயரமான மலை எது?

2. தமிழ்நாட்டில் உள்ள மலையிலேயே அதிக உயரமான மலை எது?

3. லிபியாவின் தலைநகரம் எது?

4. முதலில் இந்தியா அணு வெடிச் சோதனை எங்கு எப்பொழுது நடத்தியது?

5. மலேரியா கிருமியை அழிக்கும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்?

6. உலகிலேயே மிகப் பெரிய சுற்றுப் பிரகாரம் உடைய கோயில் எது?

7. தொலைக்காட்சியைக் கண்டு பிடித்தவர் யார்?

8. நீராவியின் விசையைக் கொண்டு இயந்திரங்களை (Steam Engine) இயக்கலாம் என்று யார் கண்டு பிடித்தார்?

9. அச்சு இயந்திரத்தைக் கண்டு பிடித்தவர் யார்?

10. M.B.B.S. என்ற சுருக்கெழுத்தின் விரிவு என்ன?

11. துளசியின் மருத்துவக் குணம் என்ன?

12. 'கொலம்பஸ்' எந்த நாட்டைச் சேர்ந்த மாலுமி?

## பதில்கள்

1. உத்திரப்பிரதேசத்தில் உள்ள கேதார்நாத் மலை. இதன் உயரம் 11,750 அடி.

2. உதகமண்டலம். இதன் உயரம் 7,500 அடி.

3. திரிபோலி

4. ராஜஸ்தான் பாலைவனத்தில் உள்ள 'போகரான்' மலைத்தொடரில், 18.5.1974 அன்று நடத்தியது.

5. 'ரோனால்ட் ரோஸ்' (Ronald Ross).

6. இராமேசுவரம் கோயில் (தென் இந்தியா).

7. 'ஜான் பெயர்ட்' (John Baird)

8. 'ஜேம்ஸ்வாட்'

9. 'காக்ஸ்டன்'

10. Bachelor of Medicine and Bachelor of Surgery.

11. 'வைரஸ்' எதிர்ப்புத் தன்மை பெற்றது.

12. இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்.

டி. சத்தியநாராயணன்
9-ஆம் வகுப்பு 'ஆ' பிரிவு
சிங்காரம்பிள்ளை மேல்நிலைப்பள்ளி
வில்லிவாக்கம், சென்னை-600 049

# பற்களைப் பாதுகாப்போம்!



'பல் போனால், சொல் போச்சு' என்பார்கள். பற்கள் முக அழகுக்கு மட்டுமல்ல, சொற்களை நன்றாக உச்சரிக்கவும் உதவுகிறது. அதே சமயம் உணவை மென்று சாப்பிடவும் அது இன்றியமையாததாகிறது.

சிறுவயது முதலே பற்களைப் பாதுகாத்து வந்தோமானால், பிறகு பல் வலியாலும் அதனால் உண்டாகும் உடற் கோளாறுகளாலும் தொல்லைப்பட வேண்டியதில்லை.

அண்மையில் சென்னை எழும்பூர் மாநில மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடந்த பல் மருத்துவ முகாமில், பெரும்பாலான மாணவியருக்குப் பல் சொத்தை இருந்ததைப் பார்க்க முடிந்தது.

பல் சொத்தை எப்படி ஏற்படுகிறது?

'சாக்லேட், பிஸ்கட், ஐஸ்கிரீம் போன்ற பண்டங்களைச் சாப்பிடும்போது, அவற்றின் துகள்கள் பற்களிடையே ஒட்டிக் கொள்கின்றன. அதன்மூலம் பல் சொத்தை நோய் ஏற்படுகிறது' என்கிறார் பல் மருத்துவக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன் அவர்கள்.

'பல் ஈறுகளில் இரத்தம் கசிதல், பற்களில் காரை படிதல், வாய்ப்புண், உதடு வெடிப்பு, நாக்கு வெளுத்தல் போன்ற நோய்கள் மாணவ மாணவிகளிடம் காணப்பட்டன' என்றும், அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் குறிப்பிட்டார்-

'வசதியான குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் பல் சொத்தை நோய் ஏற்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் ஏற்கெனவே, மருத்துவச் சோதனை செய்துள்ளனர்.

'கிராமப்புறக் குழந்தைகளிடம் பல் சொத்தை குறைவாக உள்ளது. ஊட்டச் சத்துக் குறைவு காரணமாக, வாய்ப்புண் போன்ற நோய்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாணவர்களிடம் காணப் படுகின்றன.

'காலையிலும், மாலையிலும் பல் துலக்குவதன் மூலமும், கீரைகள், பழங்கள் போன்றவற்றைச் சாப்பிடுவதன் மூலமும் மேற்படி நோய்கள் வராமல் தடுக்க முடியும்.'



டாக்டர் ஞானசுந்தரம் அவர்கள் தலைமையில், 60 பல் மருத்துவர்கள் இந்த முகாமில் பங்கேற்றனர்.

தமிழக அரசுடன் அரிமா சங்கம், இந்தியன் வங்கி, பல் மருத்துவக் கல்லூரி ஆகியவை இணைந்து இந்த முகாமைச் சிறப்புற நடத்தின.

முத்துப் போன்ற பற்களைப் பெற வேண்டுமானால், மருத்துவர்களின் முன்யோசனைப்படி நாம் நடந்து கொள்ள வேண்டும்.

இளம் வயது முதலே பற்களைப் பாதுகாத்து வந்தால், முதிய வயதில், பற்களை இழந்துவிடும் நிலையிலிருந்து நாம் விடுபடலாம் அல்லவா?

மருத்துவம்:

# பக்கவாதம்

## STROKE

ஒருவருடைய ஒரு கை அல்லது ஒரு கால், திடீரென்று பயன்படுத்த முடியாமல் உணர்ச்சி யற்றுப் போய்விடும்; 'ஒரு கை விழுந்துவிட்டது; ஒரு கால் விழுந்துவிட்டது' என்றெல்லாம் இதைக் குறிப்பிடுவார்கள்.

இரண்டு கைகளும், இரண்டு கால்களுமோ- முகத்திலிருந்து கால் வரையிலான முழு உடலின் சரிபாதிப் பாகமோகூட அவ்வாறு இயக்க முடியாதபடி மிகக் கொடூரமாகப் பாதிக்கப்பட்டு சிலரைப் படுக்கையிலேயே கிடக்கும்படி பரிதாப கரமான நிலைக்கு ஆளாக்கிவிடுவதும் உண்டு.

இவ்வாறான நிலைமையையே ஆங்கிலத்தில் STROKE என்றும், தமிழில் பக்கவாதம் என்றோ இழுத்துக் கொண்டுவிட்டது என்றோ பொது வாகக் குறிப்பிடுவது உண்டு. எப்போதாவது - திடீரென்று இரத்தக்குழாய் தொடர்பான பாதிப் பால் ஏற்படக்கூடிய விபத்தே இது.

இதைப்பற்றிப் பூர்வாங்கமாக அறிந்து கொள்ளு வதற்காக, டாக்டர் பி. சிற்றம்பலம், எம்.டி., அவர்களைச் சந்தித்துக் கேட்டோம்; அப்போது நாம் தொடுத்த வினாக்களும், அவர் அளித்த விடைகளும் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன:

- சந்திப்பு: பி.எல்.ஆர்.

**ஸ்ட்ரோக் (Stroke) என்றால் என்ன?**

இதயத்தின் ஒழுங்கான இயக்கத் தில் ஏற்படுகின்ற பாதிப்புக்கூட Stroke என்றுதான் கூறப்படும்; ஆனால், மருத்துவத் துறையில் அந்தச் சொல்லானது, நரம்பு தொடர்பான எதிர்பாராத பாதிப் பைத்தான் குறிப்பிடும். பொதுவாக இதுவே பக்கவாதம் என்று சொல்லப் படுகிறது.

**ஒருவருக்குப் பக்கவாதம் ஏற்படு வதற்கான முக்கியக் காரணங்கள் யாவை?**

மூளையில் - ஆக்ஸிஜன், சர்க் கரை ஆகிய இரண்டும் தொடர்ச்சி யாக இருந்தால்தான் அதன் இயக்கம் செம்மையாக இருக்கும். நமது உடல் உறுப்புகள் எல்லாம் சரியாகச் செயல்படச் செய்யும் முக்கியக் கேந் திரம்தான் மூளை; அங்கிருந்தே நம் எண்சாண் உடம்பிலுள்ள எல்லா நரம்புகளுக்கும் தேவையான கட் டளைகள் உடனுக்குடன் பிறப் பிக்கப்படுகின்றன.

இந்த வேலை ஒழுங்காக நடை பெற இரத்தக் குழாய்களின் மூலம் ஆக்ஸிஜன், சர்க்கரை இரண்டும் இரத்தத்தோடு இரத்தமாகத் தொடர்ச்சி யாக மூளைக்குப் போய்க்கொண்டே இருக்கவேண்டும். ஆக்ஸிஜன் ஒரு வர் மூளைக்குக் குறைந்தது பத்து செகண்டுக்குப் போகாவிட்டால், அவர் சுயநினைவையே இழந்து விடுவார்; ஒருவர் மூளைக்கு அவை மூன்று நிமிடம் போகவில்லையென் றால் எவ்வாறான சிகிச்சையும் பயனின்றிக் கோமா நிலைமைக்கே அந்த நபர் போய்விடுவார்.

மூளையின் வேலைகள் சிறப் பாக அமைய ஆக்ஸிஜன் - சர்க் கரை ஆகியவற்றுடன் கூடிய இரத்த ஓட்டமே முக்கியம் என்றோமல்லவா? இது தடைப்படுகிறபோது மூளை யின் இயக்கம் பாதிக்கப்படும். இதுபோன்ற பாதிப்பேStroke ஆகும்.

**பக்கவாதம் ஒருவருக்கு எப்படி யெல்லாம் ஏற்படக்கூடும்?**

பாதிப்பிற்கு ஆளானோரைக் கணக்கெடுத்துக் கவனித்தோமானால் முக்கால்வாசிப் பேருக்குச் சற்றும் எதிர்பாராமல் திடீரென்று அவ் வாறு வந்திருக்கும்; சிலருக்குச் சிறிது சிறிதாக ஏற்பட்டிருக்கும்.

மூளைக்குச் செல்லுகின்ற இரத்த ஓட்டம் நூறு சதவிகிதம் நின்று போய்விட்டால், உடனே பக்கவாதம் உண்டாகும். இதை Acute Stroke என்கிறோம். சிலபேருக்குச் சிறிது சிறிதாக அவ்வாறான தடை ஏற் பட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக வரும்; இப்படி ஏற்படும் பக்கவாதம் Stroke in Evolution எனப்படும்.

இவ்வகை வாழ்க்கை விபத் தானது பெரும்பாலும் அறுபத்



டாக்டர் பி. சிற்றம்பலம், எம்.டி.,

தைந்து வயதைக் கடந்தவர்களுக்குத் தான் வரும்.

**இளம் வயதினருக்கு வரவே வராதா?**

அப்படிச் சொல்லமுடியாது; ஒருசில நேரங்களில் - இளைஞர்களுக்கும், கைக் குழந்தைகளுக்கும் கூட வரும்.

**பக்கவாதம் என்பது பெரும்பாலும் குறிப்பிட்ட நாடுகளில் - அல்லது குறிப்பிட்ட சீதோஷ்ண நிலையில் உள்ளவர்களுக்குத்தான் வரும் என்று சொல்லப்படுகிறதே சரியா?**

இந்த வியாதிக்கு அப்படியெல்லாம் நாடு-சீதோஷ்ண நிலைப் பாகுபாடெல்லாம் இல்லை. உலகம் முழுவதுமே இந்தவகைப் பாதிப்பு உள்ள மக்களைப் பரவலாக நாம் பார்க்க முடியும். இன்னும் திட்ட வட்டமாகச் சொல்வதென்றால் நோயுற்றுச் சாகின்ற உலக மக்கள் எண்ணிக்கையை நாம் ஒரு 'சர்வே' செய்தோமானால் - மாரடைப்பின் காரணமாக இறப்போர் தொகைக்கு அடுத்ததாகப் புற்றுநோயால் இறப்போர் எண்ணிக்கையும் - அதை அடுத்து மூன்றாவதாக இந்தப் பக்கவாதத்தால், இறப்போர் தொகையும் தான் அதிக அளவில் இருக்கிறது.

**பக்கவாதம் எல்லாவற்றுக்குமே அடிப்படைக் காரணம் ஒன்று தானா?**

இல்லை; இதற்கான காரணங்கள் ஒவ்வொருவருக்கு வேறுபடும்.

மூளைக்கு இரத்தம் கொண்டு போகும் இரத்தக் குழாயில் (Intracerebral Vessel) அடைப்பு ஏற்பட்டு Stroke வருவதுதான் குறிப்பிடத்தக்க முக்கியக் காரணம்.

இதயத்திலிருந்து மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாயிலோ, மகாதமனி (Aorta) போன்ற மற்ற முக்கிய இரத்தக் குழாய்களிலோ எங்காவது அடைப்பு ஏற்பட்டு இரத்தக் குழாய் சிதைந்து போவதால் ஏற்படுகிற பக்கவாதம் Embolus எனப்படும்.

இதயத்தில் இரத்த உறைவு ஏற்பட்டு, இதனால் இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டாலும் பக்கவாதம் ஏற்படும்.

இதயத் துடிப்பு ஒரே மாதிரி 'டக்டக்' என்றில்லாமல், அந்த ஒலியானது நேரத்திற்கு நேரம்



★ பக்கவாதம் ஏற்பட்ட நோயாளி ஒருவருடைய மூளையின் சி.டி. ஸ்கேன் தோற்றம்; அடர்ந்த கறுப்பு நிறமாகக் காணப்படுவது இரத்தம் குறைவாக இருப்பதால் பாதிக்கப் பட்டுள்ள மூளையின் பகுதி (Cerebral Infarct)

வித்தியாசப்பட்டாலோ, இதயத்தில் இரத்தத் தேக்கம் உண்டாகி, மூளை நரம்புகள் பாதிக்கப்பட்டாலோ கூட பக்கவாதம் வரக்கூடும்.

மூளைக்குள் உள்ள இரத்தக் குழாய் பலவீனப்படுவதனாலோ, அல்லது இரத்த அழுத்தம் அதிகரித்தோ மூளையினுள்ளே இரத்தக் கசிவு ஏற்படுவதனாலும் பக்கவாதம் வரும்; Intracerebral Haemorage எனப்படும் இவ்வகைக் கோளாறு, பெரும்பாலும் இரத்தக் கொதிப்பு உள்ளவர்களுக்கே அதிக அளவில் வரும்.

ஏதாவது விபத்தில் சிக்கி, தலையில் பலமாக அடிபடுவதால், தலைக்குள்ளேயே ஒருவருக்கு இரத்தக் கசிவு ஏற்படுமானால், அவரும் பக்கவாத நோய்க்கு ஆளாக நேரிடும். இப்படி ஏற்படுவது Sub Arachnoid Haemorage எனப்படும்.

**இன்ன வயதிற்குமேல்தான் அல்லது இந்த வயதிற்குள்தான் பக்கவாதம் வரும் என்று ஏதாவது வரம்பு இருக்கிறதா?**

அப்படியெல்லாம் ஒன்றும் கிடையாது; எந்த வயதிலும் பக்கவாதம் வரலாம். சிறுவயதிலேயே மூளை இரத்தக் குழாய் அடைப்பு சிலருக்கு ஏற்பட்டு, நீண்டகாலம் வாழ முடியாமல் மாண்டுபோகிறவர்களும் உண்டு.

இரத்தக் குழாய், சிலருக்குச் சிலவகைக் கிருமிகளால் பாதிக்கப்படுவதானாலும் இத்துன்பத்திற்கு ஆளாக நேரிடலாம்.

**பக்கவாதம் ஏற்பட்டால் பெரும்பாலும் கை அல்லது கால்மட்டும் பாதிக்கப்படுகிறதே - அது ஏன்?**

பக்கவாதம் எனப்படுகின்ற 'ஸ்ட்ரோக்'கினால் கையும் காலும் மட்டும்தான் பாதிக்கப்படும் என்பதில்லை; நம் பேசும் சக்தி முதலாக உடலில் உள்ள எல்லா உறுப்புகளுக்குமே பாதிப்பு வருவதுண்டு.

மூளையில், நம் உடலின் ஒவ்வொரு உறுப்புகளின் செயலையும் கட்டுப்படுத்தும் சக்தியுள்ள நரம்புகள் பல இருக்கின்றன. அந்த நரம்புக் கூட்டத்தில் எது பாதிக்கப்படுகிறதோ அதன்படி உடலுறுப்புகளும் பாதிக்கப்படும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் வலது புற உடல் உறுப்புகளைக் கட்டுப்படுத்தக் கூடிய நரம்புகள் மூளையின் இடதுபாதியிலேயே அதிகம் உள்ளன; அதேபோல இடதுபுற உடல் உறுப்புகளைக் கட்டுப்படுத்தக் கூடிய நரம்புகள் மூளையின் வலது பாதியிலேயே இருக்கின்றன.

பேசச் செய்யும் நரம்புகள் இடது கைப் பழக்கமுள்ளவர்களுக்கு மூளையின் வலது பக்கமும், இன்னும் சிலருக்கு மூளையின் இரண்டு பக்கங்களிலும்கூட பிறப்பிலேயே அமைந்துவிடுவதும் உண்டு.



★ பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட மற்றொரு நோயாளியின் சி.டி.ஸ்கேன் படம் இது; இதில் வெள்ளைத் திட்டாகக் காணப்படுவது, இரத்தம் கட்டியாக உறைந்துள்ள பகுதியாகும் (Cerebral Haematoma).

இவைகளையெல்லாம் வைத்துப் பார்த்தால் உங்களுக்கே உங்கள் கேள்விக்கான விடை புரியும். மூளையின் இடதுபாக இரத்தக் குழாய்கள் பாதிக்கப்பட்டு இரத்த ஓட்டம் தடைப்படுமானால் வலது கை, வலது கால் ஆகியவை உணர்வை இழந்துவிடும்; முகத்தில் வலது பாகமும் இழுத்துக் கொள்ளும். பேச்சு வராது.

வலதுபுறம் உள்ள இரத்தக் குழாய்கள் சிதைந்து இரத்த ஓட்டம் பாதிக்கப்படுகிறதென்று வைத்துக் கொள்ளுங்கள்; உடலின் இடது பக்கம் அதேபோன்ற பாதிப்புகள் இருக்கும். ஆனால், பேச்சு வரும். முழு உடலும் இந்தப் பக்கவாத நோயால் பாதிப்படைவது என்பது மிகவும் குறைவு.

**இந்த நோய் கண்டால் சாதாரணக் கோளாறே ஏற்படாதா?**

சின்னச் சின்ன இரத்தக் குழாய்கள் பாதிக்கப்படுகிறபோது சிலபேருக்குக் கை மட்டுமே பாதிக்கப்படும்; சில பேருக்குப் பேச்சு மட்டும் பாதிப்படையும் - அதாவது குரல் ஒலி இருக்குமே தவிர, பேச்சு தெளிவாக வராது; சிலருடைய கண் பார்வை கெட்டுவிடும்; ஒரு சிலருக்கு மறதி அதிகமாகிவிடும்.

சிலபேர் மனக் குழப்பத்திற்கு ஆளாகிவிடுவார்கள்; சிலருக்கு உடலின் பாதிப்பகுதி முழுவதுமே மரத்துப்போனதுபோலிருக்கும்.

**பக்கவாத நோயைக் குணப்படுத்தவே முடியாது போலிருக்கிறதே; உயிருக்கு ஆபத்தான நோயா இது?**

இந்த நோய் காரணமாக ஏற்படும் முக்கால்வாசிப் பாதிப்பைக் குணப்படுத்திவிடும் அளவிற்கு இன்றைய அறிவியல் உலகம் வளர்ச்சி பெற்றிருக்கிறது; ஆனால் எந்த இடத்தில் உள்ள இரத்தக் குழாயில், எவ்வாறான அடைப்பு உண்டாகி இருக்கிறது என்பதைப் பொறுத்தது இது!

நம் உடலில் உள்ள முக்கியமான இரத்தக் குழாய்களில், குறிப்பிட்ட இடத்தில் இரத்தம் உறைந்து அல்லது தேங்கி ஒருவரை மூச்சுவிடும் சக்தியை இழக்கச் செய்தாலோ - அவ்வாறின்றி அவருடைய இதயத்தின் இயக்கத்தைப் பாதித்து விட்டாலோதான் அவரது உயிருக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டுவிடும்.

சிலருக்கு, இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்படும் அந்தக் குறிப்பிட்ட இடத்தைச் சுற்றி நீர்க்கோவை உண்டாகிவிடுவதுண்டு; இது Cerebral Oedema எனப்படும்; இப்படி ஆகிவிட்டாலும் ஆபத்துதான். மீதியுள்ள எல்லாவகைப் பக்கவாதங்களையும் முறைப்படி சிகிச்சையளித்தால் சரிப்படுத்திவிடலாம். குறிப்பாகச் சொல்லுவதென்றால் - 'ஸ்ட்ரோக் உண்டான அறிகுறி தோன்றியதுமே ஒருவர் உடனடியாக மருத்துவரை அணுகினால், அதனால் வரவிருக்கும் ஆபத்துகளிலிருந்து அவரைக் காப்பாற்றிவிடும் வாய்ப்புகள் மருத்துவத்துறையில் அதிகமிருக்கின்றன.



★ இதயத்திலிருந்து மூளைக்குச் செல்லும் இரத்த நாளங்களின் அமைப்பை விளக்கும் படம்.

சரியான சிகிச்சை பெற்றபிறகு, உடல் உறுப்புகளின் இயக்கத்திற்காக மருத்துவர் கற்பிக்கும் சிறப்பு உடல் பயிற்சிகளைத் (Physiotherapy) தவறாமல் அந்த நோயாளி செய்து வந்தாலே போதும்; பக்கவாதத் துன்பத்திலிருந்து ஒருவர் பக்குவமாகத் தப்பிக் குணம் பெற்றுவிடலாம்.

**இந்தப் பக்கவாத நோயால் பாதிக்கப்படும் வாய்ப்பு, எப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் அதிகம் உண்டு?**

அ. பக்கவாதம் வருகிற வாய்ப்பானது, இரத்தக் கொதிப்பு உள்ளவர்களுக்கே அதிகமிருக்கிறது. இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தினால் ஸ்ட்ரோக் உண்டாவதை ஓரளவு தவிர்க்கலாம்.

ஆ. சர்க்கரை வியாதி எனப்படுகிற நீரிழிவு நோய் உள்ளவர்களையும் பக்கவாதம் எளிதில் பற்றும்; இவர்களும் அதைத் தவிர்த்தால் இதையும் தவிர்க்கலாம்.

இ. இதய நோயால் பீடிக்கப்பட்டவர்கள் சரியான இரத்த ஓட்டம் அமையத் தொடர்ந்து மருந்து சாப்பிட்டு வருவார்கள்; அப்படிச் சாப்பிடுவதை அவர்கள் அலட்சியப்படுத்தினால், இதயத்தினுள்ளேயே இரத்தச் சிதறல் ஏற்பட்டு, உறைந்து

போய் அங்கிருந்து மூளைக்கு இரத்தம் கொண்டு செல்லும் இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டு, அதன் காரணமாகப் பக்கவாதம் வரும் வாய்ப்பு உண்டு.

ஈ. இரத்தத்தில் அதிக அளவு கொழுப்புச் சத்து இருந்தாலும், இரத்தம் அதிகக் கடினத்தன்மை உடையதாக இருந்தாலும் ஒருவர் பக்கவாதத்திற்கு ஆளாகக்கூடும்; அவ்வாறான நிலைமையில் உள்ளோர் அதிகக் கொழுப்புச் சத்தைக் (High Cholesterol) குறைத்தாக வேண்டும்.

உ. அதிக அளவில் புகை பிடிப்போருக்கும் பக்கவாதம் வருகிற வாய்ப்புகள் அதிகம் உண்டு.

ஊ. பிரைன் டியூமர் என்கிற மூளைக்கட்டி வளர்ந்தவர்களுக்கு - அதன் காரணமாக இரத்தக் குழாய் அழுத்தப்படுவதாலும் பக்கவாதம் வரலாம்.

எ. ஒற்றைத் தலைவலி உள்ளவர்களுக்கும் இந்நோய் வரக்கூடும்.

ஏ. மூளையிலோ, கழுத்திற்கு மேலோ பெரிய அளவில் அறுவைச் சிகிச்சை செய்யப்படும் நபருக்கும் பக்கவாதம் வரலாம்; கழுத்திற்குக் கீழே செய்யப்படும் அறுவைச் சிகிச்சையால் அவ்வாறான ஆபத்து வருவது மிகமிகக் குறைவாகும்.

**ஆண்-பெண் இருபாலரில் யாருக்குப் பக்கவாதம் வரும் வாய்ப்பு அதிகமிருக்கிறது?**

இந்த நோய் சாதாரணமாக இருபாலருக்குமே வரக்கூடியதுதான்; ஆனால் பெண்களுக்கு வரும் வாய்ப்பு சற்றுக் குறைவு என்று சொல்லலாம்.

கர்ப்பிணிப் பெண்கள் சிலபேருக்கு இரத்த அழுத்தம் அதிகரிக்கக்கூடும் (Eclampsia). இதனால், அவர்களுக்குப் பக்கவாதம் ஏற்படலாம்; பிரசவத்திற்குப் பிறகு இரத்தச் சேதாரம் அல்லது தேக்கம் (Cortical Venous Thrombasis) அதிகமிருந்தாலும் அவ்வாறு வரக்கூடும். இப்படிப்பட்ட நிலைமையில் பக்கவாதத்திற்கு ஆளான பெண்கள் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று ஆலோசனை பெற்று அதன்படி நடந்து கொள்ளத் தவறக்கூடாது.

இன்னொரு முக்கிய விஷயம் - வழக்கத்திற்கு மாறான, அல்லது மூர்க்கத்தனமான உடலுறவு கொள்ளும் நிலைமையில், பால்வினை நோயால் - ஆண்கள் சிலருக்கும் இவ்வாறான பக்கவாதப் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு.

**'ஸ்ட்ரோக்' எனப்படுகிற இந்த பக்கவாத நோய்க்குச் சாதாரணமாக எத்தகைய மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன?**

இதற்கான, பரிசோதனைகள் - சிகிச்சை முறைகள் அதிகமிருக்கின்றன என்றாலும் - குறிப்பிடத்தக்க சிலவற்றை மட்டும் சொல்கிறேன்.

பாதிக்கப்பட்ட நபரை சி.டி.ஸ்கேன் (C T Scan) எடுத்துப் பார்க்கலாம்; அதன் மூலம் - உடலில் இரத்தம் உறைந்திருக்கிறதா, இரத்தக் குழலில் அடைபட்டிருக்கிறதா, அப்படிப் பாதித்த இடத்தைச் சுற்றி நீர் கோத்திருக்கிறதா, குறிப்பாகப் பாதிப்பு எந்த இடத்தில் ஏற்பட்டு இருக்கிறது என்பதையெல்லாம் தெரிந்து கொண்டுவிடலாம்.

எம்.ஆர்.ஐ. டெஸ்ட் (Magnetic Resouance Imaging of Test) என்றொரு பரிசோதனை இருக்கிறது. இரத்தக் குழாய் அடைப்பு மட்டுமன்றி - அதைவிட மிக நுண்ணிய விஷயங்களையும் இந்தப் பரிசோதனையின் மூலம் அறியலாம்.

Cerebral Angiography என்றோர் மருத்துவச் சோதனை உண்டு. இதன் மூலம் இரத்தக் குழாய் வழியாகவே மருந்தைச் செலுத்தி, அது சரியான படி மூளைக்குப் போய்ச் சேருகிறதா என்பது வரை கண்டுபிடித்துக் குணமாக்கலாம்.

Ultrasound Doppler Imaging என்கிற பரிசோதனை மூலம் இரத்தக் குழாயில் எங்கே - எந்த அளவில் அடைப்பு என்று தெரிந்துகொள்ளலாம்.

**பக்கவாத நோயை அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியுமா?**

Carotid Endartectomy என்ற வகை அறுவைச் சிகிச்சையொன்று அயல்நாடுகளில் அண்மைக் காலமாக இதற்காகச் செய்யப்படுகிறது. இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டிருக்கிற இடத்தை மட்டும் வெட்டியெடுத்துவிட்டுச் சேர்த்துச் சரிசெய்துவிடும் சிகிச்சையே இது.

எந்த அளவிற்கு இவ்வகைச் சிகிச்சை பலனளிக்கும் என்பது தெரியவில்லை; இங்கெல்லாம் அந்த முறைச் சிகிச்சை வந்த பிறகுதான் அதுபற்றிச் சரியாகச் சொல்ல முடியும்.

மேனாடுகளில், மாரடைப்பு நோயாளிக்கு 'பைபாஸ்' அறுவைச் சிகிச்சை செய்வது போலப் பக்கவாத நோயாளிக்கும் ஒரு சிகிச்சையளிக்கப்படுகிறது;

EC / IC By pass என்பதே அந்தச் சிகிச்சையாகும். மூளைக்கு வெளியே உள்ள இரத்தக் குழாயை எடுத்து, மூளைக்கு உள்ளே பாதிக்கப்பட்டிருக்கும் இரத்தக் குழாயருகே பொருத்தும் சிகிச்சைதான் இது.

இப்படிப்பட்ட சிகிச்சை முறைகளெல்லாம் நம் நாட்டிற்கு வர இன்னும் சில காலம் ஆகக்கூடும்.

**பக்கவாதம் மூலம் பாதிக்கப்பட்ட உடல் உறுப்புகளைச் சிகிச்சை மூலம் சரிப்படுத்தினால், அவற்றைப் பழைய தெம்புடன் முன் போலவே பயன்படுத்த முடியுமா?**

## தாய்ப்பால் அறிவுக் கூர்மைக்கு உதவுகிறது!

குழந்தைகளுக்குத் தாய்ப்பாலே சிறந்தது என்று மருத்துவர்கள் கூறிவருகின்றனர். குழந்தையின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, கூடுதலான புத்திக் கூர்மைக்கும் அது உதவுகிறது என்று ஒரு சோதனை மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் குழந்தைகளுக்கான உணவு குறித்து டாக்டர் லூகாஸ் என்பவர் ஆய்வு ஒன்றை நடத்தினார். பத்து மாதங்களுக்கு முன்பே பிறந்த 300 குழந்தைகள் குறித்து அவர் ஆய்வுகள் நடத்தினார்.

தாய்ப்பால் மட்டும் குடித்த குழந்தைகள் சோதனைகளில் 103.7 மதிப்பெண்கள் பெற்றன. ஆனால் புட்டிப்பால் மட்டுமே குடித்த குழந்தைகள் 93.1 மதிப்பெண்கள் மட்டுமே பெற்றன. இந்தக் குழந்தைகள் எல்லாம் ஏழரை முதல் எட்டு வயதுக்கு உட்பட்டவை.

# திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் மாதந்தோறும் பல்துறைப்பணி விளக்க முகாம்

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்தி வரும் வளர்ச்சித் திட்டங்களையும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களையும் பொது மக்கள் அறிந்து பயன்பெறும் வண்ணம் கருத்து விளக்கக் கூட்டங்கள் நடந்து வருகின்றன.

இம் மாவட்டத்திலுள்ள செய்தி மக்கள் தொடர்பு, குடும்ப நலம், கூட்டுறவு, வேளாண்மை, தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து, சமூக நலம், சிறுசேமிப்பு, வயது வந்தோர் கல்வி, சமூகநலக் காடுகள், மாசுக் கட்டுப்பாடு, கால்நடைப் பராமரிப்பு ஆகிய மாநில அரசுத் துறைகள் மற்றும் கள விளம்பரம், நேரு இளையோர் மையம் ஆகிய மத்திய அரசுத் துறைகளின் விளம்பர அலுவலர்களை ஒருங்கிணைத்து ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள குக் கிராமங்களில் இந்தக் கருத்து விளக்கக் கூட்டங்கள் கடந்த ஏப்ரல் முதல் இவ்வாண்டு ஜனவரி முடிய நடத்தப்பட்டன.

மாதம் இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 3 நாட்கள் வீதம் மாவட்டத்திலுள்ள அனைத்து விளம்பரத் துறைகளின் மூலமாக தினமும் 7 கிராமங்களில் படக்காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. ஒரே ஒரு கிராமத்தில் மட்டும், அனைத்துத் துறை விளம்பர அலுவலர்களும் கலந்து கொள்ளும் கருத்து விளக்கக் கூட்டம் நடைபெற்று வருகின்றது. இதுவரை 8 பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

கருத்து விளக்கக் கூட்டங்கள் நடைபெறும் இடங்களில், சிறு சேமிப்பு, குடும்பநலம், நூறு சதவிகித எழுத்தறிவு, மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, சுற்றுப் புறத் தூய்மைப் பாதுகாப்பு, பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல் ஆகியவை குறித்த செய்திகளும் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லப் பட்டு, பொதுமக்களிடையே கிராமங்களில் 'விழிப்புணர்வு' உருவாக்கப்பட்டு வருகின்றது. மேலும், அரசு ஆற்றி வரும் பணிகளை, கிராமத்திலுள்ள பொதுமக்கள் குறிப்பாக மகளிர் எளிதில் அறிந்து பயனடையும் முறையில் விளக்கிக் கூறப்பட்டு வருகின்றது.

இம்முகாம்களில், சிறுசேமிப்பு அஞ்சலகக் கணக்குகள் மிக அதிக அளவில் ஆலங்குளம் பகுதியில் சேகரிக்கப்பட்டுள்ளன். அரசின் ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளால் இதுவரை கள்ளச்சாராயம் காய்ச்சியவர்கள் அத்தொழிலை அறவே விட்டொழித்து, ஆலங்குளத்தில் நடைபெற்ற இவ்விளம்பர முகாமின் நிறைவு நாள் விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். வேலு, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் 11 பேர்கள் அறவே இத் தொழிலை விட்டுவிட்டதாகத் தெரிவித்தார்கள். புதிய தொழில் மேற்கொள்ள இவர்களுக்குக் கடன் உதவிகள் உடனடியாக வங்கிகள் மூலம் அளித்திட, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்து உள்ளார்.

அண்மையில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் 'புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம்' பற்றிய விழிப்புணர்வு பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் விளம்பர முகாம்களில் எடுத்துச் சொல்லப் பட்டு வருகின்றன. பொதுமக்கள் பெருமளவில் இம்முகாம்களில் கலந்து கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**துரை. ராஜ்குமார்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்**

முடியும். ஆனால் சிலருக்கு அப்படி நூற்றுக்கு நூறு சதவிகிதம் பயன் படுத்த முடியாமல் போய்விடுவதும் உண்டு.

**பக்கவாதம் வரப்போவதை முன் கூட்டியே அறிய முடியாதா - அது நாளடைவில் தானாகவே குணமாகி விடாதா?**

சிலரால் மட்டும் அதை முன் கூட்டியே அறிய முடியும்.

இரத்த அடைப்பால் உண்டாகிற பக்கவாதம் நாளடைவில் அல்ல, ஒரு சிலருக்கு உடனடியாகக் கூட குணமாகிவிடுவதுண்டு; இப்படி ஆவதை Transient Ischaemic Attack என்று கூறுவார்கள். ஆனால் இதே போல அந்த வகை நோயாளிகள் அனைவருக்குமே சரியாகிவிடும் என்று சொல்ல முடியாது.

ஒரு தடவை ஒருவருக்கு அது போல் உண்டாகி, உடனடியாகக் குணமாகிவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள்; அதன்பிறகு அந்த நபர் 'நலமடைந்துவிட்டோம்' என்று அலட்சியமாக இருந்துவிடக் கூடாது; அப்படி வந்தது, மிக விரைவில் மீண்டும் வரப்போவதற்கான முன் எச்சரிக்கையே என்று எண்ணி - மருத்துவரை அணுகித் தன்னைப் பரிசோதித்துக் கொள்ளவேண்டும் அதுதான் முறை - நல்லதும் கூட.

ஒருவருக்கு மூளையில் அப்படிப் பட்ட பாதிப்பு உண்டாகி, பிறகு சரியாகிவிட்டதென்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே அவர் ஒரு நரம்பியல் நிபுணரை அணுகிப் பரிசோதித்துக் கொள்ளவேண்டும்; அலட்சியம் செய்தால் ஆபத்துதான்.

**வலிப்பு (Fits) என்பதும் பக்கவாதம் (Stroke) என்பதும் ஒன்றுதானா?**

அது வேறு இது வேறு; பக்கவாதம் வந்த ஒருவருக்கு வலிப்பு நோய் வரக்கூடும்; ஆனால் வலிப்பு நோய் கண்டவருக்குப் பக்கவாத நோய் வரும் வாய்ப்பு இல்லை.

சில நேரங்களில் சில மனிதர்களுக்கு உடலின் ஒருபுறம் மட்டும் பயங்கர வலி உண்டாகக்கூடும்; (Focal Fits)எனப்படும் இதன் மூலம் ஒருபுறக் காலிலும் கையிலும் மிகுந்த பலவீனம் ஏற்படும்; ஆனால் இரண்டொரு நாளில் குணமாகிவிடும். இதனால் அவ்வளவு ஆபத்தில்லை. ••




கறுப்பு மாலி
டைகர் பார்ப்
ஷெர்பா டெட்ரா
கௌராமி
சிப்பிலி

இவையெல்லாம் என்ன என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா?

இவை மீனின் திருநாமங்கள்!

ஆம். இந்த வண்ண வண்ண மீன்களை, சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள மீன்காட்சியகத்தில் கண்டு களிக்கலாம்.

பொன் மீனைப் பார்த்திருக்கிறோம். ஆனால், சாதாவால் பொன்மீனைப் பார்த்திருக்கிறோமா? இது சைனாவில் இருந்து கொண்டுவரப்பட்டது. நீர்த் தொட்டியில் இது வளைந்து நெளிந்து செல்லும் அழகே அழகு!

இங்கே 57 மீன் தொட்டிகள் உள்ளன. மின்னொளி பாய்ச்சிய இந்த அழகிய தொட்டிக்குள்ளே அந்த மீன்கள் புரியும் ஜாலங்களை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம்!

டைகர் பார்ப் என்பது ஒரு வகை மீன். சிகப்பு வால் சுரா மற்றொரு வகை. இது ஆப்பிரிக்காவிலிருந்து தருவிக்கப் பட்டது.

கண்ணாடி மீன் உண்மையில் கண்ணாடியே தான். அதன் உடலின் உள்ளே உள்ள முட்கள் அப்படியே தெரிகின்றனவே! இது பர்மாவைச் சேர்ந்தது.

தென் ஆப்பிரிக்க வகையான ஷெர்பா டெட்ரா, எகிப்தைச் சேர்ந்த பொன்னிற சிலாப்பியா, ஜப்பானைச் சேர்ந்த சாதா கெண்டை, தாய்லாந்தைச் சேர்ந்த கறுப்பு மாலி ஆகியவற்றைப் பார்த்து அதிசயிக் கிறோம்.

துணியில், வண்ணம் மாறும் சென்னைத் துணி என்றொரு வகை உண்டு. அதைப் போல வண்ணம் மாறும் மீன் ஒன்று உள்ளது. அதன் பெயர் கோய் கொண்டை.

கோதாவரி நதியிலிருந்து கொண்டு வரப்பட்ட மிர்கால் மற்றும் ரோகு வகைமீன் நம் கண்ணைக் கவர் கிறது. மிர்கால் மீன் சீக்கிரத்தில் வளர்ந்து விடுமாம்!

கறுப்பு மாலி, பிளாக்மூர், மார்பிள் மாலி, வெள்ளை அக்காரா, அல்பினோ மீன் இப்படிப் பார்த்துக் கொண்டே போகிறோம். இறைவன் படைப்பில் எத்தனை அற்புதம் என்று வியக்கிறோம்.

அதோ, அது என்ன? மீன் பெட்டிக் குள் பாம்பு புகுந்து விட்டதா?

ஆம். பாம்பு மாதிரி நீளமாகத் தோற்ற மளிப்பதுதான் விலாங்கு மீன். இது ஐரோப்பாவிலிருந்து கொண்டு வரப் பட்டது.

அதோ! அந்த மீனின் வாலைப் பாருங்கள்! வானத்துச் சந்திரன் மாதிரி இல்லை? இதற்குக் 'கறுப்பு மூன் வால் மாலி' என்று பெயர்.

நகைகள் என்றால் யாருக்குத்தான் ஆசை வராது? அதாவது ஆபரணங்கள் அழகுக்கு அழகூட்டுபவை. அவை கண் ணைப் பறிக்கும் மின்னல் கீற்றுகள்! மீன்களிலும் ஆபரண மீன்கள் இருக் கின்றன. இவை ஆபரணம் போல் அழகாய் இருப்பதால், இதற்கு அப்பெயர் வந்ததோ?

வெள்ளை மாலி, சிகப்பு வால் கத்தி மீன், விரால் இவையும் நம்மைக் கவரும் மீன்களாகும்.

ஆஸ்கார் என்று ஒரு வகை மீன்! இது பொல்லாதது. இதற்கு ஸ்டண்ட் எல்லாம் தெரியும். அதாவது இது, சண்டை போடுவதில் வல்லதாம்! அதனால் இதை மற்ற மீன்களோடு சேர்த்து வைக்காமல் தனியாக வைத்திருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். இது தனிக்காட்டு ராஜா மாதிரி! அவ்வளவு பெரிய நீர்த் தொட்டியில் சுற்றித் திரிந்து கொண்டிருக்கிறது. இந்த ஒரு மீனின் விலை மட்டும் 350 ரூபாயாம்.

கீச்சான் - கடல்வாழ் மீன். இதன்



உடல் வரிவரியாக உள்ளது. பார்க்க அழகுதான். ஆனால், தீனி மட்டும் நிறைய சாப்பிடுமாம்! மீன்களையே பார்த்துக் கொண்டு வந்த நாம், இங்கே பார்ப்பது இந்தியாவைச் சேர்ந்த நீர் ஆமைகளை, தரையில்தான் 'ஆமை வேகம்' என்பார்கள். ஆனால், தண்ணீரிலோ அதிக வேகம்!

'டார்குயின்' என்னும் பச்சை ஆமையைக்கூட இங்கே பார்க்கலாம்.

பர்மா நாட்டுக் 'கௌராமி' மீன் நீந்துகின்ற அழகே அலாதி.

புள்ளி புள்ளியாக உள்ள சிப்பிலி மீனும், வரிவரியாக உள்ள வரி மீனும் எல்லாரையும் கவரும் வகைகளாகும்.

தேவதை தேவலோகத்தில் மட்டும் இல்லை. கீழ்லோகத்திலும் உண்டு. அதாவது கடலுக்கு அடியிலும் உண்டு. ஆம். தேவதை மீன்கள் தாம் அவை. அதிலும் பொன் தேவதை மீன் என்றால் எப்படி இருக்கும் என்று பார்த்துக் கொள்ளுங்களேன்! இதில் கறுப்பு தேவதை மீனும் உண்டு; மார்பின் தேவதை மீனும் உண்டு; கடல் தேவதை மீனும் உண்டு!

மனிதரில் மட்டும் விதவையர் இல்லை. மீன்களிலும் உண்டு. கணவனை இழந்த விதவையர், எளிமையாகக் காட்சியளிப்பது போல், இந்த மீனும் சாதாரணமாகக் காட்சியளிக்கிறது. அதனால், இதற்குப் பெயர் விடோ டெட்ரா (Widow Tetra).

மலேயாவைச் சேர்ந்த நீலகுராமி, பொன் வண்ணக் குராமி, மற்றும் முத்துச் செதிள் பொன் மீன் (செதிள்கள் முத்துப்போல் இருப்பதால்), குமிழ் வடிவக்கண் மீன் (கண்கள் குமிழ் போல இருப்பதால்) ஆகியவை ஆண்டவனின் அற்புதப் படைப்புகள்!

சண்டை போடும் ஆஸ்காரைப் பார்த்தோம். இதோ இந்த மீனுக்குப் பெயர் பேபி ஆஸ்கார். இது சண்டை போடுமா என்பது தெரியாது!

சாக்லெட் மீன் என்பதால், உடனே அதைக் கையில் எடுத்துச் சாப்பிட்டுவிடப் போகிறீர்கள்! தாய்லாந்தைச் சேர்ந்த இந்த மீனுக்கு என்ன பெயர் தெரியுமா? சாக்செலட் மார்பிள் மாலி!

பொன் வண்ணத்தில் புள்ளி புள்ளியாக எழிலுடன் வலம் வருவதுதான் ரோலி பார்ப்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று பேசுகிறோம்.

ஒருமைப்பாடு மலர வழிவகுத்துச் செயல்படுகிறோம்.

'எல்லாரும் ஓரினம். எல்லாரும் ஓர் மக்கள்' என்று எழுதுகிறோம். அதை வாழ்க்கையிலும் கடைப்பிடித்து வருகிறோம்.

இந்த ஒருமைப்பாடு, நீர் வாழ் உயிரினங்களான மீன்கள் உலகத்திலும் உண்டு. இதைச் சித்திரிக்கிறது ஒருமைப்பாட்டுத் தொட்டி.

நீர் நிரம்பிய ஒரு பெரிய கண்ணாடித் தொட்டி! அந்தப் பெட்டியைப் பார்க்கிறோம். ஆங்காங்கே தனித்தனியாக நாம் பார்த்துவந்த மீன்களெல்லாம், இந்தத் தொட்டியில் ஒன்றாக இருக்கின்றன. இதில் கறுப்பும் உண்டு. வெள்ளையும் உண்டு. சிறிதும் உண்டு. பெரிதும் உண்டு. ஆனால், அவை எவ்வித வேறு பாடும் இல்லாமல் ஒன்றாக நீந்துகின்றன. இதில் ஒரு விந்தை என்னவென்றால், சண்டை போடும் அந்த ஆஸ்கார் மீனும் இதில் இருப்பதுதான்!

- பி.வி. கிரி.

## எந்த நாளிலும் பார்க்கலாம்!

மீன் துறையால் இயங்கும் அரசு மீன் காட்சியகம், 1950-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பிரிட்டிஷ் காலத்தில், இந்த இடம் இராணுவத் தளவாடங்களின் இருப்பிடமாக இருந்ததாம்.

1988-89-ஆம் ஆண்டில் இந்தக் காட்சியகத்தைப் பார்வையிட்ட பெரியவர்கள் 2,25,294 பேர். குழந்தைகள் 10,271 பேர் மொத்தம் இந்த மீன் காட்சியகத்தில் 57 நீர்த் தொட்டிகள் உள்ளன. இதில் நன்னீரில் வாழும் மீன் தொட்டிகள் 55. கடல் நீரில் வாழும் மீன் தொட்டிகள் 2.

காலை 8 மணி முதல் மாலை 8 வரை இயங்கும் இந்த மீன் காட்சியகத்திற்கு நுழைவுக் கட்டணம் எவ்வளவு தெரியுமா? ஒரே ஒரு ரூபாய்தான்! இதற்கு விடுமுறையே கிடையாது. எந்த நாளிலும் இங்கே வரலாம்.

நம் நாட்டு மக்கள் மட்டும் அல்ல, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் இது வெகுவாகக் கவர்கிறது. குறிப்பாக, பள்ளிக் குழந்தைகள் இதைப் பார்த்துப் பயன் பெறலாம்.

## அவர்கள் சொன்னார்கள்

- நட்பு என்பது உடன்படிக்கையன்று; கைம்மாறு வேண்டாத ஓர் உறவேயாகும்.

  - அண்ணல் காந்தியடிகள்

- ஒரு நூல் முழுவதையும் வேகமாகப் படிப்பதைவிட, ஒரு பக்கத்தை நன்றாக உணர்ந்து கொள்வது மேலாகும்.

  - மெகாலே

- படிப்பதைப் போல செலவு குறைந்த பொழுது போக்கு வேறில்லை. அதைப்போல் இன்பமளிப்பது வேறில்லை.

  - மான்டெய்ன்

- வருமானம் என்பது உழைத்துப் பணம் கொண்டு வருவது மாத்திரமல்ல, சிக்கனமாய் இருந்து, கையிலுள்ளதைக் கூடுமானவரை செலவழிக்காமல் இருப்பதும் வருமானமாகும்.

  - சிஸரோ.

- உழைப்பால் களைப்படைபவர்களே உண்மையான இன்பம் காண்கிறார்கள்.

  - பெர்னார்ட்ஷா.

# நூல் நயம்

## நீங்களும் பத்திரிகை நிருபராகலாம்

**ஆசிரியர்: மணிமாறன்**

**வெளியீடு:**

குமரன் பதிப்பகம்,
2, முத்துக் கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.

பக்கம்:84 விலை:ரூ.10/-

**நா**ட்டு நடப்புகளை நாளும் நமக்குத் தெரிவிப்பவை பத்திரிகைகளாகும். மக்கள் தொடர்புச் சாதனத்தின் மிக முக்கியமாகக் கருதப்படும் பத்திரிகையில் நிருபர் பணி என்பது மகுடமாக விளங்குவது.

நிருபர் என்பவர்க்கான தகுதிகள், திறமைகள், பணிகள், சாமார்த்தியம், சாதுர்யம் என்பன போன்ற இலக்கணங் களைக் கூறுகிறது இந்நூல். பத்திரிகைத் துறையில் குறிப்பாக நிருபராக விரும்பும் எழுத்தாளருக்கு இந்நூல் பெரிதும் பயன் படும்.

— பி.வி. கிரி.

## மழைமேகம்

**ஆசிரியர்: வாழியூர் வே. இராச வேலன்**

**வெளியீடு:**

பேரரசு பதிப்பகம்,
வாழியூர் அஞ்சல் (வழி)
ஒண்ணுபுரம்-632 315

பக்கம்:100 விலை:ரூ.14/-

**இ**ந்நூலில் எழுவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும், அவர்களது கருத்துரைகளும் இடம் பெற்றுள்ளன.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை, பண்டிதமணி கதிரேசனார், நாமக்கல் வெ. இராமலிங்கனார், சூளாமணி இயற்றிய தோலாமொழித் தேவர், இரட்சணிய யாத்திரிக நூலாசிரியர் கிருட்டிணப்பிள்ளை, கம்பீன் அடிப்பொடி காரைக்குடி சா.கணேசன், தமிழ்த்தென்றல் திரு.வி.க ஆகியோரைப் பற்றிய வாழ்க்கை ஏடுகளைப் புரட்டும் போது, அவர்களது தூய தமிழ்த் தொண்டு, சமுதாயத் தொண்டு முதலான தன் மைகள் நம்மை மகிழ்விக்கின்றன.

சிந்தனையைத் தூண்டும் இந்தக் கட்டுரைகள் மாணவ மணிகளுக்கு மட்டு மன்று, மற்றவர்க்கும் பயன்படும் கற் கண்டுகளாகும்.

-பொ. மறைமலை

## அறிஞர்களின் அறவுரைகள்

**ஆசிரியர்: பெ. வேலுச்சாமி**

**வெளியீடு:**

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
(பி) லிமிடெட்,
சென்னை-600 098.

பக்கம்:66 விலை:ரூ.7/-

**நூ**லை இரு பகுதியாகப் பிரித்த ஆசிரியர் அணிய வேண்டிய அறவுரைகள் என்பதன் கீழ் அகிம்சை, அடக்கம், ஈகை, கருணை, நட்பு, பொறுமை, முயற்சி, வலிமை, வீரம் போன்றவை பற்றிய அறிஞர்களின் அறவுரைகளையும், அகற்ற வேண்டிய அறவுரைகள் என்ற தலைப் பின்கீழ் (அறவுரைகள் எனில், அகற்றப் படுவது எப்படிப் பொருந்தும்? அகற்ற வேண்டியவை பற்றிய அறவுரைகள் என்று தலைப்பிட்டிருந்திருக்க வேண்டும்) அச்சம், செருக்கு, பேராசை, பொறாமை போன்றவை பற்றிய பெரியவர்களின் அறிவுரைகளையும் தொகுத்து வழங்கி யுள்ளார்.

—சுகுமாரன்

## 'எம்மதமும் சம்மதமே'

**ஆசிரியர்: அழகு பழனிச்சாமி**

**வெளியீடு:**

துரை இராமு பதிப்பகம்
6, பிள்ளையார் கோயில் தெரு,
பழைய தாம்பரம், சென்னை-600 045.

பக்கம்:128 விலை:ரூ.15/-

**அ**ழகான தலைப்பைக் கொண்ட இந்நூலில் உள்ள 18 சிறுகதைகளும் சிறுவர்களுக்காக எழுதப்பட்டவைதான். வழக்கமான, மதஒற்றுமை, மன்னிக்கும் மனப்பான்மை, ஒற்றுமையின் உயர்வு, நல்ல நட்பு போன்ற பண்புகளை வலி யுறுத்தி அறிவுரை கூறும் கதைகள்தான் இவை என்றாலும், மாறுபட்ட கதை அமைப்பு, விறுவிறுப்பான நடை ஆகி யவை இந்நூலுக்கு அழகு சேர்க்கின்றன.

ஒவ்வொரு கதையும் சிறுவர்களின் மனத்தில் நிலைத்து நிற்கும் என நம்பலாம்.

## வீடியோ (VCR & VCP) இயக்கமும் பழுதுபார்த்தலும்

**ஆசிரியர்: ஏ.கே. சேஷய்யா**

**வெளியீடு:**

மயிலவன் பதிப்பகம்
17, கங்கையம்மன் கோவில் தெரு,
வடபழனி, சென்னை-26.

பக்கம்:136 விலை:ரூ.14/-

**தொ**லைக்காட்சிப் பெட்டியோடு இணைத்துப் பயன்படுத்தும் வீடியோ கேசட் ரெக்கார்டர் (வி.சி.ஆர்.) வீடியோ கேஸட் பிளேயர் (வி.சி.பி.) ஆகியவை எவ்வாறு செயல்படுகின்றன என்பதை யும், வி.சி.ஆரில் வீடியோ பதிவு செய் யும் முறைகள், இவற்றில் ஏற்படும் பழுதுகளும், அவற்றைச் சரிசெய்யும் முறைகளும் இந்நூலில் விவரமாகச் சொல்லப்பட்டுள்ளன.

தேவையான வரைபடங்களும் இந் நூலில் இருப்பதால், ஆர்வம் உள்ளவர்கள் இந்நூலின் துணையோடு வி.சி.ஆர்., வி.சி.பி. ஆகியவற்றைச் சிறந்த முறை யில், குறைந்த செலவில் பழுதுபார்த்துக் கொள்ள இயலும்.

—என்.கே.சாமி

## 'விண்ணிலிருந்து மண்ணிற்கு'

**ஆசிரியர்: அறந்தை நாராயணன்**

**வெளியீடு:**

நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிட்., 41-பி, சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்:104 விலை:ரூ.10/-

**பு**கழின் உச்சியிலிருந்து சாதாரண நிலைக்கு இறக்கப்பட்ட ஒரு நடிகையின் கதை.

கதாநாயகி சினிமா வாய்ப்புகளை இழந்து, சொந்தத்தில் படம் தயாரிக்கத் தொடங்கி, இரண்டு படங்களிலும் தோல்வியைத் தழுவி, இதன் காரண மாகச் சொத்துக்களையும் தகப்பனையும் இழந்து, துரோகிகள், நண்பர்களிடையே உலவி... இறுதியில் ஊர், ஊராகச் சென்று பயனுள்ள நாடகங்களை நடத்த உறுதி கொள்ளும் 'மக்கள் மேடை' என்னும் குழுவில் தன்னை ஐக்கியப் படுத்திக் கொள்கிறாள்.

'குப்புராஜ்' நல்ல பாத்திரம். வேக மான, சிக்கனமான, கூர்மையான எழுத் தாற்றல் கதையை அற்புதமாகக் கொண்டு செல்கிறது.

## விளாம்பழ ஓடு

**ஆசிரியர்: புதுவை சந்திரஹரி**

**வெளியீடு:**

பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:160 விலை:ரூ.20/-

**ப**லதரப்பட்ட மனிதர்களின் மனோ பாவங்களை விவரிக்கும் சிறுகதைகளின் தொகுப்பு

உணர்ச்சி பூர்வமான கதைகளி டையே மெல்லிய நகைச்சுவை இழைந் தோடும் சிறுகதையும் உண்டு.

தெளிவான நடையும், அப்பட்டமான வார்த்தைப் பிரயோகங்களும் ரசிக்கத் தக்கவை. பாட்டியம்மா, அப்பா, தெருப் பாடகன் போன்ற கதாபாத்திரங்கள் நினைவில் நிற்பவை.

—குமரன்



# நோயற்ற வாழ்வுக்கு விளையாட்டு

'**வா**ழ்க்கை வாழ்வதற்கே!' எனும் முழக்கம் கேட்கிறது. ஆனால், 'எத்தகைய வாழ்க்கை வாழ்வதற்கு?' எனும் வினாவினை எழுப்புவோ மானால், பலர் வளமாக வாழ்வ தற்கேஎனப் பதில் கூறுவர். ஆயினும் நலமாக வாழ்வதே சிறந்த வாழ்க்கை யாகும். எத்துணை வளம் இருந் தாலும், நலம் இல்லையென்றால் என்ன பயன்? நோயுடைய ஒருவன் எவ்வளவு செல்வத்தைப்பெற்றிருந்து தான் என்ன பயன்? எனவே, நலமான வாழ்க்கையை அடிப்படை யாகக் கொண்டு வளமான வாழ்வை அமைத்தால் பயன் கிட்டுமன்றோ?

மனிதன் உடல், உள்ளம், உயிர் எனும் ஆன்மா ஆகிய மூன்றினால் உருவாக்கப்பட்டுள்ளான். உடல் நலம் மனிதனுக்கு முதல் தேவை. அடுத்து மனநலம். மனநிறைவே மனநலமாகும். 'உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்னும் திருமந்திரத்தால் இந்த உண்மையை அறியலாம்.

'கொடிது கொடிது இளமையில் வறுமை' என்பர். வறுமை என்ற சொல், பொருள் வறுமையைக் குறித்து நிற்காமல், உடல் வறுமை, உள்ள வறுமை, எண்ண வறுமை, செயல் வறுமை, நடத்தையில் வறுமை இவற்றையே குறித்து நிற்கிறது. மனிதன் புறச்சூழல்களால் தாக்கப் பட்டு, மனக் கலக்கம் அடையும் பொழுதுதான் மேற்கூறப்பட்ட வறுமைகள் வந்தடைகின்றன.

இத்தகைய கலக்கம் மனத்தைக் கலக்காமல் இருக்க சிந்தனையில், சிரத்தையுடன் செயல்பட வேண் டும். ஒருங்கிணைந்த பண்பட்ட உள்ளம், நேர்மையான ஒழுக்க நெறிகள், ஊக்க உணர்வு, ஒற்றுமை, சுறுசுறுப்பு, தெளிவான நினைவாற் றல் முதலிய பல்வகைப்பட்ட நெறி களுக்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்ள வேண்டும். இத்தகு செய லுக்கு விளையாட்டுப் பெரிதும்பயன் படுகிறது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்ளவேண்டும்.


டாக்டர் டேவிட் ஜி. எபினேசர்
ஒய்.எம்.சி.ஏ.
விளையாட்டு மேனிலைப்பள்ளி
தலைமை ஆசிரியர்
நந்தனம், சென்னை.


'ஓடி விளையாடு பாப்பா' என்று பாரதி கூறியதற்கு முன்பே நமது சிற்றிலக்கியங்கள் விளையாட்டிற் குப் பருவங்களைக் கண்டு மகிழ்ந் தன. சிற்றில், சிறுதேர், சிறுபறை, அம்மானை, கழங்கு, ஊசல் என்று அறிமுகப்படுத்தின. இத்தகு விளை யாட்டுகள் காலத்தின் மாற்றத் தினால் பல்வேறு வடிவில் உருக் கொண்டு வளர்ந்தன. 'ஏறு தழுவு தல்' என்ற வீர விளையாட்டு இல் லற நெறிக்குக் காதல் உணர்வுக்கு வழிகாட்டி நின்றது. ஒழுக்க நெறிக்கு உரம் இட்டது எனலாம்.

இத்தகைய விளையாட்டுகள் இளை ஞர்கள் வாழ்வில் குறிப்பாக, பள்ளி மாணாக்கர்களிடத்துப்பெரிதும் இடம் பெற்று நமது நாட்டைச் சிறப்பிக்க உயர்விக்க வேண்டும் என்ற குறிக் கோளில், தமிழக அரசு 1980-81-ஆம் ஆண்டில் இளைஞர் மற் றும் விளையாட்டுப் பயிற்சித்துறை மூலம் விளையாட்டுப் பள்ளிகளை யும், விளையாட்டு விடுதிகளையும் அமைத்து. இதன் மூலம் மாநிலத் தின் பல்வேறு இடங்களில் பயிலும் மாணவர்களின் விளையாட்டுத் திறனை வெளிக்கொணர்ந்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

குறிப்பாக, கிராமங்களில் பயிலும் மாணவர்கள், மற்றும் பொருளா தாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் இவர்களைத் தேர்ந்தெடுத்து அம் மாணவர்களுக்கு இலவசமாக உணவு, உறையுள் மற்றும் பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட பள்ளிகளில் ஒய்.எம்.சி.ஏ. கல்லூரி விளை யாட்டு மேனிலைப்பள்ளியும் ஒன் றாகும். இப்பள்ளியில் பல்வேறு விளையாட்டுகள் மாணவர்களின் கல்வித்திறன் பாதிக்கா வண்ணம் பயிற்சி அளிக்கப்படுகின்றன.



இப்பள்ளியில் பயின்ற மாண வர்கள் பல்வேறு அரசுத்துறை நிறு வனங்கள், தனியார் துறை நிறு வனங்கள் ஆகியவற்றில் பணிபுரி கின்றனர். குறிப்பாக வங்கிகள், துறைமுகம், இரயில்வே போன்ற துறைகளில் விளையாட்டு வீரர் களாய்த் திகழ்வதோடு நாட்டிற்குப் பெருமைத் தேடித் தந்துள்ளனர். இம் மாணவர்களின் வாழ்க்கை வளம் பெற விளையாட்டே துணை நின்றது என்பதை அறியலாம். தன்னையும் உயர்த்திக் கொண்டு நாட்டின் பெருமையையும் உயர்த்திக் கொடுத்த இம்மாணவர்களின் செயல் போற்றத் தக்கதே.

இளைஞர்கள் மட்டுமன்றி முதிய வர்களும் விளையாட்டில் கவனம் செலுத்தலாம். முதியவர்கள் தங்கள் உடல் வளத்திற்கும், மன வளத்திற் கும் தேகப் பயிற்சிகள் செய்து வருங் கால இளைஞர் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாய்த்திகழலாம்.

'விளையாட்டு வினையாகிவிட் டது' என்ற பழமொழியை நாம் அறிவோம். சில பெற்றோர்கள் தனது பிள்ளை படிப்பில் கவனம் செலுத்தாவிட்டால் 'எப்பொழுதும் விளையாடிக் கொண்டே இருக் கிறான். இவனைச் சற்றுக் கண்டித்து திருத்துங்கள்' என்று ஆசிரியரிடத் தில் புகார் கூறுவதுண்டு. ஆசிரியர் அவனிடம் புதைந்து கிடக்கும் விளை யாட்டுணர்வை வெளிக்கொணர்ந்து நல்ல விளையாட்டு வீரனாக மாற்றி விடுவதும் உண்டு. இதனையே மேலேகூறப்பட்ட பழமொழி நினை வுறுத்துகிறது.

'விளையாட்டு விளையாட்டிற் காகவே' என்ற கொள்கை மாறி, இன்று விளையாட்டு ஒரு தொழி லாக ஏற்றம் பெற்றுள்ளது என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். வேலையில்லாத் திண் டாட்டம் பெருகிவரும் இக்காலச் சூழ்நிலையில் வெறுப்புற்ற இளை ஞர்கள் தங்களுடைய உள்ளத்தைத் தீய வழிகளில் செலுத்திப் பல்வேறு தீய நடத்தைகளுக்கு உட்படுகின்றனர். இவர்களுடைய உள்ளம் பண்பட வேண்டுமானால் விளையாட்டுத் துறையிலே கவனம் செலுத்துதல் வேண்டும். இத்தகு செயலினால் நற்பண்புகள் வளரும்; மனம் ஒரு முகப்படும்; உடல் வலுப்பெறும்; தன்னம்பிக்கை வளரும்; ஒற்றுமை உணர்வு மேலோங்கும்; ஒழுக்கநெறி சிறக்கும். வாழ்வு வளம் பெறும். பாரதி அழைத்த ஒளிபடைத்த கண்களையுடைய இளைஞர்களும், உறுதி கொண்ட நெஞ்சினையுடைய இளைஞர்களும், உரம் கொண்ட தோள்களையுடைய இளைஞர்களும் நாட்டிலே தோன்றி வாழ்வை வளம் பெறச் செய்வர். நமது நாடு விளை யாட்டில் தலைசிறந்து விளங்கும். இளைஞர் சமுதாயம் வீறு கொண்டு எழும். அப்பொழுது புதியதோர் உலகம் அமையும்.

நோயற்ற வாழ்விற்கு விளை யாட்டு அடிப்படையாகின்றது. உடல் நலம் பற்றிய அறிவை ஒவ்வொரு மனிதனுக்கும் விளையாட்டு கற்பிக் கின்றது. உடல் நலம் பெற்றால், உள்ளத்தில் நம்பிக்கை எழும். வாழ்வு வளம் பெறும்!



# நிம்மதியான நிலத்தடி நீர்ப் பாசனம்

உழவுத் தொழிலுக்கு நிலம், நீர், விதை ஆகிய மூன்றும் இன்றியமையாததாகும். இவற்றுள் நீர் மிகவும் அவசியமானது. மொத்த நிலப் பரப்பில், பயிர்ச் சாகுபடி பரப்பு நீர் கிடைக்கக்கூடிய அளவைப் பொறுத்தே அமைவதாகும். வேளாண்மைக்கு நீர் கிடைக்கக்கூடிய அளவைக் கொண்டும், அதன் தன்மையைக் கொண்டும் வேளாண்மையைக் கீழ்வருமாறு பிரிக்கலாம்.

1. ஆற்றுப் பாசனம்
2. ஏரிப் பாசனம்
3. கிணற்றுப் பாசனம்

இம் மூன்றில், கிணற்றுப் பாசனம், நிலத்தடியிலுள்ள நீரை வெளிக் கொணர்ந்து விவசாயம் செய்வது. இம் மூன்று பாசனத்தில் கிணற்றுப் பாசனம் அல்லது நிலத்தடி நீர்ப்பாசனம் மிகச் சிறப்புக்குரிய ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் விவசாயத்திற்குரிய மழைப் பருவங்கள், தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவங்கள். இவற்றில் தென்மேற்குப் பருவமழை ஆண்டொன்றிற்குச் சுமார் 450 மி.மீ. மழையையும், வடகிழக்குப் பருவமழை ஆண்டொன்றுக்குச் சுமார் 750 மி.மீ. மழையையும் கொடுக்கக் கூடியது. சராசரியாக, ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 1,210 மி.மீ. மழையைச் செங்கற்பட்டு- எம்.ஜி.ஆர். மாவட்டம் பெறுகிறது. மிக அதிக மழை வடகிழக்குப் பருவத்தில் கிடைக்கிறது. ஆனால் பருவமழை பலமுறை பொய்த்து விடுவதால் வறட்சியும் - அதிகம் பெய்வதால் கடும் வெள்ளமும் ஏற்பட்டு வேளாண் மக்களுக்கு ஒரு பெரிய புதிராகவே அமைந்து விடுகிறது. ஆதலால் வேளாண் மக்கள் தங்களது வாழ்க்கையையும், விளைச்சலையும் முறைப்படுத்தப் போராட வேண்டியுள்ளது. ஏரியில் நீர் உள்ளபோது விவசாயமும் மற்ற காலங்களில் வேலையற்றும் இருக்க வேண்டியுள்ளது.

அதேபோல ஏரியிலுள்ள நீர் நாற்றங்கால் முதல் அறுவடை முடிய கிடைக்குமா - கிடைக்காதா? என்ற சந்தேகத்திலேயே பயிர் செய்ய வேண்டியுள்ளது. எனவே, விவசாயிகள் தங்களது வருமானத்தை முறைப்படுத்த விவசாயத்தைக் கைவிட்டு நகரத்தை நாட வேண்டியுள்ளது.

இத்தகைய நிலைமையில், மற்ற பாசன வகைகளை ஆராயும்போது, நிலத்தடி நீர்ப்பாசனம் அவர்களுக்குக் கை கொடுக்கிறது. நிலத்தடி நீர்ப்பாசனம் மற்ற பாசனத்தைப் போல் அல்லாது விவசாயிகளுக்குத் தொடர்ந்து நீரைக் கொடுக்க வல்லது. ஒரு திறந்த வெளிக் கிணறோ, ஆழ்துளைக் கிணறோ, அமைத்திட்டால் அதில் கிடைக்கும் நீரை அளவிட்டு அதற்குத் தகுந்தாற்போல் முப்போகமும் பயிர் செய்ய இயலும். ஆனால் ஏரிப்பாசனத்திலும், ஆற்றுப் பாசனத்திலும் ஒரு போகம் பயிர் செய்வதே தற்போது கடினமாக உள்ளது. ஆதலால் பரம்பரை வழிமுறையாக உள்ள பாசனத்திற்கு ஒரு சிறந்த மாறுதல் நிலத்தடி நீர்ப்பாசனம் ஆகும்.

**நிலத்தடி நீர்ப்பாசனமும், ஏரிப்பாசனமும்**

பருவமழை பெய்தால்தான் ஏரியில் நீர் நிரம்பும். ஏரியில் நீர் உள்ளபோதுதான் பாசனப் பகுதியில் பாசனம் செய்ய இயலும். ஏரியில் வண்டல் படிவதாலும், ஏரியின் கரைகள் சரியாகப் பராமரிக்கப் படாததாலும், அதன் கொள்ளளவு குறைகிறது. அதற்கேற்றாற்போல், பாசனப் பகுதியில் பாசனப் பரப்பும் குறைகிறது. மேலும் ஏரியிலிருந்து பாயும் நீர் மதகு மூலம் நிலத்தில் பாய்ந்து, ஒவ்வொரு மடையாகக் கடை மடைக்குச் செல்கிறது. இதனால் நீர் அதிகமாகச் செலவாகிறது. முதல், இடை கழனிகளுக்குத் தேவையான நீர் கிடைத்த பிறகே கடை மடைக்குத் திறந்து விடப்படுகிறது. அதனால், கடை மடையில் நிலமுள்ள விவசாயிகள், மேல் கழனி விவசாயிகளை அனுசரித்துச் சென்றால்தான், விவசாயம் செய்ய ஏதுவாகிறது. மேலுள்ள கழனியில் உரமிட்டால், கீழுள்ள கழனிகளுக்கு நீர் திறந்து விடுவதில்லை. அதனால் பயிர் வாடினாலும் கவலையும் படுவதில்லை. அதனால் விளைச்சல் மிக மிகக் குறைகிறது. ஆயக்கட்டுகளில் ஏதாவது ஒரு மூலையில் பூச்சி தாக்கினாலும், தொடர்ந்து எல்லாப் பாசனப் பரப்பிலும் நோய் பரவி விளைச்சல் குறைவாகிறது.

அதேபோல், வடிகால் வசதிகள் ஏரிப் பாசனத்தில் இல்லாததால், கீழுள்ள கழனிகளுக்கு நீர்வரத்து இருந்துகொண்டே இருப்பதால், பயிர் அழுகுவதற்கு வாய்ப்புகள் உண்டு. ஆனால் மேற்குறிப்பிட்ட அனைத்துக் குறைகளும் நிலத்தடி நீர்ப்பாசன முறையில் இல்லை. நிலத்தடி நீர் ஒரு கிணறு அல்லது ஆழ்துளைக் கிணறு மூலம் கிடைக்கக்கூடிய அளவு மிகத் துல்லியமாகக் கணக்கிட முடியும். கணக்கிட்டுத் தகுந்த பயிர் சுழற்சி மூலம் முப்போகமும் விவசாயம் பார்க்க இயலும். நிலத்தடி நீரின் அளவைத் துல்லியமாகக் கணக்கிட முடிவதால், நாற்றங்கால் முதல் அறுவடை முடிய பயிருக்குத் தேவையான முறையில், தேவையான அளவில், தேவையான நேரத்தில் கிடைக்கப் பெறச் செய்யலாம். மிகச் சரியான அளவே நீர்ப்பாசனம் செய்வதால் வடிகால் வசதிகளே தேவையிராது. எல்லாக் கழனிகளுக்கும், தேவையான நேரத்திலும், பிறரின் தலையீடு இல்லா

**இரா. மு. சக்திவேலு**
**செயற்பொறியாளர்**

**பி.வி. சுப்பிரமணியம்**
**உதவிப் பொறியாளர்**
**வேளாண்மைப் பொறியியல் துறை,**
**சென்னை.**

மலும் தத்தம் வசதிக்கேற்ப பாசனம் செய்ய இயலும். வரப்புச் சண்டை சச்சரவுகளும் நிலத்தடி நீர்ப் பாசனத்தில் அறவே இல்லை.

ஏரிப் பாசனத்தில் முதல், இடை, கடை அனைத்துக் கழனிகளிலும் ஒரே சமயம் நாற்றங்கால் முதல் அறுவடை வரை உரமிடுதல், மருந்தடிப்பது முதல் அனைத்து வேலையும் நடப்பதால் வேலையாட்கள் தட்டுப்பாடு அதிகம். ஆதலால் கூலியும் அதிகம். வேலையாட்கள் தேவையான நேரத்தில் கிடைக்காவிடின் விளைச்சல் பாதிக்கப்படுகிறது. ஆனால் நிலத்தடி நீர்ப் பாசனத்தின் ஒரு விவசாயி தனக்குத் தேவையான நேரத்தில் பயிர் செய்ய முடிவதால் வேலையாட்களைக் குறைந்த கூலிக்கு எளிதாகப் பெற முடியும்.

ஏரிப் பாசனத்தில் நெல், மணிலா பயிர்களைத் தவிர வேறெந்தப் பயிர்களையும் பாசனம் செய்ய இயலாது. ஆனால் நிலத்தடி நீர்ப் பாசனத்தில் நெல், மணிலா, பயிர் வகைகள், பூச்செடிகள், தோட்டப் பயிர்கள், பழவகைகள் மாட்டுத் தீவனப் பயிர்கள் அனைத்தும் பயிர் செய்ய இயலும். ஏரிப் பாசனத்தில் பயிர் சுழற்சி முறையைக் கடைப்பிடிக்க முடியாததால், நிலத்திலுள்ள சத்து ஆண்டுக்கு ஆண்டு குறைந்து கொண்டே செல்லும். அதனால் ஆண்டுதோறும் செயற்கை உரமிடுதல் அவசியமாகிறது. ஆனால் நிலத்தடி நீர்ப் பாசனத்தில் பயிர் சுழற்சி முறையைப் பின்பற்ற இயலும். மேலும், அவுரி, கொளுஞ்சி, டெயின்சா போன்ற பயிர்களையும் ஊடுபயிராகப் பாசனம் செய்ய இயலுவதால் மண்ணின் தன்மைக்கேற்ப உரமிடுதல் போதுமானது. அதனால் நிலத்தின் தரம் தாழ்ந்து விடாமல் பாதுகாக்கப்படுகிறது. பயிர்ச்சுழற்சி முறையைப் பின்பற்றுவதால் விளைச்சல் அதிகமாகிறது.

அதேபோல, கூலி ஆட்கள் குறைந்த இடத்தில் கூட தோட்டப் பயிர்கள் அமைத்து, நிலத்தடி நீர் மூலம் பாசனம் செய்வதால் அதிகக் கூலியாட்கள் தேவையில்லாமல் பாசனம் செய்ய இயலுகிறது.

**நிலத்தடி நீரின் சிறப்பு**

பெரும்பாலும், முந்தைய காலத்தில் மேட்டு நிலமான புன்செய்ப் பகுதியில் மழையை எதிர் நோக்கிப் பாசனம் செய்து வந்தார்கள். ஆதலால் இப்பாசனத்தையே மழை மூலம் பாசனம் பெறும் பரப்பு என்று தனியே பிரித்து விவசாயம் செய்து வந்தனர். மழையின் அளவு, நேரம், காலம் ஆகியவற்றை மனிதனால் நிர்ணயிக்க அல்லது கணக்கிட முடியாததால் புன்செய்ப் பகுதி விவசாயிகள் குறைந்த வருமானமே பெற்று வந்தனர். அவர்களின் வாழ்க்கைத்தரம் மழையை நம்பியிருந்தால், மிகுந்த பிரச்சினைக்குள்ளாகியிருந்தது. அதனால் புன்செய் விவசாயிகள், விவசாயிகள் என்ற பிரிவிலும், கூலியாட்கள் என்று பிரிவிலும் சாராதிருந்தனர். மிகச் சுருக்கமாக விளக்குவோமானால், அவர்கள் பகுதிநேர விவசாயிகள் ஆவார்கள். தங்களது வாழ்க்கைத் தேவைக்கு மழை இல்லாத அல்லது தவறிய நேரத்தில் வேறு ஒரு தொழிலையே நம்பியிருக்க வேண்டியிருந்தது. அதேபோல நன்செய், விவசாயிகள், தங்களிடம் உள்ள புன்செய் நிலங்களில் அதிக வருவாய் இல்லாததனால், புன்செய் நிலங்களைத் தரிசாக விட்டுவிட்டு நன்செய் நிலத்தையே கவனித்து வந்தனர்.

இம்முறையை மாற்ற வேளாண் பொறியாளர்கள் முன்வந்து ஆங்காங்கே ஆழ்துளைக் கிணறு மற்றும் திறந்த வெளிக் கிணறு அமைத்து விவசாயிகளின் தரத்தை நிரந்தரப்படுத்தும் பொறுப்பை மேற்கொண்டனர். அதனருமையை உணர்ந்த விவசாயிகள் தற்போது நன்செய் நிலத்திலும் கிணறு அமைத்து விவசாயத்தில் பெரும் இலாபம் ஈட்டினார்கள். அதை மற்ற தொழில் போலவே முழுநேரத் தொழிலாகச் செய்கின்றனர். ஆழ்துளைக் கிணறு அமைத்ததனால் புன்செய் நில மக்கள் நன்செய் நில விவசாயிகளைவிட அதிக விளைச்சலை ஈட்டி, அதிக இலாபம் பெற்றார்கள். அவர்களின் வாழ்க்கைத் தரம் நன்செய் நில விவசாயிகள் பொறாமை கொள்ளும் வண்ணம் முற்றிலும் மாறுதல் அடைந்தது.

ஒரு சிறந்த உதாரணமாக, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள திருத்தணி வட்டத்திலுள்ள, கொத்தூர் கிராம விவசாயிகளைப் பார்க்கலாம். திருத்தணி வட்டம் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலேயே குறைந்த அளவு மழை பல ஆண்டுகளாகப் பெற்று வருகிறது. சுமார் பத்தாண்டிற்கு முன் கொத்தூர் கிராமத்தில் சுமார் 200 ஏக்கர் நிலத்தில் மானாவாரி பயிர் மட்டுமே செய்துவந்தனர். அதனால், அவர்களது வாழ்க்கை மிகவும் பிரச்சினைக்குரியதாயிருந்தது. அவ்வூரிலுள்ள சில விவசாயிகள் எமது துறையினரை அணுகி திறந்தவெளிக் கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணற்றை அமைத்தனர். நிலத்தடி நீர் கிடைக்கக் கூடிய அளவைப் பொறுத்து



நெல், கடலை, பூச் செடிகளைப் பயிரிட்டு இன்று ஒவ்வொரு விவசாயியும் குறைந்தது சுமார் 5 ஏக்கர் நிலம் வைத்துள்ளார்கள். அவற்றுள் 3 ஏக்கரில் நெல்லும், கடலையும் மாறிமாறிப் பயிரிடுகின்றனர். மீதியுள்ள 2 ஏக்கரில் மல்லி, முல்லை, சம்பங்கி போன்ற பூச்செடிகளைப் பயிரிட்டுள்ளார்கள். பூச்செடிகளிலிருந்து வரும் வருவாயை அன்றாடச் செலவிற்கும், நெல் கடலை போன்ற பயிரினால் வரும் வருவாயை நிலம், வீடு, தோட்டம் போன்ற முதலீட்டிலும் ஈடுபடுத்தி, சுமார் பத்தாண்டில் அவர்களது வாழ்க்கை முறையையே மாற்றிக் கொண்டுள்ளனர். அவ்விவசாயிகளின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, தற்போது கொத்தூர் கிராமமே ஒரு பூஞ்சோலையாகத் திகழ்கிறது.

**சிக்கனப் பாசன முறைகள்**

சிக்கப் பாசன முறை என்பது வேறு எந்தப் பாசன முறையிலும் நினைக்க முடியாதது. ஒரு கிணறு அமைத்து, பயிரின் தேவைக்கேற்ப, நீரின் அளவிற்கேற்ப, சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனம், இரட்டைக் குழாய்ப் பாசனம் போன்ற சிக்கனப் பாசன முறைகளைப் பயன்படுத்த முடிகிறது. அதனால் அதிக விளை நிலத்தில் பயிரிடப்பட்டு அதிக விளைச்சலையையும், பெறமுடிகிறது. ஒரே வகையான பயிரிடப்படும் முறையினையும் மாற்றி, குறைந்த அளவு கூலியாட்களுடன் விவசாயம் செய்ய இயலும். வேளாண்மை ஒரு 'இலாபமில்லாத் தொழில்' என்ற பெயரையையும் மாற்றி, வேளாண்மை ஒரு பெரும் இலாபம் தரும் தொழில் என்ற நம்பிக்கை வளர்ந்து வருவதற்குக் காரணம் நிலத்தடி நீரின் மூலம் செய்யப்படும், பாசனமே ஆகும். எனவேதான் இன்று பெரிய தொழிலதிபர்களும் வேளாண்மையில் பெரிய முதலீடு ஏற்படுத்தி வேளாண்மை செய்ய முன் வந்துள்ளனர்.

இதைத்தவிர விவசாயத்தை ஒட்டியுள்ள இலாபம் தரும் தொழில்களான கோழிப்பண்ணை, மாட்டுப் பண்ணை, மீன் வளர்ப்பு, பட்டுப் பூச்சி வளர்த்தல், காளான் வளர்த்தல் போன்ற தொழில்களையும் மிக நல்ல முறையில் நடத்த இயலும் என்ற நம்பிக்கையினையும் ஊட்டி வருகிறது.



★ சமூக முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் இன்றியமையாத தேவை என்றாலும், அதன் பலன்கள் ஏழையெளிய மக்களுக்குக் கிடைப்பது அவசியம்.

டாக்டர் எம்.ஜி.ஆர்.

**விஞ்ஞானமும் நிலத்தடி நீரும்**

இன்று தரிசு நிலம் வாங்கி, விஞ்ஞானத்தின் உதவியோடு நாளை ஆழ்துளைக் கிணறு அமைத்து, நாளை மறுநாள் நாற்றங்கால் அமைக்க இயலும் என்ற கூற்று மிகையாகாது. அந்த அளவிற்கு நிலத்தடி நீரினால் விவசாயம் விஞ்ஞானத்தோடு பின்னி பிணைந்து வளர்ந்துள்ளது. அதே போல உழுவது முதல் அறுவடை வரை பல சாதனங்கள் விவசாயத்தை இலகுவாக மாற்றும் என்பது தெரிந்த ஒன்றாகும்.

இப்போது நிலத்தடி நீரின் மூலமும், நிலத்தடி நீரை வெளிக் கொணர்ந்து தெளிப்பு நீர்ப்பாசனம், சொட்டு நீர்ப்பாசனம், இரட்டைக் குழாய்ப் பாசனம் போன்ற சிக்கன முறைகளின் மூலம் பாசனம் செய்வதால் விவசாயம் ஒரு முழு இயந்திரமான நிலையை (Complete Automation) அடைந்துள்ளது.

அதாவது, இருந்த இடத்திலிருந்து எல்லாப் பயிருக்கும் தேவையான நீர், ஊட்டச்சத்து, மருந்து ஆகியவற்றைத் தேவையான அளவில், தேவையான நேரத்தில் தேவையான இடத்தில் - அதாவது வேரின் அருகில் கொடுக்க இயலும். அதனால் பயிர்ப் பாசனத்தைப் பொறுத்த வரையில் ஒரு இயந்திரம் முழுவதுமாகப் பார்த்துக் கொள்ளக் கூடும் என்ற நிலைக்கு இன்று விஞ்ஞானம், நிலத்தடி நீர் அமைத்துத் தரும் வாய்ப்புகளினால் வளர்ந்துள்ளது.

இதைத் தவிர நிலத்தடி நீரை வெளிக் கொணர மின்சக்தி, எரி சக்தி, காற்றாலை, சூரிய சக்தி, ஆகிய சக்திகள் பயன்படுத்தப்படுவதன் மூலம் விவசாயம் மிக எளிதாக்கப்படுகிறது.

மேலும் உவர், களர் நிலத்தைச் சீர்திருத்தவும், உவர், அமிலத் தன்மையுள்ள நீரின் தன்மையையும் விவசாயத்திற்கு ஏற்ற வகையில் மாற்றவும் நிலத்தடி நீர் வழி வகுக்கிறது, அதனால் கடல் நீரின் ஊடுருவல் பகுதியிலும் விவசாயம் செய்ய இயலுகிறது.

நிலத்தடி நீரின் உதவியால் விஞ்ஞானத்தோடு வளர்ந்துள்ள இன்றைய விவசாயம் இயற்கையின் சீற்றங்களைப் பொருட்படுத்துவதேயில்லை. இப்படி வளர்ந்துள்ள இன்றைய விவசாயம் இயற்கைச் சீற்றங்களுக்கே ஒரு புதிர் என்ற நிலைமைக்கு மாறியுள்ளது. இனி இந் நிலத்தடி நீரை எப்படிப் பெற முடியும் என்பதைச் சிறிது பார்க்கலாம்.

முதலில் மின்னாய்வுக் கருவி மூலம் நிலத்தடியிலுள்ள நீரோடையைத் துல்லியமாகக் குறிக்க இயலும். மேலும் முன்னோடி ஆழ்துளைக் கிணறு அமைத்து மின்னணுவியல் கருவியின் மூலம் நிலத்தடியிலுள்ள நீரோடை, நீர் பிடிபட்டுள்ள இடம் (Acquifer) நிலத்தின் பாங்கு ஆகியவற்றை ஆராய முடியும். ஆராய்ச்சியின் முடிவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்து நீரைக் கொணர வேண்டும்.

நமது விவசாயிகளிடையே தற்போது துளிர்விட்டு வரும் சமுதாயப் போக்கினால், பல விவசாய மன்றங்களை ஏற்படுத்தி தனித்தனியாக ஒவ்வொரு விவசாய மன்றத்திற்கு ஓர் சமுதாயக் கிணறு மூலம் நிலத்தடி நீரை வெளிக் கொணரச் செய்யலாம். அதனால் பல சிறு குறு விவசாயிகளின் நீண்ட நாளைய கனவு நனவாகி முப்போகமும் பயிர் செய்ய ஏதுவாகும்.

## மலைக் குன்றில் மாபெரும் நூலகம்!

அமெரிக்காவின் முன்னாள் அதிபர்களான ரானல்ட் ரேகன், ஜிம்மி கார்ட்டர், ஜெரால்ட் போர்ட், ரிச்சர்ட் நிக்சன் ஆகிய நான்கு பேரும், தற்போதைய அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷுடன் ஒரே மேடையில் உரையாற்றினர். கடந்த நவம்பர் 4-ந் தேதியன்று 'ரானல்ட் ரேகன் நூலகத்' திறப்பு விழாவின் போது இந்த அபூர்வச் சந்திப்பு நிகழ்ந்தது.

லாஸ் ஏஞ்ஜலெஸ் நகருக்கு வடக்கே 35 மைல் தொலைவில் உள்ள வென்டூரா கவுண்ட்டி பகுதியில் ஒரு குன்றின்மீது 30 ஏக்கர் பரப்பில் "ரேகன் நூலக வளாகம்" அமைக்கப்பட்டுள்ளது. ஸ்பெயின் நாட்டுக் கட்டடப் பாணியில் அமைந்துள்ள இந்த நூலக வளாகத்தை நிறுவுவதற்கு 6 கோடி டாலர்கள் செலவு பிடித்தது.

அமெரிக்காவில் தற்போதுள்ள பத்து 'அதிபர் நூலகங்களில்' இதுதான் மிகவும் பெரியதாகும். தனியார் அளித்த நன்கொடைகளைக் கொண்டு இந்த நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் தேசிய ஆவணக் காப்பகம் இதனை நிர்வகிக்கும். இந்த நிர்வாகச் செலவுகள் மட்டும் ஆண்டுக்கு 15 இலட்சம் டாலர்கள் பிடிக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

இந்த நூலக வளாகத்தில் ஓர் அருங்காட்சியகமும், ஆவணக் காப்பகமும் நிறுவப்பட்டுள்ளன. ரேகனின் வாழ்க்கை பற்றியும் அவரது ஆட்சிக் காலத்தைப் பற்றியும் விவரிக்கும் பல முக்கிய ஆவணங்களும், காட்சிப் பொருட்களும் இங்கே வைக்கப்பட்டிருக்கும். ரேகன், அவரது மனைவி நான்சி ஆகியோரின் தனி வாழ்க்கை தொடர்பான காட்சிப் பொருட்களும் இங்கே இருக்கும். மொத்தத்தில் 5 கோடிக்கும் மேற்பட்ட ஆவணங்கள் இங்கே காட்சிக்கு வைக்கப் படும்.

*1940*- களிலும், *1950*- களிலும் ரேகன் ஒரு திரைப்பட நடிகராக இருந்ததைச் சித்திரிக்கும் பல படங்களும், காட்சிப் பொருட்களும் இங்குள்ள ரேகன் அருங்காட்சியகத்தில் வைக்கப் படும்.

—அமெரிக்கத் தவகல் நிலையம்

இனி பல்வேறு விசைத்துளைக் கருவிகளின் சிறப்பைத் தனித்தனியாகக் காண்போம்.

### 1. கைத்துளைக் கருவி

இக்கருவியின் மூலம் இலகுவான களி, மணற்பாங்கான பூமி மற்றும் ஆற்றுப்படுகையிலும் 6'' 8'' விட்டம் 100' ஆழம் வரை குழாய்க் கிணறு அமைக்கலாம். மனித உழைப்பே பெரிதும் பயன்படுவதால் குழாய்க் கிணறு அமைக்க ஓரிரு நாட்களாகும். உறவினர்கள், நண்பர்களின் கூட்டுழைப்பினால் கிணறு அமைத்தலைத் துரிதப்படுத்தலாம். ஏழை எளிய விவசாயிகளுக்கு மிகவும் பயன் அளிக்கக்கூடிய குறைந்த செலவில் கிணறு அமைக்கக்கூடிய கருவி ஆகும்.

### 2. பர்குஷன் விசைத்துளைக் கருவி

இக்கருவி பூமியினடியில் பாறை மிகுந்த இடத்திலும், பெரும் கூழாங்கற்களும் படிவங்களும் உள்ள இடத்திலும் 8'' முதல் 12'' விட்டமுள்ள 200' ஆழமுள்ள ஆழ்துளைக் கிணறு அமைக்கவல்லது. கூழாங்கற்களையும் இதர படிவங்களையும் இடித்துச் செல்வதால் இதில் ஆழ்துளைக்கிணறு அமைக்கச் சிறிது காலம் ஆகும். இத்துறைக்கருவி மிக மிகத் தொன்மையானது. ஒரு குழாய்க் கிணறு அமைக்க சுமார் 60 நாட்களாகும். வேறு எந்தத் துளைக் கருவியும் உபயோகப்படுத்த இயலாத நிலத்தில் இதை உபயோகப் படுத்தி ஆழ்துளைக் கிணறு அமைக்க வல்லதால் கிணறு அமைப்பதில் காலதாமதமாகிறது. இதைத் தவிர 30 அடி விட்டம் வரையிலுள்ள திறந்தவெளிக் கிணறுகள் அமைத்தும் நிலத்தடி நீரை வெளிக் கொணரச் செய்யலாம்.

### 3. சுழல் விசைத்துளைக் கருவி

இக்கருவி ஆற்றுப்படுகைகளிலும், களிப்புகளிலும், மணற்பாங்கான பூமியிலும் 4'' முதல் 12' விட்டமுள்ள 1,500 அடி ஆழமுள்ள ஆழ்துளைக் கிணறு அமைக்கலாம். ஆற்றுப்படுகைகளில் அமைந்துள்ள விளை நிலங்கள் அதிகம் இருப்பதால் இத்துளைக்கருவி, குழாய்க் கிணறு அமைப்பதில் அதிகப் பங்குபெறுகிறது.

### 4. ஹாமர் விசைத்துளைக் கருவி

இக்கருவி கடினமாகப் பாறை மிகுந்து உள்ள இடங்களில் பயன்படுத்தப்படுகிறது. இக்கருவியினால் 4.5'' மற்றும் 6'' விட்டமுள்ள 300 அடி ஆழம் வரை ஆழ்துளைக் கிணறு அமைக்கலாம். இக்கருவி ஒரு மணி நேரத்தில் 6-12' அடி வரை பூமியைத் துளைக்கவல்லதால் ஆழ்துளைக் கிணற்றை ஓரிரு நாட்களில் அமைத்துவிடலாம். மேலும் திறந்த வெளிக் கிணற்றுள்ளும் ஆழ்துளையிட்டு நிலத்தடி நீரை வெளிக்கொணரச் செய்யலாம்.

இனி இப்பாசன முறையிலுள்ள இடர்ப்பாட்டைச் சிறிது காணலாம்.

இப்பாசன முறையில், உள்ள ஒரே இடர்ப்பாடு நிலத்தடி நீரின் மட்டம் இறங்கிக் கொண்டே செல்வதாகும்.

இவ்விடர்ப்பாட்டினைத் தவிர்க்க விஞ்ஞான வசதிகளும் பெருகிக் கொண்டே செல்கின்றன.

மேலும், வேளாண்மைப் பொறியியல் துறையினரால் அமைக்கப் பட்டுவரும் ஊற்றுநீர்த்தேக்கம் மூலம், மழைக் காலங்களில் வீணாகும் உபரியான நீர் ஆங்காங்கே தடுத்து நிறுத்தப்பட்டு நில ஊடுருவலுக்கு வழிவகை செய்வதால், நிலத்தடி நீரின் மட்டத்தைப் பராமரிக்க முடியும். மேலும் Recharge wells அமைப்பதன் மூலம் பருவ மழைக் காலங்களில் கடலில் கலக்கும் நீரை நிலத்தடியில் செலுத்திச் சேமிக்க முடியும்.

அதேபோல, ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய நிலத்தின் தாழ்வான பகுதியில் ஒரு பண்ணைக்குட்டை அமைக்க முன்வர வேண்டும். அப்படி குட்டை அமைத்தோமானால், பருவமழைக் காலங்களில் அவரவர் நிலத்தில் பெய்த அதிக மழை பண்ணைக் குட்டையில் தங்கி நில ஊடுருவலுக்கு வழிவகை செய்யும். அதனால் நிலத்தடி நீரின் மட்டத்தைப் பராமரிக்க முடியும்.

அதேபோல, உபயோகம் அற்றுப் போன திறந்த வெளிக் கிணற்றில் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணற்றைச் சேதப்படுத்தாமல் விட்டு விட்டால், பருவ மழைக்காலங்களில் அதிகப்படியான மழைநீர் இக்கிணறுகள் மூலம் நிலத்தடியில் ஊடுருவப்பட்டு நிலத்தடி நீரைச் சேமிக்க உதவும்.

எனவே, வேளாண்மையில் வறட்சி என்ற சொற்றொடரை நீக்கி, - இத்தகைய வழிவகைகள் மூலம், வறட்சியில் வேளாண்மை செய்து அதிக விளைச்சலுக்கு வழி வகுப்போம்!

# படர் சாதிப் படை ஒழிப்போம்

புலவர் இளஞ்செழியன்









போதையிலே பொல்லாத போதை - சாதி!
போதுமடா சாமி! இந்தப் போதைச் சாதி!
போதிமரப் புத்தர்பிரான் அன்பை யன்றோ
போதித்தார்! அவர் நெறியில் சாதி ஏது?
பேதையிலே பேதைகளாய் இருப்போ ராநாம்?
பேதமற்ற சமுதாயம் அமைப்போ ராநாம்?
பாதையிலே நடப்பவர்நாம்! பகுத்த றிந்தோர்
'படர்சாதிப் படை'யதனை ஒப்ப மாட்டார்!

என்சாதி உன்சாதி என்னும் பேச்சால்
இந்நாட்டில் சமநீதி முளைப்ப தெந்நாள்?
தன்சாதி ஆணவத்தால் விளையும் தீமை
தடுப்பதெந்நாள்? தமிழ்நீதி தழைப்ப தெந்நாள்?
முன்னாளில் இல்லாத சாதி முட்கள்
முளைத்ததிந்நாள்! பெருமரமாய் வளர்ந்த திந்நாள்!
முன்னேற்றத் திசைநோக்கி நடப்போர், இந்த
முடைநாற்றச் சாதியினை விரும்ப மாட்டார்!

பெரியாரின் 'பேருழைப்பு' என்ப தென்ன?
பேசுமிந்தச் சாதிஒழிப் பன்றோ? அண்ணா
வரிவரியாய் எழுதியிங்கே குவித்த தெல்லாம்
வரிப்புலியாம் சாதியினைக் கொல்லத் தானே!
எரியாத ஈரமட்டை யாக வன்றோ,
இருக்கிறது இன்னுமிந்தச் சாதி? மீண்டும்
மரியாதை யுடன்சாதிப் பிரிவி னைகள்
வகைவகையாய்த் திரள்கிறது தமிழ கத்தில்!

இருபத்து ஓராம்நூற் றாண்டை நோக்கி,
இவ்வையம் நடக்கிறது! நடக்கின் றோம்நாம்!
வருபத்து ஆண்டுகளி லேனும், சாதி
வழுக்கலற்ற சமுதாயம் அமைப்போம் வாரீர்!
'ஒரு சாதிக் கொருநீதி' என்ப தைநாம்
ஒழித்துவிடின், சாதியெண்ணம் செத்துப் போகும்!
திருநாட்டீர்! திருக்குறளைக் கொண்டி ருந்தும்
திருந்தாமல் நாமிருத்தல் நியாயம் தானா?

சாதிக்கோர் கொடிமரத்தை நடாதீர்! உங்கள்
சாதியினால் சாதிக்க நினைத்தி டாதீர்!
வீதிக்கோர் தேரிழுத்துக் கொண்டி ருக்கும்
விளையாட்டுச் சிறுவர்களாய் விளங்கி டாதீர்!
சோதிக்கோர் வானம்தான் உண்டு! கையின்
சுடர்களெல்லாம் நீணிலத்தில் நிலைப்ப தில்லை!
ஆதிக்கோர் அந்தமுண்டு! அதுபோல் சாதி
ஆரம்பம் அறுபடும்நாள் தொலைவில் இல்லை!

# கும்பகோணம் மகாமகம் திருவிழா:

### துயர நிகழ்ச்சி குறித்து அரசின் செய்தி

கும்பகோணத்தில் 18.2.1992 அன்று புனித மகாமகத் திருவிழா நடைபெற்றது. இம்மகாமகம் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படுகிறது. முந்தைய மகாமக விழாக்களுக்கு வந்த மக்களின் எண்ணிக்கையை விட இந்த மகாமக விழாவுக்கு அதிகமாக வருவர் என்று எதிர்பார்த்து, தமிழ்நாடு அரசு விரிவாகப் பல ஏற்பாடுகளைச் செய்திருந்தது- இவ்விழாவைக் காண வரும் மக்கள் எவ்வித இன்னல்களுக்கும் உள்ளாகாமல் விழாவைக் கண்டு களித்துச் செல்வதற்கு வசதியாக முன் எப்போதும் செய்திராத அளவுக்குச் சீரமைப்புப் பணிகள், கட்டுமான ஏற்பாடுகள், நிவாரண ஏற்பாடுகள், உணவு வழங்குதல், பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியன சிறப்பாகச் செய்யப்பட்டிருந்ததோடு கூட்டத்தினைக் கட்டுப்படுத்திமுறைப் படுத்துவதற்காகக் காவல்துறைப் பணியாளர்களும் ஏராளமான எண்ணிக்கையில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

1968-ஆம் ஆண்டு நடைபெற்ற மகாமகம் விழாவிற்குக் காவல்துறை அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட மொத்தம் சுமார் 4,000 பேர் மட்டுமே பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

1980-ஆம் ஆண்டில் நடைபெற்ற மகாமக விழாவிற்குக் காவல் துறையைச் சேர்ந்த 6,350 அலுவலர்களும், பணியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஆனால், இந்த ஆண்டு நடைபெற்ற மகாமக விழாவிற்குப் பாதுகாப்பிற்காகத் தமிழ் நாடு அரசு காவல்துறையைச் சேர்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட மொத்தம் 12,070 பேரைப் பணியில் ஈடுபடுத்தியது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடக்கத்திலிருந்தே இந்த விழாவிற்கான ஏற்பாடுகளில் நேரடி ஆர்வம் காட்டிவந்தார்கள். பல்வேறு விழா நடைமுறைகள் சீராகவும், செம்மையாகவும் நடைபெறுவதற்கும், இவ்விழாவைக் காண வரும் பொதுமக்களுக்குப் பல்வேறு வசதிகள் செய்து கொடுப்பதற்கும் இவ்விழாவுக்கு வருகைதரும் இலட்சோப இலட்சம் பக்தர்களின் பாதுகாப்புக்கும் அவசியமான, திட்டங்களை வகுப்பதில் அவர்கள் மிகுந்த அக்கறை செலுத்தினார்கள். முதல்வர் அவர்கள், மகாமக விழா தொடர்பான பல்வேறு பணிகளைக் கவனக்கின்ற மாநில அரசு அலுவலர்களின் கூட்டங்களை அடிக்கடி கூட்டி, இவ்விழாவிற்கான ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார்கள். மேலும், இவ்விழாத்தொடர்பான பல்வேறு ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்வதற்குத் தேவையான செலவிற்காகக் கும்பகோணம் நகராட்சி, பொதுப் பணித்துறை, பொது சுகாதாரத் துறை, நெடுஞ்சாலைத்துறை, காவல்துறை ஆகியவற்றிற்கு அரசு தாராளமாக நிதியுதவி அளித்தது. பொதுமக்களுக்கான பல்வேறு வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகக் கும்பகோணம் நகராட்சிக்கு ரூ. 85.50 இலட்சம் வழங்கப்பட்டது.

இந்த நகராட்சி ரூ. 91.81 இலட்சம் செலவு செய்து உள்ளது. 1980- இல் நடைபெற்ற மகாமகம் திருவிழாவின்போது கும்பகோணம் நகராட்சிக்கு ரூ. 8.5 இலட்சம்தான் வழங்கப்பட்டது. நெடுஞ்சாலைத் துறை கும்பகோணம் நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சாலைகளின் மேம்பாட்டுக்காகவும், 51.40 கி.மீ. தொலைவிற்கு ஒரு வழிப்பாதைகளை இருவழிப்பாதைகளாக அகலப்படுத்தவும் மொத்தம் ரூ. 1.32 கோடி செலவிட்டது. திருக்கோயிலுக்குச் செல்லும் சாலைகளை அகலப்படுத்தும் பணியையும், மகாமகக் குளத்தில் தூர் வாரும் பணியையும், பொதுப்பணித்துறை மேற்கொண்டது.

மகாமகத் திருவிழா தொடர்பான சமயச் சடங்குகளைச் செய்யும் ஏற்பாடுகளை இந்து சமய அற நிலையத்துறை மேற்கொண்டது. பல்வேறு திருக்கோயில்களில் திருப்பணிக்காக 1991 மார்ச்சுத் திங்களில் ரூபாய் 10 இலட்சம் வழங்கப்பட்டது. திருக்கோயில்களின் திருப்பணிக்கும் மேம்பாட்டுக்கும் முதலமைச்சரின் திருக்கோயில் திருப்பணி-பராமரிப்பு நிதியிலிருந்து தொகை வழங்குவது உட்பட பல்வேறு கணக்குத் தலைப்புகளின்கீழ் மொத்தம் ரூ. 46.28 இலட்சம் வழங்கப்பட்டது. இதுவே மகாமகத் திருவிழாவின்போது செலவிடப்பட்ட அதிகமான தொகையாகும். மாநிலத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் பக்தர்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்யப் போக்குவரத்துக் கழகங்கள் விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்தன. 16.2.92 முதல் 18.2.92 வரை மொத்தம் 4,605 பேருந்துகள் இயக்கப்பட்டன. இப்பேருந்துகள் 15,000 பயணத் தடவைகளுக்குமேல் ஓடி சுமார் 13.9 இலட்சம் பயணிகளை ஏற்றிச் சென்றன. அத்துடன் 16.2.92 முதல் 18.2.92 வரை இரயில்வே நிருவாகம் 62 தனி இரயில்களை விட்டது. இதில் ஆயிரக்கணக்கான பயணிகள் பயணம் செய்தனர். மாண்புமிகு முதல்வர் தன்னுடைய சொந்த நிதியிலிருந்து பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட உணவுப் பொட்டலங்களை மகாமகம் திருவிழாவின் போது பக்தர்களுக்கு வழங்கினார். திருவிழா தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் நேரில் பார்வையிடுவதற்காக மாநில அமைச்சரவையைச் சேர்ந்த அமைச்சர்கள் முதலமைச்சரின் உத்தரவின் பேரில் அனுப்பப்பட்டனர்.

18.2.1992-ஆம் நாளன்று நடைபெற்ற மகாமகம் விழாவை இனிதே

# கும்பகோணம் மகாமகம் விழாவில் மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

குடந்தையில் நடைபெற்ற மகாமக விழாவில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு, புனித நீராடி வழிபட்டார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன் சொந்தச் செலவில் அளித்த 10 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் 108 பெண்களுக்குப் புடைவைகள் மற்றும் உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.

மகாமகத்தையொட்டி சிறப்பு அஞ்சலக உறையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் முதல் அஞ்சலக உறையைப் பெற்றுக் கொண்டார்.

மகாமகத்தையொட்டித் தயாரிக்கப்பட்ட மகா மகச் சிறப்பு மலரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டார். உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

கும்பகோணத்தில் உள்ள அரசு தலைமை மருத்துவமனை வார்டுகள் 48 படுக்கைகள் கொண்டவைகளாக வரும் 1992-93-ஆம் ஆண்டில் விரிவுப்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார். இத்திட்டத்திற்கு ரூபாய் 24 இலட்சம் செலவாகும். இம்மருத்துவ மனைக்கான மருத்துவர்கள், மருத்துவ சார் பணியாளர்கள் தகுந்தாற்போல அதிக அளவில் நியமிக்கப்படுவார்கள்.

கும்பகோணத்தில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, சுற்றுலாத் துறையால் சுமார் ரூபாய் 30 இலட்சம் செலவில் ஓட்டல் கட்டப்படும் எனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

---

நடத்த மாநில அரசு விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்தது என்பதை இந்த ஏற்பாடுகளிலிருந்து அறியலாம். பாதுகாப்பு, பக்தர்களை நெறிப்படுத்துதல், சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தல், குற்றங்களைத் தடுத்தல் உட்பட பல்வேறு பணிகள் குறித்துத் திட்டத்தை மகாமகம் நடைபெறும் நாளுக்குப்பல மாதங்களுக்கு முன்னரே காவல்துறையினர் நன்கு திட்டமிட்டு அந்த ஏற்பாடுகள் குறித்து காவல்துறையினரும், மாவட்ட ஆட்சியரும், பொது மக்களின் பிரதிநிதிகளுடனும் கும்பகோணத்திலும், தஞ்சாவூரிலும் விரிவாகப் பரிசீலித்தனர். பல்வேறு திசைகளிலிருந்து பக்தர்கள் ஒழுங்காக, கட்டுப்பாட்டுடன் அமைதியான முறையில் மகாமகம் குளத்திற்கு வந்து நீராடிவிட்டு அதே போன்று கட்டுப்பாடான முறையில் வெளியேறுவதை உறுதி செய்யும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் திட்டமிடப்பட்டிருந்தன.

காவல்துறையினர் அனைவருக்கும் அனைத்து விவரங்களும் முன் கூட்டியே தெரிவிக்கப்பட்டன. மேற்பார்வை அதிகாரிகளும், காவலர்களும் தங்களது கடமைகளை முற்றிலும் அறிந்து செயலாற்ற இயலும். பலமுறை ஒத்திகைகள் நடத்தப்பட்டன. இதற்கு முன்னர் 1980-ஆம் ஆண்டில் மகாமகம் விழாவை நடத்தி முன் அனுபவம் பெற்றிருந்த காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (சட்டம்-ஒழுங்கு) திரு. வால்டர் ஐசக் தேவாரம் அவர்களின் பொறுப்பில் அனைத்து ஏற்பாடுகளும் விடப்பட்டன. இவருக்கு உதவியாக ஒரு காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல், 5 காவல்துறை துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள், 20 காவல்துறை கண்காணிப்பாளர்கள், 60 காவல்துறை துணைத் கண்காணிப்பாளர்கள், 200 காவல்துறை இன்ஸ்பெக்டர்கள், 500 காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்கள் ஆகியோருடன் காவல் துறைக் காவலர்களும் செயல்பட்டனர். செய்யப்பட்டுள்ள பல்வேறு ஏற்பாடுகளை மேற்பார்வையிடவும் அவை முறையாக நடக்கின்றனவா என உறுதி செய்யவும் காவல்துறை டைரக்டர் ஜெனரல், திரு. எஸ். ஸ்ரீபால் அங்கேயே தங்கியிருந்து கண்காணித்தார்.

இந்த ஆண்டு நடைபெற்ற மகாமகம் விழாவிற்கான காவல் துறை ஏற்பாடுகள் இதுவரை எப்போதுமே இல்லாத அளவிற்கு மிகப் பெரிய அளவில் செய்யப்பட்டிருந்தன. காவல்துறை, மிக விரிவான அளவில் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்ததோடு காவல்துறையைச் சேர்ந்த ஒவ்வொரு அலுவலரும், பணியாளர்களும் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பணிகளை நன்கறிந்து செவ்விய முறையில் செயலாற்றவும், அப்பணியை ஆற்றிடும்போது குழப்பம் ஏதும் நிகழாமலும் இருக்கத் தக்க விதத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு அவர்களுக்கும் உணர்த்தப்பட்டன.

எனவே, காவல்துறை அலுவலர்கள், பணியாளர்களுக்கிடையே போதுமான ஒருங்கிணைப்பு இல்லை என்று நாளிதழ்களில் வெளிவந்துள்ள அறிக்கைகள் முற்றிலும் தவறானவையாகும் என்பதோடு விஷமத்தனமானவையும் ஆகும். தற்போது நடைபெற்ற மகாமகம் திருவிழாவிற்குக் கும்பகோணத்திற்கு சுமார் 50 இலட்சம் பக்தர்கள் வருகை தந்துள்ளனர். ஆனால் 1980- ஆம் ஆண்டில் நடைபெற்ற மகாமகம் விழாவிற்கு வந்த பக்தர்களின் எண்ணிக்கை 18 இலட்சம் மட்டுமே ஆகும். காவல் துறையினரும், மாநில அரசின் ஏனைய அலுவலர்களும் இத்தகைய

பெருங்கூட்டத்தை எதிர்பார்த்தே, அதைச் சமாளிக்கத்தக்க வகையில் விரிவான ஏற்பாடுகளைச் செய் திருந்தனர். அவர்கள் கும்பகோணம் ஒரு சிறிய நகரமாக இருந்தும், மகாமகம் குளம் நெரிசல் மிக்க பகுதியில் அமைந்திருந்தும் குளத் தைச் சுற்றிலுமுள்ள சாலைகள் குறுகலாக இருந்தும் வந்திருந்த பெருங்கூட்டத்தை நல்ல முறையில் சமாளித்தனர்.

இப்பகுதி முழுவதும், வடக்குப் பக்கத்தில் காவிரி ஆற்றாலும் தெற்குப் பக்கத்தில் அரசலாற்றாலும் சூழப்பட்டுள்ளது. மகாமகம் குளத் தில் ஒரு சமயத்தில் அதிக அளவு 40 ஆயிரம் பக்தர்கள் நீராட இயலும். பக்தர்கள் தொகுதி தொகுதியாகச் சென்று குளத்தினுள் நீராடி வெளி யேறத் தக்கவகையில் காவல்துறை யினர் போக்குவரத்தை ஒழுங்கு படுத்தினர். இதுவே முன்பு மகா மகம் விழாக்கள் நடைபெற்ற போதும் பின்பற்றப்பட்ட முறை யாகும்.

எனவே, காவல்துறையினர் போதிய அளவுக்குத் தக்க ஏற்பாடு களைச் செய்யவில்லை என்றும், பக்தர்களின் மாபெருங்கூட்டத்தைக் கண்டு அவர்களும் செய்வதறியாது திகைத்து நின்றனர் என்றும் சில செய்தித் தாள்களில் வெளியான தகவல்கள் தவறானவையும், உள் நோக்கம் கொண்டவையும் ஆகும்.

பக்தர்கள் வடக்குப் பக்கத்தி லிருந்தும் தெற்குப் பக்கத்திலிருந்தும் உள்ளே நுழையவும், மேற்குப் பக்கம் வழியாகவும், கிழக்குப் பக்கம் வழி யாகவும் வெளியே வரவும் ஏற் பாடுகள் செய்யப்பட்டிருந்தன. உள்ளே நுழையவும் வெளியே செல் லவும் இதுபோன்ற ஏற்பாடுகள் முன்னர் 1968, 1980-ஆம் ஆண்டு களில் நடந்த 'மகாமகம் விழாவின்' போதும் செய்யப்பட்டிருந்தன.

மக்கள் கூட்டம் நெருங்கி யடித்துக் கொண்டு மோதியதால் மகாமகக் குளத்தின் வடக்குச் சாலை களின் 'பங்கர் தருமச் சாலையை' ஒட்டியிருந்த சுற்றுச் சுவர் மீதிருந்த இரும்புக் கம்பிகளும், துண்களும் இடிந்து விழுந்து எதிர்பாராத சூழ் நிலை உருவாகும் வரையில் இந்த ஏற்பாடுகள் நன்றாகவே இருந்தன. இந்த பங்கர் தருமச் சாலையில் 'விஸ்வ இந்து பரிஷத்' அமைப்பு 'கிளினிக்' வைத்திருந்தது. மேலும், உணவுப் பொட்டலங்களை வழங்க வும், அந்த தர்மசாலையைப் பயன் படுத்தி வந்தது. இந்த உணவுப் பொட்டலங்கள், சுற்றுச் சுவருக்கு வெளியில் காத்திருந்த பக்தர்களிடம் வீசி எறியப்பட்டு வந்தன. சுற்றுச் சுவருக்கு வெளியே மக்கள் பெரு மளவில் குழுமியதற்கு இதுவே முதற் காரணமாகும்.

பெருந்திரளாகக் குழுமியிருந்த மக்கள் கூட்டம் நெருங்கியடித்து முந்தியதால் சுவர் மீதிருந்த இரும்புக் கம்பிகளும் தூண்களும் இடிந்து விழுந்தன. இவ்வாறு இடிந்து விழுந்தது அங்கு குழுமியிருந்த மக்களிடம் பீதியை ஏற்படுத்த, மக்கள் தாறுமாறாக ஓட நேர்ந்தது. அவ்வாறு அவர்கள் ஒருவரை ஒருவர் தள்ளி முண்டியடித்துக் கொண்டு ஓடியதே பக்தர்கள் இறப்புக்குக் காரணமாக அமைந்தது. ஆனால், மக்கள் கூட்டம் குளத்தில் நெருங்கியடித்துக் கொண்டதாலேயே இறந்துவிட்டனர் எனக் கூறுவது சரியன்று. குளத்தில் முழ்கி ஒருவர் கூட இறக்கவில்லை. காவலர் தடி யடித் தாக்குதல் நடத்தியதாலேயே மக்கள் நெருங்கியடித்து ஓட நேர்ந் தது என சிலப் பத்திரிகைகள் குற்றம் சாட்டியிருப்பது முற்றிலும் ஆதார மற்றது மட்டுமல்ல; உண்மைக்கும் புறம்பானதுமாகும்.

விழா நடைமுறைகளின்போது, எந்த நேரத்திலும் (அல்லது) எந்த இடத்திலும் காவலர் தடியடித் தாக்குதல் நடத்தவில்லை, இந்த விபத்தில் பலியானவர்கள் அனை வரும், இடிந்துபோன சுற்றுச் சுவர் இரும்புக் கம்பியிருந்த இடத்திலிருந்து 60 அடி தொலைவுக்குள்ளேயே கிடந்தனர். விபத்து நடந்த இடத் திற்கு மிக அருகில் அவசரச் சிகிச்சை வண்டிகளைக் கொண்டுவர காவலர் தக்க ஏற்பாடுகளைச் செய்திருந் தனர். ஆகவேதான் காயமுற்ற பலரை உடனடியாக மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்று விலை மதிக்க முடியாத உயிர்களைக் காப் பாற்ற முடிந்தது. அவ்வாறு செய் திருக்காவிட்டால், பலியானவர் களின் எண்ணிக்கை இன்னும் அதிக மாயிருக்கும்.

புனிதப் பயணம் மேற்கொண்ட பக்தர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை ஒரு முறையாவது காண



• பணம் செலவழிப்பதை எல்லாம் எழுதி வை; செலவழித்தது அவசியந்தானா என்று சிந்தித்துப் பார்; சிக்கனம் தானாக வந்துவிடும்.

- அண்ணல் காந்தியடிகள்

வேண்டுமென்று விரும்பியதால் இத் துயரச் சம்பவம் நடந்தது என்றும், அவர்களை விரட்டுவதற்காகக் காவலர்கள் தடியடித் தாக்குதல் நடத்தினர் என்றும், பக்தர்கள் பல திக்குகளிலும் ஓடினர் என்றும், மாண்புமிகு முதல்வரின் பாது காப்புக்காகச் செல்லும் பல வண் டிகள் வரிசையாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்ததால், பக்தர்கள் வெளியே செல்ல இயலாமல் தடை செய்யப் பட்டனர் என்றும் செய்தித்தாள்கள் விஷமத்தனமாகச் செய்தி வெளியிட் டுள்ளன. இந்தச் செய்திகள் முற் றிலும் உண்மைக்குப் புறம்பானவை யாகும்.

குளத்தின் மேற்குக் கரையின் தென்பகுதியில் மாண்புமிகு முதல்வர் பயன்படுத்துவதற்கென மிகச் சிறிய அளவிலான அடைப்பே அமைக்கப் பட்டிருந்தது. அந்த அடைப்பு, 20× 12 அளவு மட்டுமே கொண்டதாகும் எனவே, குளம் அமைந்துள்ள இடத் தில் நான்கில் ஒருபகுதி மாண்புமிகு முதல்வருக்காக ஒதுக்கப்பட்டிருந்தது என்று சில செய்தித்தாள்களில் குறிப்பிடப்பட்டிருப்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும். மேற்குக் கரையில் எஞ்சிய பகுதி, பக்தர்கள் எளிதில் வந்து செல்வ தற்கேற்ப அமைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கு வந்திருந்த போதும்கூட, பக்தர்கள் இந்த வழியைப் பயன் படுத்திக் கொண்டிருந்தனர். குளத் தின் விளிம்பிற்கருகில் தெற்குப் பக் கமாக மேற்குக் கரைச் சாலையில் சிறிய இடத்தில் தான் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பாதுகாப்பிற் காகச் சென்ற வண்டிகள் வரிசை

யாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இது, பக்தர்கள் எளிதாக வந்து செல்வதற்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தவில்லை. மேற்குப் பக்கத்தில், உள்ள இடத்திலிருந்து ஆயிரக் கணக்கில், மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தனர். உண்மையில், அப்பகுதியில் எவ்விதக் குழப்பமோ, நெரிசலோ இல்லை. இத்துயரச் சம்பவம் வடகிழக்குப் பக்கத்தில் நிகழ்ந்தது. இது மாண்புமிகு முதல்வர் வழிபாடு செய்து கொண்டிருந்த இடத்திலிருந்து மிகத் தொலைவில் இருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவர்களுக்குக் குறிக்கப்பட்ட நேரத்திற்கு அதாவது காலை 11.30 மணிக்கு அவ்விடத்திற்கு வந்து சேர்ந்து, நண்பகல் 12.15 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். ஆனால், தருமச்சாலை சுவரின் மீதிருந்த இரும்பு கம்பியும் (Wall Grill) தூண்களும் இடிந்து விழுந்ததைத் தொடர்ந்து வடகிழக்குப் பக்கத்தில் இச்சம்பவம் மதியம் சுமார் 1.00 மணிக்கு நிகழ்ந்தது.

மாண்புமிகு முதல்வர், வழிபாடு நடத்திய இடத்திலிருந்து வெகு தொலைவில் அமைந்திருந்த கட்டடத்தில் நிகழ்ந்ததும், மாண்புமிகு முதல்வர் அவ்விடத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற பின்னர் வெகு நேரம் கழித்து நடைபெற்றதுமான இத்துயரச் சம்பவத்திற்கு மாண்புமிகு முதல்வரின் வருகை அல்லது மாண்புமிகு முதல்வரின் பாதுகாப்பு வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்ததே காரணம் 'என்று கூறுவது நியாய மற்றதும் மிகவும் கொடுமையானது மாகும்.

இந்நிகழ்ச்சிகளைப் பற்றியெல்லாம் நன்கு அறிந்த 'விசுவ இந்து பரிஷத்' நிர்வாகத்தினர், மாண்புமிகு முதல்வர் அவர்களின் வருகையாலேயே இச்சம்பவம் நடைபெற்றதாகக் கூறுவது மிகவும் துரதிஷ்ட வசமானதாகும். சிறிய வாய்ப்புக் கிடைத்தாலும் அதனைப் பெரிதாக்கிக் குற்றம் சாட்டுபவர் அரசியல்வாதிகள். ஆனால், கும்பகோணத்தில் இதற்குமுன் நடைபெற்றிராத அளவுக்குச் சீரிய முறையில் இந்த ஆண்டு மகாமகத்தை நடத்துவது தொடர்பாகத் தமிழக முதல்வர் காட்டிய ஆர்வத்தையும், ஆதரவையும், தமிழ்நாடு அரசு நிதியுதவி அளித்ததையும் நன்கு அறிந்த விசுவ இந்து பரிஷத்தினர் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளனர். இத்தகைய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை எந்தக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு விசுவ இந்து பரிஷத்தினர் குற்றம் கூறியுள்ளனர் என்பதனை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

மொத்தத்தில் மகாமகம் சிறப்பாகவும், சுமுகமாகவும், உரிய வாறும் நடைபெற்றதற்கான பாராட்டை முதலமைச்சரும், மாநில அரசும் பெறுவதை விரும்பவில்லை; அவர்களே அப்பாராட்டைப் பெற விரும்புகின்றனர். சமய விழாக்களைப் பொறுத்தவரையில், முதல்வரோ, மாநில அரசோ எவ்வகையிலும் தலையிடுவதில்லை என்பதைப் பல்வேறு சமய விழாக்கள் சுமுகமாக நடைபெற்றதிலிருந்து அறியலாம். ஆனால், இவ்வாறு நடைபெறுவது விசுவ இந்து பரிஷத்தினருக்குப் பிடிக்கவில்லை எனத் தோன்றுகிறது.

பெருமளவில் மக்கள் கூடுவதற்கு வசதி செய்வது கடமை என்று மட்டும் கருதாமல், இப்புனித விழாவில் பங்கு கொள்வதன் மூலம் பக்தர்களும், யாத்திரிகர்களும் தங்கள் வெளிப்படுத்துவது முழு வாய்ப்பு அளிக்க உறுதி செய்வதற்கும் அரசு பெருமளவில் ஏற்பாடு செய்தது.

விசுவ இந்து பரிஷத் மட்டும் தான் நம் நாட்டில் இந்து மதத்தின் ஒரே காப்பாளர் அல்ல. விசுவ இந்து பரிஷத், அரசு செய்த சீரிய ஏற்பாடுகளை மறைக்கும் நோக்குடன் கீழ்த்தரமான குற்றச்சாட்டுக்களைக் கூறி அரசின்மீது பழி சுமத்துகிறது. ஆனால், தமிழ்நாடு மாநிலம் தான் கோயில் நிருவாக வாரியம் அமைத்த முதல் மாநிலமாகும். தமிழ்நாடு முதல்வர்தான். கோயில் திருப்பணி பராமரிப்பு நிதியை ஏற்படுத்திய முதல் முதலமைச்சராவார். புகழ்பெற்ற தொன்மைக்கால கோயில்களைப் புதுப்பித்து, இவை, இந்து மதத்தின் தலைசிறந்த சின்னங்களாக என்றும் தழைத்து நிற்கச் செய்வதில் தமிழக அரசும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் இதில் ஆழ்ந்த அக்கறை காட்டி வருகின்றனர்.

இந்நிலையில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை வரும் இந்த மகாமகப் பெருவிழா உள்ளிட்ட விழாக்களில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்து கொண்டதில் தவறேதுமில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்பு வரவேற்பு குறித்து, அரசியல் உள்நோக்கம் கொண்ட சில கட்சிகள் பொறாமை கொண்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் புனித நீராட அங்கு வந்திருந்த போதும், நீராடிய பின்னர் அவர்கள் அங்கிருந்து சென்ற பின்னரும், பல இலட்சம் மக்கள் அக்குளத்தில் தொடர்ந்து புனித நீராடியது, விரிவான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இத்துயரச் சம்பவம் நடந்த இடம், குளத்தின் வட கிழக்கு மூலையிலுள்ள ஒரு சிறு பகுதியாகும். இதனையடுத்து, நள்ளிரவு வரையில், பல இலட்சம் மக்கள் அக்குளத்தில் தொடர்ந்து புனித நீராடத் தடையின்றி வந்துபோன வண்ணமாக இருந்தனர்.

எனினும், துரதிருஷ்டவசமாக இத்துயரச் சம்பவம் நிகழ்ந்துவிட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் துயருற்ற குடும்பங்களுக்குத் தன்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். இறந்தவர்களின் உறவினர்களுக்கு மாண்புமிகு முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடி நிவாரணத் தொகையாக ரூ.25,000 வழங்க முதலில் ஆணை

## தாய்

- தாயின் இதயம்தான் குழந்தையின் பள்ளிக்கூடம். - பீச்சர்.
- ஒரு சிறந்த தாய் நூறு ஆசிரியர்களுக்குச் சமமாவாள். - ஹெர்பர்ட்
- குழந்தையைக் கையிலேந்தி நிற்கும் தாயைவிட அதிக அழகான காட்சி கிடையாது. - கதே

யிட்டார். இத்துயரச் சம்பவம் குறித்து மேற்கொண்டும் கருதிப்பார்த்து, இறந்தவரின் குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்களுக்கு, மாண்புமிகு முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து கூடுதலாக ரூ.25,000 வழங்க அதாவது, அரசு மொத்தம் ரூ.50,000 வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இறந்தவரின் குடும்பம் ஒன்றிற்கு ரூ.30,000 வழங்க, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் முன்வந்துள்ளது. இதோடு சேர்த்து, இறந்தவரின் குடும்பத்திற்கு மொத்தம் ரூ.80,000 வழங்கப்படுகிறது. பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து இறந்தவரின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.20,000 வழங்கப்படும். இவ்வாறு இறந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றும் மொத்தத்தில் ஒரு இலட்சம் ரூபாயைப் பெறும்.

தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 50,000, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்து ரூபாய் 30,000

பிரதம மந்திரியின் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 20,000 மொத்தம் ரூ.1,00,000

இறந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தேவைப்படக் கூடிய கல்வி, வேலைவாய்ப்பு போன்ற பிற நிவாரண உதவிக்கு வகை செய்யவும் தமிழக முதல்வர் நடவடிக்கைகள் மேற்கொள்வார்.

மாண்புமிகு முதல்வர் மகாமகத் திருவிழாவில் கலந்து கொண்டதை ஒரு பிரச்சினையாக்கிச் செய்தித்தாள்கள் எழுதியிருப்பது மிகவும் வேதனைப்படத்தக்கதாகும்.

இந்நாட்டின் குடிமகள் என்ற முறையில் மட்டுமல்லாது மாநிலத்தின் முதலமைச்சர் என்ற வகையிலும், இந்து சமய அறநிலையத் துறையின் பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சர் என்ற வகையிலும், இந்த மகாமக விழாவில் கலந்து கொள்ள அனைத்து உரிமையும் உண்டு மாண்புமிகு முதலமைச்சருக்கு. கடந்த காலத்தில் எந்த ஒரு முதலமைச்சரும் இந்தத் திருவிழாவில் கலந்து கொள்ளாமல் இருந்ததைக் கொண்டு, தற்போது முதலமைச்சர் இந்தத் திருவிழாவில் கலந்து கொள்ளக் கூடாது என்று கூறுவது நியாயமில்லை. திருவிழா, சுமுகமான முறையில் நடைபெற, முதலமைச்சர் இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்டார். எனவே, அவர் திருவிழாவில் கலந்து கொண்டது முற்றிலும் பொருத்தமுடையதும், முறையானதும் ஆகும். முதல்வர் கும்பகோணத்திற்கு வருகை தந்தபோது, பெருந்திரளாக மக்கள் ஆர்வத்துடன் கூடினர். இதுவே பெருந்திரளாக மக்கள் கூடுவதற்கான தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது என்பதைக் காட்டுகின்றது. எனவே, அது மகாமகம் அல்ல ஜெயாமகம் என்று ஒரு செய்தித்தாள் குறிப்பிட்டிருப்பது கொடுமையானதும் தீய நோக்கம் உடையதுமாகும். பொறுப்பு வாய்ந்த ஒரு செய்தித்தாளால் எவ்வாறு இத்தகைய பொறுப்பற்ற சொற்களைப் பயன்படுத்த இயலும் என்பது புரிந்து கொள்ள இயலாததாக உள்ளது.



● மனிதன் கீழ்மை நிலையிலிருந்து மேம்பாடடைய வேண்டுமானால், தன்னம்பிக்கை உடையவனாகவும், தனது சக்தி என்ன என்பதை உணர்ந்தவனாகவும் இருக்க வேண்டும்.

- தந்தை பெரியார்

ஒரு காலத்தில் நடந்த நிகழ்ச்சியோடு பிறிதொரு காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியை ஒப்பிடுவது விரும்பத்தக்கதல்ல என்றாலும், கடந்த காலத்திலும் எதிர்பாராத அளவுக்கு இத்தகைய பெருங்கூட்டம் கூடியபோது இதைப் போன்ற சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. பிரயாகையில் 3.2.1954 அன்று நடைபெற்ற கும்பமேளாவில் 316-க்கும் மேற்பட்ட பக்தர்கள் மாண்டனர். ஹரிதுவாரில் 4.4.1986 அன்று நடைபெற்ற கும்பமேளாவில் 50-க்கும் மேற்பட்டவர்கள் இறந்தனர். 1954-இல் பிரயாகையில் நடைபெற்ற கும்பமேளாவில் அந்நாளைய பாரதப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் கலந்து கொண்டார்கள். அவர் கூறிய கருத்து வருமாறு:-

'ஒரு சரியான நோக்கில் அனைத்துச் சம்பவங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது கும்பமேளா நடைபெற்ற பகுதியில் கூடியிருந்த மக்களின் எண்ணிக்கையையும், அங்கிருந்த இடத்தையும், செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளையும் கருத்திற் கொள்ள வேண்டும். சிக்கல் என்னவெனில், இடப் பற்றாக்குறையாகும்.'

1954-இல் நடைபெற்ற கும்பமேளாவில் சுமார் 316 பேர் மடிந்தனர் என மதிப்பிடப்பட்டது. ஆனால், எதிர்க்கட்சிகளும், பத்திரிகைகளும் அவ்விழாவில் கலந்து கொண்ட பிரதமர் ஜவகர்லால் நேரு மீது எந்தவொரு பழியையும் சுமத்தாததோடு அவர் கும்பமேளாவில் கலந்திருக்கக்கூடாது என்றும் குறை கூறவில்லை.

இறந்தவர்களின் குடும்பத்திற்கு ஏற்பட்டுள்ள இப்பெருந்துயர் குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களும் தமிழ்நாடு அரசும் தங்கள் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துள்ளனர்.

இத்துயரச் சம்பவத்திற்குக் காரணமான சூழ்நிலைகள் குறித்து விசாரணை ஒன்றினை நடத்துமாறு தஞ்சாவூர் மாவட்டக் கூடுதல் ஆட்சித் தலைவர் ஆணையிடப்பட்டுள்ளார். அவ்வறிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு தக்க நடவடிக்கையினை எடுக்கும், இதனிடையே இறந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் உதவியும், நிவாரணமும் அளிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் மக்களுக்கு உறுதியளித்துள்ளார். ●

● நம்முடைய சமூகம் சுதந்திர வாழ்க்கை அடைந்துவிட்டது; நாம் சுதந்திரத்துடன் சுகம்பெற வேண்டுமானால், மக்கள் அறவழியில் நிற்க வேண்டும்.

- மூதறிஞர் இராஜாஜி



இவை தவிர டச்சு, டேனிஷ், பர்ஷியன், மராத்தி, மோடி போன்ற பிற மொழி ஆவணங்களும் இக்காப்பகத்தில் பேணிக் காக்கப்பட்டுவருகின்றன. பத்திரங்கள், அடமானப் பத்திரங்கள் போன்ற மதிப்புள்ள ஆவணங்கள் பாதுகாப்பான நிலைப் பேழைகளில் பாதுகாக்கப்படுகின்றன. வரலாறு, நிர்வாகத் தேவைகளுக்கு ஆவணங்களை வழங்குவதுடன் அரசிதழ்களிலிருந்து சான்றிட்ட பகுதி நகல்களும் முன்னோர்களின் பிறப்பு, இறப்புப் பணி ஆகியவை பற்றிய விவரங்களடங்கிய ஆவணங்களின் நகல்களும் பொதுமக்களுக்கு உரிய கட்டணத்திற்கு வழங்கப்படுகின்றன. இவை தவிர, 1962-ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியல்களும் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

# தமிழ்நாட்டின் செல்வக் களஞ்சியம்

இந்தியாவில் உள்ள ஆவணக் காப்பகங்களில் ஒரு தனி இடத்தை வகிக்கும் தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 1909-இல் அமைக்கப்பட்டது. ஆனால், 1805-லிருந்தே அது சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் அறைகலன்கள் வைக்கப்பட்ட ஓர் அறையிலேயே இயங்கி வந்தது. 1968-இல் சென்னை ஆவண அலுவலகம் என்றிருந்த இதன் பெயர் அவ்வப்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டு இறுதியாக 1973-இல் 'தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இக்காப்பகத்தின் மாவட்ட மையங்கள் மதுரை, கோவை, கடலூர், சேலம், திருச்சி ஆகிய மாவட்டங்களில் இயங்கிவருகின்றன.

## பணிகளும் செயல்பாடுகளும்

ஆவணங்களைப் பல்வேறு துறைகளிலிருந்து பெறுவதும் அவற்றைச் சிறந்த முறையில் பாதுகாத்து வைத்து, ஆராய்ச்சியாளருக்கும் நிர்வாகப் பணிகளுக்கும் தேவையான ஆவணங்களை வழங்குவதே இக்காப்பகத்தின் முக்கியப் பணியாகும். இக்காப்பகத்தில் சுமார் 300 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் முதன்மையான ஆவணம் கி.பி. 1670-ஆம் ஆண்டைச் சார்ந்தது. நிர்வாகத் துறை நீதித்துறை உள்ளடங்கிய பல்வேறு துறைகளின் ஆவணங்களும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்து ஆவணங்களும், உள்நாட்டு வெளிநாட்டுப் போர் தொடர்பான ஆவணங்களும் இங்கு சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**சென்னை எழும்பூரில் தொடர்வண்டி நிலையத்திற்கு எதிரேயுள்ள பெரிய சிவப்புக் கட்டடமே தமிழ்நாடு ஆவணக் காப்பகம். ஆங்கிலேய அரசால் விட்டுச் செல்லப்பட்ட முக்கியச் சின்னங்களுள் தமிழ்நாடு ஆவணக் காப்பகமும் ஒன்றாகும். இக்காப்பகம் ஆவணச் செல்வங்களை வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்குவதிலும் தமிழக அரசின் அன்றாட நிர்வாகத் தேவைகளுக்குப் பயன்பட்டு வருவதிலும் முக்கியப் பங்கினை வகிக்கிறது. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தினைத் தமிழ்நாட்டின் 'செல்வக் களஞ்சியம்' என்று சொன்னால், அது மிகையாகாது.**

**ஆவணங்களின் அளவிற்கதிகமான எண்ணிக்கைக் குவிப்பும் அதன் வேகமான வளர்ச்சியும் உலகெங்கும் ஒரு பெரிய சிக்கலை ஏற்படுத்தியது. எனவே, ஆவணங்களைக் கட்டுப்படுத்தவும் அவற்றைச் சிறந்த முறையில் பாதுகாக்கவும் ஆவணக் காப்பகங்கள் இன்றியமையாதனவாக விளங்குகின்றன. இத்தகைய ஆவணக் காப்பகம் இந்தியாவில் முதன் முதலில் சென்னையில்தான் தொடங்கப்பட்டது.**

## ஆவணக் காப்பக நூலகம்

இக்காப்பகத்தில் நூலகம் ஒன்றும் இயங்கி வருகின்றது. இந்நூலகத்தில் 2.5 இலட்சம் அரிய நூல்கள் வைக்கப்பட்டுள்ளன. 150 ஆண்டுகளுக்கு முன் அச்சிடப்பட்ட நூல்களும், மகாத்மா காந்தி, பண்டிதர் நேரு, இராஜாஜி போன்ற பெரும் தலைவர்கள் எழுதிய நூல்களும் சென்னை கூரியர் (Madras Courier) என்னும் முதல் செய்தித்தாளும் (1793) ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பு முதலியவையும் இங்கு பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

## ஆவணப் பாதுகாப்பு முறை

இங்கு ஆவணங்கள் வரிசைக் கிரமமாக அதற்கெனத் தனியாக அமைக்கப்பட்ட அட்டங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. ஆவணங்களில், படியும் தூசியும் அவ்வப்போது 'வாக்குவம் கிளீனர்' மற்றும் கைத்தூரிகைகளைக் கொண்டு அகற்றப்படுகின்றது.

கரையான், புத்தகப் புழு போன்ற பூச்சி வகைகளால் பாதிக்கப்பட்ட ஆவணங்கள், இதற்கென அமைக்கப்பட்டுள்ள 'வாக்குவம்' பொறியியல் இரசாயனப் புகையூட்டி மூலம் அழிக்கப்படுகின்றன. மிகப் பழமையான ஆவணங்கள் மற்றும் தூளாகக் கூடிய நிலையில் உள்ள ஆவணங்கள், அவற்றில் படிந்துள்ள அமிலத் தன்மை முதலில் நீக்கப்பட்டு பின்னர் 'சிப்பான்' என்னும் மெல்லிய பட்டுத் துணியை இருபுறங்களில் ஒட்டி

பழுது பார்க்கப்பட்டு புத்தகங்களாகக் கட்டப்படுகின்றன.

இதுதவிர 'அஸிடேட்பாயில்' மற்றும் 'டிஷ்யூ பேப்பர்' என்ற இருவகைத் தாட்களைப் பயன்படுத்தி, மேலொட்டல் இயந்திரத்தின் மூலமும் ஆவணங்கள் செப்பனிடப்படுகின்றன. மூல ஆவணங்கள் ஒருவேளை அழியக்கூடுமானால், இரண்டாவது மூல ஆவணங்களாகப் பயன்படுத்தவும் ஆராய்ச்சியாளர்களுக்கு மைக்ரோ பிலிம் நகல்கள் வழங்கவும் நுண் நிழற்படக் கருவி மூலம் நகல்கள் எடுக்கப்படுகின்றன.

ஆராய்ச்சியாளர்களுக்குத் தேவையான அனைத்து ஆவணங்களை எளிதில் தேடியெடுக்க அட்டவணைகளும் ஆவண வழிகாட்டிகளும் இக்காப்பகத்தில் உள்ளன. இக்காப்பகம் இதுநாள் வரை நிர்வாகத்தினருக்கும், வரலாற்று ஆராய்ச்சியாளருக்கும் சமுதாயத்தினருக்கும் அரிய பணிகளைப் புரிந்து வருகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை.



ஆவணக் காப்பக ஆய்வுக் கூடம்

## ஆவணக் காப்பகப் பொருட்காட்சி

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 14.2.1992 முதல் 20.2.1992 வரை பொருட்காட்சி ஒன்றை நடத்தியது. இப்பொருட்காட்சியை மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள் 14.2.92 அன்று தொடங்கி வைத்தார்.

இதில் பல்வேறு ஆவணங்கள், படங்கள், அறிக்கைகள், முதலியவை பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. 1680-ஆம் ஆண்டு சென்னை புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள செயிண்ட் மேரிஸ் ஆலயத் திறப்பு பற்றிய குறிப்புகள், ஆவணங்கள், 1736-45-ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் எழுதப்பட்ட ஆனந்தரங்கம் பிள்ளை நாள் குறிப்பு, 1756-ஆம் ஆண்டில் புனித ஜார்ஜ் கோட்டையை ஆங்கிலேயர் கைப்பற்றியதற்கான ஆணைகள், ஆவணங்கள், திருநெல்வேலி, ஆர்க்காடு, மைசூர் சமஸ்தானப் போர் நடவடிக்கைகள் பற்றிய ஆவணங்கள் முதலியவை இடம் பெற்றிருந்தன.




ஆவணக் காப்பக நூலகம்

இவை தவிர, வெளிநாட்டுப் போர் பற்றிய ஆவணங்கள், வெளிநாட்டினர் ஆட்சி முறை பற்றிய வண்ணப் படங்கள், முதலமைச்சர்களின் கடிதங்கள், நீதிமன்ற அறிக்கைகள், சர்.சி.வி. இராமன், டாக்டர் இராமானுஜம் போன்ற விஞ்ஞானிகள், கணித மேதைகள், அண்ணல் காந்தியடிகள், பண்டித நேரு, மூதறிஞர் இராஜாஜி போன்ற தலைவர்கள் எழுதியுள்ள அரும்பெரும் நூல்கள், பிரதாப முதலியார் எழுதிய 'பத்மாவதி சரித்திரம்' என்னும் முதல் நாவல், 'சென்னை கூரியர்' என்னும் முதல் பத்திரிகை, பரதநாட்டியம், பழந்தமிழ்க் கலைகள் பற்றிய நூல்கள், மருத்துவ நூல்கள் முதலியவையும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஆவணங்களைப் பாதுகாக்கும் முறைகள் பற்றிய விளக்கப் புத்தகங்கள், படங்கள், அவற்றிற்குத் தேவையான கருவிகள், இரசாயன மருந்துப் பொருட்கள் முதலியவையும் இப்பொருட்காட்சியில் இடம் பெற்றிருந்தன. இப்பொருட்காட்சி பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ள ஒன்றாக அமைந்திருந்தது. ●

தொகுப்பு: தே. மணி



# ஒருமைப்பாட்டை உணர்த்தும் ஒப்பற்ற பொருட்காட்சி

அன்னை பூமியின் அணிகலன் களாக விளங்குபவை, சுற்றுலாத் தலங்கள்!

அவற்றையெல்லாம் ஒரே இடத்தில் பார்த்தால் எப்படி இருக்கும்?

இந்த அரிய வாய்ப்பினைத் தருகிறது, 18-வது அகில இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி.




சென்னைத் தீவுதிடலில் 6.1.92 முதல் நடைபெற்று வருவதுதான், இந்தப் பொருட்காட்சி.

மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்ற இந்தப் பொருட்காட்சியில் அரசுத்துறை நிறு வனங்கள், தனியார் துறை நிறுவனங்கள் பல பங்கேற்றுள்ளன.

பொருட்காட்சியினுள் நுழைகிறோம். ஆலயம் ஒன்று அழகாய்க் காட்சி தரு கிறது. ஆம். அறநிலையத்துறையின் அந்த அரங்கினுள் சென்று பார்த்தபோது, தமிழகத்துக் கோயில்களின் வண்ணப் படங்கள், கடவுளர் திருவுருவச் சிலைகள், பூசைக்குரிய வெண்கலச் சாமான்கள், மகாமகக்குள மாதிரி ஆகியவை நம்மைக் கவர்கின்றன.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அரங்கில், மாதிரி காற்றாலை, மனிதசக்தி, விசைப்பம்பு, சூரிய அடுப்பு ஆகியவற்றைப் பார்க்கிறோம். மேலும் இவ்வாலையின் பிற பணிகளையும் தெளிவாகத் தெரிந்து கொள்கிறோம்.

தமிழ்நாட்டில் எத்தனைப் போக்கு வரத்துக் கழகங்கள் உள்ளன? அவை, பயணிகளுக்கு ஆற்றிவரும் பயனுள்ள பணிகள் என்னென்ன என்பது பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்கிறோம், இந்த அரங்கில்.

ரிப்பன் கட்டடம் இங்கே எப்படி வந்தது?

அதுதான் விந்தை! சென்னை மாநகராட்சி இயங்கும் அந்த வெள்ளை மாளிகையை அப்படியே இங்கே அமைத் திருக்கிறார்கள்! நுழையும்போதே, 'இது உங்கள் நகரம்' என்கிற வாசகம் நம்மை வரவேற்கிறது.

சாலைப் பராமரிப்பு, பாலங்கள், மழைநீர் வடிகால், பொதுச் சுகாதாரம், மக்கள் தொகைத் திட்டம், குழந்தைகள் நலம், மின்சாரம், தெரு விளக்குகள் முதலான வளர்ச்சிப் பணிகள் விளக்கப் படங்களோடு காட்டப்பட்டுள்ளன.

இரவும் பகலும் இயங்குவது காவல் துறை. சமுதாய வயலில் உள்ள களை களைக் களைவது இத்துறையின் முக்கியப் பணிகள்.

காவல்துறை அரங்கில் நுழைந்ததுமே நம்மை வரவேற்கிறார் ஒரு காவலர், ஒளி வடிவத்தில்!

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்!' என்கிற பாரதியின் திருவாசகத்துக்கு உயிரோவிய மாக விளங்குகிறது இப்பகுதி. வர தட்சிணைக் கொடுமை கண்முன் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

தமிழகக் காவல் பணி அமைப்பு பற்றியும், விபச்சாரத்தால் விளையும் தீவினை குறித்தும் தெரிந்துகொள் கிறோம் இங்கே.

போதை ஏறினால் என்ன தீமைகள் விளையும் என்பதும், சாலை விதி களைக் கடைப்பிடிக்காமல் போனால்









விபத்துக்களை விலைக்கு வாங்கும் நிலையும் தத்ரூபமாகச் சித்திரிக்கப் பட்டிருக்கிறது.

வேதாரண்யம், கோடியக்கரைக் கடற்கரையில் கைப்பற்றப்பட்ட விடுதலைப் புலிகளின் நவீன ஆயுதங்களை இங்கே பார்க்கலாம்.

தீயணைப்புத் துறையின் பணிகளைப் பார்க்கின்றபோது, தீயின் கொடுமைகளும், அதைத் தவிர்க்கும் வகைகளும் விளக்கப்படங்களாக அமைக்கப்பட்டுள்ளன. தீயணைப்புத்துறை மீட்புப் பணிகளின் வகைப்பாடுகளும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது தொழில்துறை. எல்காட், சிட்கோ, சிப்காட், டாமின், டிஐஐசி, டிட்கோ ஆகியவற்றின் வளர்ச்சிப் பணிகளை விளக்குகிறது தொழில்துறை அரங்கம்.

சென்னைத் துறைமுகத்தின் பணிகள் குறித்து, பலப்பலத் தகவல்களைத் தெரிந்து கொள்கிறோம்.

எண்ணூரில் உருவாகும் துணைத் துறைமுகம், திசைகாட்டும் கருவி, மண் வாரும்போது கண்டெடுக்கப்பட்ட புராதனச் செப்புத் தகடு ஆகியவற்றைப் பார்த்து வியக்கிறோம். அத்தோடு, 1876 முதல் 1966 வரை உள்ள துறைமுகத் தோற்றங்களையும் கண்டு மகிழ்கிறோம். விளையாட்டு வளாகத்தின் (Sports Cor.iplex) மாதிரி ஒன்றும் இங்கே காட்சியளிக்கிறது.

கண்ணாய் விளங்கும் கல்வித் துறைக்கு வருகிறோம்.

தமிழக அரசு, கல்வி வளர்ச்சிக்காக ஆற்றி வருகின்ற அரும்பணிகளை, இங்கே உள்ள பட்டியலைப் பார்த்துத்




தெரிந்து கொள்கிறோம். தொடக்கக் கல்வி, பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி, பள்ளிக் கல்வி, சட்டக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி இப்படி, கல்வித்துறையின் பல்வேறு கூறுகளைத் தக்க வகையில் விளக்கியிருப்பது பாராட்டத் தக்கது.

'சேமமுற வாழ்வதற்குச் சிறுசேமிப்பு' என்பதைச் சிறுசேமிப்புத் துறையும், 'உழவே தலை' என்பதை வேளாண்மைத் துறையும் நமக்கு விளக்கிக் காட்டுகின்றன.

செய்தித்துறை - அரசு ஆற்றி வருகின்ற அரிய பணிகளை அறிவிப்பதுதான் இத்துறையின் முக்கிய நோக்கம்.

அரங்கினுள்ளே, மகளிர் நலத் திட்டங்கள் குறித்த தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன. இதேபோலவே, வளரும் தமிழகம் நம் கண்முன் காட்சியளிக்கிறது. 133 அடி உயர திருவள்ளுவர் திருவுருவச் சிலையின் மாதிரி வடிவமும் இங்கே உள்ளது. அரசின் தகவல் அறிவிப்புச் சாதனமாக விளங்கும் 'தமிழரசு' இதழ்களும் இங்கே காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. 'திரைப்பட நகர்' மாதிரியும் நம் மனத்தைக் கவர்கிறது.

வெண்மைப் புரட்சிக்கு வித்திடுவது ஆவின். அதன் பணிகளின் தொகுப்பைப் பார்க்கிறோம்.

சுற்றுலாத்துறை - பொழுதைப் பயனுள்ள வகையில் கழிக்கவும், அதே சமயம் அமைதியாக ஆனந்தக் கடலில் நீந்தவும் சுற்றுலாத் தலங்கள் விளங்குகின்றன. நம் நாட்டில் குறிப்பாக, தமிழ்நாட்டில் சுற்றுலாத் தலங்களுக்குக் குறைவே இல்லை. கண்களுக்குக் குளிர்ச்சியான, மனத்துக்கு இதமான இயற்கைக் காட்சிகள் ஏராளம்.

தமிழகம் என்கிற மகுடத்தில், மாணிக்கங்களாக மாவட்டச் சுற்றுலாத் தலங்கள் விளங்குகின்றன. அவற்றைச் சித்திரிக்கிறது இந்த அரங்கு. தமிழக விழாக்கள், அவற்றைக் காணவரும் சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதிகள், ஆகியவை











குறித்த தகவல்கள் திரட்டித் தரப் பட்டுள்ளன.

கொடைக்கானல், ஒகேனக்கல், குற்றாலம், ஊட்டி முதலான குளிர்ப் பிரதேசங்கள் மற்றும் மாமல்லபுரம், மதுரை நாயக்கர் மகால் கண்முன் காட்டப்படுகின்றன. கண்ணைக் கவரும் ஓவியங்கள் மூலமாக!

'ஒரு இலட்சம் மகளிர்க்கு வேலை வாய்ப்பு' என்கிற மகிழ்ச்சியான அறிவிப் புடன் காட்சி தருவதுதான், சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறைக் காட்சி அரங்கம்.

இங்கே, சேவை இல்லம், ஊனமுற் றோர்க்கு வழங்கியுள்ள சலுகைகள் முதலான தகவல்களை அறிந்து கொள் கிறோம்.

இலவச வீட்டுமனை, தொழிற் கருவிகள் வழங்கும் திட்டம், சமூக நலக் கூடங்கள், மலைவாழ் மக்களின் மாதிரிக் கிராமம், பள்ளிக் கல்விச் சலுகைகள் முதலான சமுதாய நலப் பணிகள் குறித்த தகவல்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நமக்குத் தெளிவாக விளக்குகிறது.

பட்டுப் புடவைகளைப் பார்த்திருக் கிறோம். அவற்றுக்குக் காரணமாக இருக்கும் பட்டுப் புழுக்களைப் பார்த் திருக்கிறோமா? மல்பரிச் செடி இலை களுக்கிடையே, அவை ஒவ்வொரு நிலை யில் வளர்ந்துள்ள விதங்களை நேரில் பார்க்கிறோம். அத்துடன் மல்பரி பயிரிடுதல் குறித்தும் இங்கே விளக்கப் படங்கள் உள்ளன.

மீனவ மகளிர் விரிவாக்கப் பணி, தமிழகத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக விளங்குகிறது.

சென்னை, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., தென்னார்க்காடு, தஞ்சாவூர், புதுக் கோட்டை, இராமநாதபுரம், சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில்




மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன.

- இது போன்ற மீனவர் நல்வாழ்வுத் திட்டங்கள் குறித்த அரசுப் பணிகளை அறிந்து கொள்வது மீன்துறை அரங்கில்!

கோட்டூர்புரம் பாலத்தைப் பார்க்க, நெடுஞ்சாலைத் துறைக்கு வரவேண்டும். ஆம். இதன் மாதிரிப் பாலத்தை இங்கே பார்க்கிறோம்.

மேலும் இங்கே நாம் பார்ப்பது- மத்திய சூடேற்றிய கலவை இயந்திரத் தொகுதி.

பரங்கிமலை இரயில் நிலையம் அருகில் அமையவிருக்கும் வாகனச் சுரங்கப்பாதை.

கோவை கிராஸ்கட் சாலை - மேம்பாலம், காட்பாடி மேம்பாலம், கொள்ளிடம் ஆற்றுப் பாலம் ஆகிய வற்றின் மாதிரிகள் இங்கே காட்சி தருகின்றன.

இப்போது நாம் பொதுப்பணித்துறை அரங்கினுள் நுழைகிறோம்.

காவிரியின் வடிகால் பரப்பு விவ ரங்கள், காவிரி முக்கிய துணை நதிகள், தமிழ்நாட்டில் காவிரியின் பாசனப் பரப்பு, நடைமுறையில் உள்ள பாசனத் திட்டங்கள் முதலானவை அழகிய முறை யில் உருவாக்கப்பட்டுள்ளன.

டான்சியின் திட்டப் பணிகளைப் பார்த்துவிட்டு வரும் நம்மை, சென்னைக் குடிநீர் அரங்கம் வரவேற்கிறது.

'குடிநீரைச் சேமியுங்கள் - வீணாக் காதீர்! 'என்று சொல்லாமல் சொல்கிறது இந்த அரங்கம்.

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் நீர்த் தேக்கங்களான புழலேரி, சோழவரம், பூண்டி ஆகியவற்றின பெரிய அளவுப் படங்கள் காட்சி தருகின்றன. குடிநீர் சுத்திகரிப்பும் தரக்கட்டுப்பாடும் கண்டறி யும் காட்சியும், கிருஷ்ணா நதிநீர்த்

















திட்டம் - நீர் வழிப் பாதையைக் காட்டும் காட்சியும் நம்மைக் கவர்கின்றன.

இங்கே உள்ள சிறு திரையரங்கில், குடிநீர் சேமிப்பதைச் சித்திரிக்கும் படம் காட்டப்படுகிறது.

கால்நடைப் பராமரிப்புத் துறையில் யூரியாமூலம் சத்தூட்டப்பட்ட வைக் கோல், ஆவின இனவிருத்தி, ஒருங் கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு கால்நடைப் பண் ணைகள், பால் உற்பத்திக்குப் பராமரிப்பு முறைகள் ஆகியவை விளக்கப்படுகின்றன.

கோழி, முயல், ஆடு, வெண்பன்றி ஆகியவற்றையும் இங்கே பார்க்கலாம். குஞ்சு பொறிக்கும் கருவியொன்றும் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது.

வனத்துறைக்கு வருவோமா?
'எங்களையும் வாழவிடுங்கள்!'
என்ற வாசகம், விலங்கினங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை நமக்கு உணர்த்துகிறது.




காடுபடு பொருள்களைப் பார்க்கின்ற நம் கண்களுக்கு, விலங்குகளின் வண் ணப் படங்களும் தென்படுகின்றன. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் என்ன செய்கிறது என்பதையும் பார்த்துத் தெரிந்து கொள்கிறோம்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச் சித் துறையில் - குடிசைப் பகுதி மேம் பாட்டுத் திட்டப் பணிகள் குறித்துத் தெரிந்துகொள்கிற நாம், 2011-இல் சென்னை எப்படி இருக்கும் என்பதையும் தெரிந்து கொள்கிறோம்.

மாதவரம் தன்னிறைவுத் திட்டம், புதுநகர் வளர்ச்சித் திட்டம் ஆகிய மாதிரி களைப் பார்க்கின்ற நமக்கு, சென்னை மாநகரின் துரித வளர்ச்சிப் பணிகள் துல்லியமாகத் தெரிகின்றன.

கட்டட விதிமுறை தவறினால் ஏற் படும் விளைவுகளை - நாம் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த அரங்கிலேயே நகர் ஊரமைப் புத் துறைப் பணிகளும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியப் பணிகளும் மக்கள் புரிந்து கொள்ளும் வகையிலே படங்களாகவும், பாடங்களாகவும் வைக்கப்பட்டுள்ளன.

குடும்ப நலம் மற்றும் மக்கள் நல வாழ்வுத்துறை அரங்கினுள்ளே-

அளவான குடும்பத்தின் அவசியம் உணர்த்தப்படுகிறது.

காசநோய்த் தடுப்பு, கொசு ஒழிப்பு பற்றிய தகவல்களும், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையின் பயன்களும் பணிகளும் பார்க்க வேண்டியவை.

மருத்துவக் கல்வி, கிண்டி நோய்த் தடுப்பு நிலையம் ஆகியவை மக்கள் நலப் பணிகளில் எப்படித் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றன என்பதையும் பார்க்கிறோம்.

'கூட்டுறவே நாட்டுறவு' என்பது செயல் அளவில் காட்டப்படுகிறது இங்கே!

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் பெறப்படுகின்ற பயன்கள் ஒரு புறம், சாண எரிவாயு, புகையில்லா அடுப்பு ஆகியவற்றின் உபயோகம் ஒரு புறம் நம்மைக் கவர்கின்றன. இதேபோல, டோக்ரா திட்டம் - ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டத்தினால் விளையும் நன்மைகள் குறித்து விளக்கப்படுகிறது.

தொழிலாளர் நலன்களுக்கு உதவிக் கரமாக இருக்கும் தொழிலாளர் நலத் துறை, சித்திரக் கைத்தறித் துணிகளைத் தயாரிக்கும் கோ-ஆப்டெக்ஸ், ஆகியவற்றைப் பார்த்துக் கொண்டே போகிறோம்.

இடையிடையே தனியார் வைத்துள்ள பல்வகை அங்காடிகளையும் பிற மாநில காட்சி அரங்குகளையும் பார்க்கத் தவறுவதில்லை நம் கண்கள்.



கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தூட்டும் காட்சிகள் அமைந்த இந்தப் பொருட்காட்சியில், வயிற்றுக்கு விருந்தூட்ட இருக்கவே இருக்கிறது ஓட்டல் தமிழ்நாடு.

இந்தப் பொருட்காட்சி நடத்துவதன் மூலம் ஏறத்தாழ 20 ஆயிரம் பேர் தற்காலிக வேலைவாய்ப்பும், சுமார் இரண்டாயிரம் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறுவதற்கான வாய்ப்பும் அமைகின்றன.

பொருட்காட்சியில் மிகப்பழமையான ஊர்திகளின் கண்காட்சி, எல்லார் மனத்தையும் கவர்ந்தது. இதேபோல, ஆடை அலங்காரம், உணவு, பொம்மை, தோட்டக்கலை, புத்தகங்கள், நாய், கோலம் ஆகிய கண்காட்சிகளும் நடந்தன.

வருவாய்த் துறைக்கு வருவோமா?

சென்னை மாவட்டம் அன்றும்-இன்றும், காட்சியைக் கண்டு வியக்கிறோம். இதேபோல, பிற மாவட்டங்கள் குறித்தும், வளர்ச்சிப் பணிகள் குறித்தும் விளக்கப்படுகின்றன.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, பெரியார் அறிவியல் தொழில்மையம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவை ஆற்றி வருகின்ற பணிகள், எதிர்காலத் திட்டங்கள் முதலான பயனுள்ள தகவல்களைத் தெரிந்து கொள்கிறோம்.

ஒரே இடத்தில் உள்ளூர்ச் செய்திகளை மட்டுமல்ல, உலகச் செய்திகளை மட்டுமல்ல, உபயோகமான உண்மைச் செய்திகளையெல்லாம் நாம் தெரிந்து கொள்ள இந்தப் பொருட்காட்சி உதவுகிறது. அதுமட்டுமல்ல அரசு ஆற்றி வருகின்ற அரும்பணிகளை அறிய முடிகிறது. அதேசமயம் பல மாநிலத்தவரும் பங்கும் கொள்ளும் ஒருமைப்பாட்டுத் தலமாகவும் இது விளங்குகிறது.

இதை, பல்வேறு மாநிலங்களில் உள்ள புகழ்வாய்ந்த கோயில் படங்களும், கலாச்சாரங்களும் விளக்கும் படங்களும் நுழைவாயில் சித்திரிக்கப்பட்டிருப்பதிலிருந்தே நாம் உணர்ந்து கொள்ளலாம்.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பார்த்துப் பரவசங் கொள்ளும் வகையிலே பொழுதுபோக்கு அம்சங்களும் இணைந்திருக்கின்றன. அண்ணா கலையரங்கிலே நாள்தோறும் கலை நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், மினி இரயில் வண்டி, மின் இராட்டினம், மீன்காட்சியகம், வேடிக்கை விநோதக் காட்சிகள் அப்பப்பா! எத்தனை! எத்தனை!

இந்தப் பொருட்காட்சி, வரும் ஏப்ரல் திங்கள் வரை நடைபெறுகின்றது. பார்த்து மகிழலாமே!

- பி.வி. கிரி.














# தமிழ்நாட்டில் பாய்மர மிதவைப் பலகைப் போட்டி



'விண்ட் சர்ஃபிங்' (Wind Surfing) ஒரு பிரபலமான நீர் விளையாட்டுப் போட்டியாக இந்தியாவில் வளர்ந்து வருகிறது. 1970-ஆம் ஆண்டு ஒரு பொழுதுபோக்கு விளையாட்டாகத் தொடங்கிய இந்த விளையாட்டுப் போட்டி, போட்டியாளர்கள் ஆர்வத்தினால் வளர்ந்து 1984-இல் இருந்து ஒலிம்பிக் போட்டிகளில் இதுவும் ஒரு போட்டியாக ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த விண்ட் சர்ஃபிங் போட்டி, 1983-இல் சென்னையில், சென்னைத் துறைமுகத் துறையின் நூற்றாண்டு விழாவின்போது நடத்தப்பட்டது. அதன்பிறகு 9 ஆண்டுகள் கழித்து மீண்டும் இந்த ஆண்டு இந்தப் போட்டி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சுற்றுலாத்துறை, இந்திய அரசு சுற்றுலாத்துறை, ரிக்கி டிக்கி டாவி எனும் விளையாட்டுக் கழகம், ஆகியவை இணைந்து நடத்துகின்றன. இந்தப் போட்டி சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் உதவியோடு 'சர் பேஸ் - 92' என்ற பெயரில் நடைபெற்றன.

போட்டி நடத்துவதற்கு வி.ஜி.பி. தங்கக் கடற்கரையினர், ஃபிசர்மென் கோவ், ரெசிடென்சி, அம்பாசடர் பல்லவா, கோல்டன்சன், பிரசிடண்ட் மற்றும் மாமல்ல பவன் ஆகிய ஓட்டல்களும், தம்ஸ் அப் நிறுவனமும் உதவி இருக்கின்றன.

இந்தப் போட்டிகளில் 30 புகழ் பெற்ற இந்தியா மற்றும் வெளி நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர். இந்தப் போட்டிகள் பிப்ரவரி மாதம் 13-ஆம் தேதி முதல் 15-ஆம் தேதி வரை நடைபெற்றன.

போட்டிகளில் கலந்து கொள்வதற்காக சுற்றுலாத்துறை, சுவீடனிலிருந்து செல்வி கிறிஸ்டினா நெல்சன் என்பவரை வரவழைத்திருந்தது. இவர் தமிழகத்தில் இந்தப் போட்டி வளர்வதற்காக உதவி செய்கிறார்.

இந்தப் போட்டி, இராயபுரம் கடற்கரை மற்றும் சென்னைத் துறைமுகம், முட்டுக்காடு படகுத்துறை ஆகிய இடங்களில் நடைபெற்றது. போட்டிகள் நடைபெறும்போது, கோர்ஸ் ரேசிங், மாரத்தான் (துறைமுகம் முதல் லைட் ஹவுஸ் வரை) ஸ்லாலாம், பாயிண்ட்டு பாயிண்ட், ஸ்கொர்பிங், சர்பிங், பூசி போர்டிங் போன்ற போட்டிகள் நடைபெற்றன. போட்டியையொட்டி, கடல் உணவு விழா ஒன்றும் நடத்தப்பட்டது. ஆண்டுதோறும் இந்தப் போட்டிகளை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தப் போட்டிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த, செய்தி சுற்றுலாத் துறைச் செயலர், திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள், ரிக்கி டிக்கி டாவி கழகத்தினரை நான்கு நாட்கள், முட்டுக்காட்டில் பயிற்சி முகாம் ஒன்றை நடத்தக் கேட்டுக் கொண்டார். இந்தப் பயிற்சிகளை சுவீடனைச் சேர்ந்த வீராங்கனையொருவர் அளித்தார்.

தமிழகச் சுற்றுலாத்துறைக் கழக நிருவாக இயக்குநர் திரு. பி. செல்வம், இ.ஆ.ப., மற்றும் தமிழகச் சுற்றுலாத்துறை இயக்குநர் திரு. மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., ரிக்கி டிக்கி டாவி கழகத்தின் தலைவர் திரு. திபாங்கர் கோஸ் ஆகியோரின் ஒத்துழைப்புடன், வீரம் சார்ந்த சுற்றுலா ஆர்வத்தை வளர்ப்பதற்காகத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

சென்னைத் துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் திரு. பால்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் இந்தப் போட்டிகளைத் தொடங்கி வைத்தார். பள்ளி

களிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் மாணவ, மாணவியர்கள் அழைக்கப் பட்டிருந்தனர்.

முதலாவது அகில இந்திய விண்ட் சர்ஃபிங் போட்டி (பாய்மர மிதவைப் பலகைப் போட்டி) சென்னையில் 13.2.1992 அன்று துவங்கியது.

கடல் அலைகளில் காற்றின் வேகத்திற்கு ஏற்ப சிறு படகைச் செலுத்துவதை விண்ட் சர்ஃபிங் விளையாட்டு என்பர். இது பாய்மர மிதவைப் பலகை விளையாட்டு எனவும் அழைக்கப்படுகிறது. கடந்த 1969-ஆம் ஆண்டு பொழுதுபோக்காகத் தொடங்கிய இவ்விளையாட்டு, நன்கு வளர்ச்சியடைந்து 1984-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் அறிமுகப்படுத்தப்பட்டது. உலகம் முழுவதும் 20 இலட்சம் பேர் இவ் விளையாட்டில் ஆர்வமாக ஈடுபட்டு உள்ளனர்.

இந்தியாவிலும் இவ்விளையாட்டுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. 1983-ஆம் ஆண்டு, சென்னைத் துறைமுக நூற்றாண்டு விழாவின் போது, விண்ட் சர்ஃபிங் போட்டி நடத்தப்பட்டது.

• சென்னைத் துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் திரு. பால்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்துப் போட்டியைத் துவக்கி வைத்தார். முன்னதாகத் தமிழகச் சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு. செல்வம், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார் செய்திசுற்றுலாத்துறைத் செயலாளர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். இறுதியில் சுற்றுலாத்துறை இயக்குநர் திரு. மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

போட்டியில் வெளிநாட்டைச் சேர்ந்த 15 வீரர்கள், வீராங்கனைகள் உட்பட மொத்தம் 32 பேர் கலந்து கொள்கின்றனர். இவர்களில் சுவீடனைச் சேர்ந்த கிறிஸ்டினா நெல்சன், இந்தியக் கடற்படையைச் சேர்ந்த அதுல் மாத்தூர், லெப்டினன்ட் கமாண்டர் சந்தானம், தேசியப் பெண்கள் சாம்பியன் பட்டம் பெற்ற மகாராஷ்டிராவைச் சேர்ந்த கீதா, சமீர், சுவீடனைச் சேர்ந்த யாஸ்பா, இலட்சத்தீவுகளில் இருந்து கோழிக்கோடு வரை பாய்மர மிதவைப் பலகையில் சென்று சாதனை படைத்த ராகுல் ரஸ்தோகி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ்நாடு சுற்றுலாத்துறை மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் அகில இந்திய நீர்ச் சறுக்குப் படகுப் போட்டியின் நிறைவு விழா 15.2.92 அன்று கோவளத்தில் நடந்தது. விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது:-

'சுற்றுலா வளர்ச்சித்துறை நீர்ச் சறுக்குப் படகுப் போட்டியைச் சிறப்பாக நடத்தி இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கப் பலவேறு புதிய திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறார்கள். வளைகுடா போருக்குப் பிறகு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்குத் தமிழ்நாடு சிறந்த சுற்றுலாத் தலமாகத் திகழ்கிறது. தமிழ்நாடும், கேரளாவும், தான் சுற்றுலாத் துறையில் வளர்ந்து வருகின்றன.

முட்டுக்காடு படகுத்துறையை ஆழப்படுத்த வேண்டும் என்று இங்குள்ளவர்கள் கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களிடம் எடுத்துக் கூறி கோரிக்கையை நிறைவேற்ற நான் பாடுபடுவேன். நீர்ச்சறுக்குப் படகுப் போட்டியில் இளைஞர்கள் வருகிற ஆண்டு அதிக அளவில் பங்குபெற வேண்டும். அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும். வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. சுற்றுலாத்துறை பல்வேறு நிலைகளில் சிறப்பைப் பெற்று வளர்ந்துள்ளது. அது மேன் மேலும் சிறந்த இடத்தைப் பெறும்.'

நீர்ச்சறுக்குப் படகுப் போட்டிகளில் வெற்றி பெற்ற ஐதராபாத்தைச் சேர்ந்த ராகுல் ரஸ்தோகி, சுவீடனைச் சேர்ந்த கிறிஸ்டினா நெல்சன், பம்பாயைச் சேர்ந்த மந்தீப்தில்லான், சென்னையைச் சேர்ந்த அருண்வாசு ஆகியோருக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேடயமும், சான்றிதழும் வழங்கிப் பாராட்டினார்.

முன்னதாகத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு. ப. செல்வம், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். ரிக்கி டிக்கி டாவி கிளப் இயக்குநர் திபாங்கர் கோஷ் வரவேற்றுப் பேசினார்●

## அட்டைப்பட விளக்கம்

**முதல் அட்டை:**

44-வது அகவையில் அடியெடுத்து வைக்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் (24.2.1992).

**இரண்டாம் அட்டை:**

டெல்லியில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற காவிரிப் பிரச்சினை தொடர்பான கூட்டத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் (17.2.1992).

**நான்காம் அட்டை:**

கும்பகோணம் மகாமகத் திருவிழாவினையொட்டி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்பு அஞ்சல் தலையையும், சிறப்பு மலரையும் வெளியிட்டு, 10 இலட்சம் பேருக்கு உணவுப் பொட்டலங்களையும் வழங்கினார் (18.2.1992).

# பொது மன்னிப்பு

# விடுதலை!

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் புதிய அரசு அமைக்கப்பட்டு, நல்லாட்சி நடைபெற்று வருவதை வரவேற்று, அதனால் ஏற்படுகின்ற மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் விதத்தில் ஆயுள்தண்டனை பெற்ற சிறைவாசிகள் நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்ததைக் கருத்தில்கொண்டு, தங்களுக்குக் கருணை காட்டி தண்டனைக் குறைப்பு வழங்கிப் பொதுமன்னிப்பு அடிப்படையில் தங்களை முன் விடுதலை செய்யுமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

சிறைவாசிகளும் திருந்தி மறுவாழ்வு பெற வேண்டும் என்பதில் ஆர்வமும், அக்கறையும் கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - சிறைவாசிகளுடைய அக்கோரிக்கையை மனிதாபிமானத்தோடு ஆய்வு செய்யுமாறு ஆணையிட்டார்கள். அதற்கேற்ப, 18.12.1978-க்கு முன்பு ஆயுள்தண்டனை அடைந்த சிறைவாசிகளில், கொள்ளை மற்றும் பணத்திற்காகக் கொலை, கற்பழித்தல் போன்ற கடுமையான குற்றவாளிகளைத் தவிர்த்த மற்ற அனைவரையும் விடுதலை செய்யவும் அவ்வாறே 18.12.1978 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆயுள்தண்டனை பெற்ற, 12 ஆண்டுகள் முழுமையாகச் சிறைத்தண்டனை அனுபவித்த ஆயுள் சிறைவாசிகளையும் மன்னித்து முன் விடுதலை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

# நந்தனம் - ஜோதி தோட்டம் மற்றும் சைதாப்பேட்டை வி.எஸ். முதலி குடியிருப்புகளுக்கு உடனடி குடிநீர் விநியோகம்:

ஆளுநர் மாளிகைக்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் புதிய அமைச்சரின் பதவி பிரமாண விழாவிற்குப் புறப்பட்டுச் செல்லுகையில், போயஸ் தோட்டப் பகுதி முகப்பில் நின்று கொண்டிருந்த பெண்களிடம் உள்ள விண்ணப் பங்களைப் பெற்றுவரச் செய்து, அவர்களின் குறைகளைத் தெரிந்து அந்தப் பகுதியின் குடிநீர்ப் பிரச்சினையை அன்றைய தினமே (15.2.1992) தீர்த்து வைக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

நந்தனம் ஜோதி தோட்டம் மற்றும் சைதாப் பேட்டை வி.எஸ். முதலி தெருவில் வசிக்கும் பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர் கிடைப்ப தில்லை எனவும், குழாயில் விடப்படுகின்ற தண்ணீர் திருடப்பட்டு, தனியார் ஓட்டல்களுக்கு வழங்கப்படுகிறது எனவும் கூறப்பட்ட குற்றச் சாட்டுகளின்மீது உடனடி நடவடிக்கை எடுக்க மாண்புமிகு முதல்வர் அலுவலர்களுக்கு உத்தரவு இட்டவுடன், அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு உடனடியாக லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப் பட்டது. மேலும் அப்பகுதியில் பதிக்கப்பட்டிருந்த பழுதடைந்த குழாய்களையும் உடன் மாற்றி அமைக்கும் பணியும் அன்றே தொடங்கப்பட்டது. கோரிக்கை மனு பெறப்பட்ட 3 மணி நேரத்திற் குள் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு மேற்கண்ட பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது.

18.12.1978-க்குப் பின்னர், ஆயுள்தண்டனை பெற்று பத்தாண்டுக் காலம் முழுமையாகச் சிறைத்தண்டனை அனுபவித்த பெண் கைதிகளையும் மன்னித்து முன் விடுதலை செய்யவும் ஆணையிடப்பட்டிருந்தது.

மேலும் கொலை, களவு, கள்ளக்கடத்தல் போன்ற குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றவர்களைத் தவிர்த்து, ஏனைய குற்றங்களுக்காகச் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் பெண் கைதிகளுக்கு முழுத் தண்டனைக் குறைப்பும், ஆண் கைதிகளுக்கு 6 மாதச் சிறைத்தண்டனைக் குறைப்பும் வழங்குமாறும் ஆணையிடப்பட்டிருந்தது.

இதனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாளான 24.2.1992 அன்று 209 ஆயுள்தண்டனை பெற்ற கைதிகள் விடுதலை ஆனார்கள்.

ஆயுள்தண்டனை தவிர்த்து மற்ற தண்டனை பெற்றுள்ள 33 பெண் கைதிகளும் அந்நாளில் விடுதலை ஆனார்கள். ஆயுள்தண்டனை தவிர்த்து, மற்ற தண்டனை பெற்றுள்ள 713 ஆண் கைதிகளுக்குத் தண்டனைக் குறைப்பும் வழங்கப்படும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 563927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ - ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

பதிவு எண். M 8676
Licence No. TN/MS(C)/PP-23





